அனுதினம் ஆண்டவரோடு

பாகம் 7

C. O. ரோசேனியஸ்

Day by day with God

(Tamil)

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

அனுதினம் ஆண்டவரோடு

தினசரி தியானச் செய்திகள்

பாகம் 7

C. O. ரோசேனியஸ்

தமிழாக்கம்
D. S. ஸ்பர்ஜன்

E. PAULINESAN PERSONAL LIBRARY No. Dt.

லைட் ஆப் ஹோப் மிஷன்
357 - B, கிரீன் தெரு,
நாகர்கோவில் - 629001,
தென் இந்தியா.

பதிப்புரை

C. O. ரோசேனியஸால் ஸ்வீடிஷ் மொழியில் எழுதப்பட்டதும் குமாரி மேய் லெண் ஹென்ரிக்ஸனால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டதுமான 'அனுதினம் ஆண்டவரோடு, என்ற புத்தகம் என் கையில் கிடைத்ததும் அதைப் படித்து அதில் அடங்கியுள்ள ஆழமான கருத்துக்களைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். இப்புத்தகத்தைத் தமிழில் பிரசுரிப்பதால் ஆங்கிலம் புரியாத தமிழ் அன்பர்கள் பயனடைவார்கள் என்னும் நல்லெண்ணத்தில் இம்முயற்சியை மேற்கொண்டேன்.

இப்புத்தகம் ஒரு மாதத்திற்கான தியானச் செய்திகளைக் கொண்டுள்ளது. இதுபோன்று இன்னும் பதினொரு பாகங்கள் அச்சிடப்பட்டுள்ளன.

இந்தப் புத்தகத்தை வாசிக்கும் ஒவ்வொருவர் மேலும் ஆண்டவர் அருள்பொழிய ஆசித்துக் கொண்டு இப்புத்தகத்தை வெளியிடுகிறோம்.

D. S. S.

First print : September 1985 (Copies : 5000)
Second print : December 1995 (Copies : 2000)
NOT FOR SALE

முன்னுரை

ஸ்வீடன் நாட்டின் வடபாகததிலுள்ள வாஸ்டர் பாட்டன் என்னுமிடத்தில் பிறந்த கார்ல் ஓலாஃப் ரோசேனியஸ் என்பவர் (1816-1868) குருப்பட்டம் பெருத ஊழியக்காரனுகவும், கிறிஸ்தவ எழுத்தாளனுகவும் திகழ்ந்ததோடு, அந்நாட்டிலுள்ள சிறந்த கிறிஸ்தவர்களுள் ஒருவராகவும் கருதப்பட்டார். அன்னர் ஸ்டாக்ஹோம் பட்டணத்திலுள்ள பெத்லகேம் தேவாலயத்தில் 1855 முதல் 1868 வரைப் பணியாற்றினர்.

1726-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டப்படி (Conventicle Chart) குடும்ப ஜெபம்தவிர மற்றெல்லா தனிப்பட்ட ஜெபக்கூட்டங்களும் தடை செய்யப்பட்டன. இக்காலத்தில் வாசகர்கள் (Readers) என்றழைக்கப்பட்ட ஒருகுழுவினர் எழும்பினர்கள். ரோசேனியஸின் தந்தை ஒரு குருவானவராயிருந்தபோதிலும் அவரும் ஒரு வாசகராகச் செயலாற்றினர். குடும்ப ஜெபம் நடக்குமிடங்களில் இந்த வாசகர்கள் சென்று வேத புத்தகம், லூத்தரின் விளக்கவுரை போன்ற புத்தகங்களை வாசித்து உதவினர். இத்தகைய பணியின்முலமாகவே ரோசேனியஸ் வேதபுத்தக அறிவும் தெளிவான உபதேசமும் பெற ஏதுவாயிற்று.

உப்சலா பட்டணத்தில குருப்பட்டப் படிப்பிற்காகச் சென்ற ரோசேனியஸ் தன்னுடைய கல்விப் பாட ஒழுங்கில் இறையியல் தவிர மற்றுத் துறைப் பாடங்களும் அதிகமாக இடம் பெற்றிருக்கிறதைக் கண்டார். மற்றப் பாடங்களில் அதிக விருப்பம் கொள்ளாத அவர் அக்கல்வியை வெறுத்து, குருப்பட்டம் பெருது ஊழியம் செய்ய தீர்மானித்தார். அவர் ஊழியத்தில் அதிக உபத்திரவம் அனுபவித்தார். சிலுவையைக் கற்பிக்கும் கிறிஸ்தவமாகிய

பள்ளியில் நான்கு வகுப்புகளேயுண்டு; முதலாவதாக நான் உபத்திரவம் அனுபவித்தேயாகும் என்றுகூறுவதும், இரண்டாவதாக உபத்திரவத்தை நான் விரும்புகிறேன் என்று கூறுவதும், மூன்றாவதாக என்னால் உபத்திரவத்தைச் சகிக்கமுடியும் என்று கூறுவதும், நான்காவதாக உபத்திரவத்தை ஒருவேளை நான் சகிக்கலாம் என்று கூறுவதும் நாம் இந்த வகுப்புகளில் கற்றுக்கொள்ளும் பாடங்களாகும் என்று அவர் எழுதியுள்ளார்.

ஸ்வீடன் நாட்டில் சிறந்த மார்க்க எழுப்புதலுக்கு ஆதாரமாக ஆண்டவர் இந்த ஊழியக்காரனுடைய போதகத்தையும், பிரசுரத்தையும் பயன் படுத்தினார்.

இலக்கிய வினியோகமே நற்செய்திப் பிரச்சாரத்திற்கு மிகவும் முக்கியமான மார்க்கம் என்று ரோசேனியஸ் கருதினார். மேலும் இந்த ஊழியத்தை எல்லாரும் தங்கள் தொழிலோடு கொண்டு நிறைவேற்றமுடியும் என்பதும் அவர் கொள்கை. எனவே, **Evangeliska Fosterandsstiftelsen** என்ற நிறுவனம் அச்சுக்கூடமாக விரிவடைந்து வெகுவிரைவில் வேதபுத்தகம், புதிய ஏற்பாடு என்பவைகளின் பிரதிகளை இருபது இலட்சத்திற்கதிகமாக வெளியிட்டது. மேலும், மார்ட்டின் லுத்தரின் புத்தகங்களிலும், பன்னிரண்டுக்கு அதிகமான மொழிபெயர்க்கப்பட்ட ரோசேனியஸின் இலக்கியங்களிலும் இலட்சக்கணக்கான பிரதிகள் அச்சிடப்பட்டன.

தேவனுடைய கிருபை நமக்கு இரட்சிப்பளிப்பது மாத்திரமல்ல, நம்முடைய வாழ்க்கையில் அது கிரியை செய்து நியாயப்பிரமாணத்திற்குக் கீழிருந்து செயல் படுகிறதைவிட மிகவும் சிறந்த முறையில் நாம் தேவனைச் சேவிக்கத்தக்கதாக உதவுகிற மகத்துவத்தையே அவர் தன்னுடைய எழுத்துகளில் அழுத்திக் கூறியுள்ளார்.

—·—

1. **இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் நாம் தேவனைப்பற்றியும் மேன்மைபாராட்டுகிறோம்.**

ரோம. 5:11.

நித்தியமான ஊற்றும், நிலைவரமான துரவுமான தேவனிடத்திலிருந்து நாம் அனுபவிக்கக் கூடிய ஆசீர்வாதங்களைக் குறித்து பவுல் இங்கு சுருக்கமாகக் கூறுகிறார். தேவனே நம்முடைய நண்பரும் பிதாவுமாயிருக்கிறார். ஆகலே எல்லாப் பாதுகாவலும் பரம ஈவுகளும் அவரிடமிருந்து நாம் பெற்றுக்கொள்ளுகிறோம். எனினும் தேவனிடமிருந்து நாம் பெற்றுக்கொள்ளுகிற எல்லா ஈவுகளைக் காட்டிலும் தேவன் சிறந்தவர் என்பதை முதலாவது நாம் அறிந்துகொள்ளவேண்டும். பரலோகத்தின் நித்திய பேரானந்தத்தைக் காட்டிலும் தேவனோடுள்ள நட்பு சிறந்தது. அவரே பரலோகத்தில் ஒளியும் இன்பமுமாயிருக்கிறார். எனவே விசுவாசிகளின் ஆனந்தத்திற்குரிய உண்மையான பிறப்பிடம் தேவனோடுள்ள நட்பே.

எல்லா ஈவுகளும் தேவனுக்குள் அடங்கியிருக்கின்றன என்பதுவே இரண்டாவது கருத்தாகும். அவருக்குள்ளேயே நம்முடைய நீதியும் பலமும், அவருக்குள்ளேயே நம்முடைய சமாதானமும் ஆறுதலும். தேவன் நம்முடைய பிதா. பிள்ளைகளுடைய சுதந்தரமும் பாதுகாவலும் தகப்பனுக்குள்ளேயே அடங்கியிருக்கின்றன. நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே (ரோம. 8.17). தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடேகூட

மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்ப தெப்படி? (ரோம. 8:32). எனவே மகாப் பெரிய சர்வவல்லவராகிய ஆண்டவருடைய நட்பு நமக்கிருப்பதினால் நாம் எப்போதும் மகிழ்ச்சியாயிருக்க முடியும். உலகத்தின் தரித்திரரும் அவருக்குள் தனவந்தரே. இவ்வுலகில் தாழ்த்தப்பட்டு புறக்கணிக்கப்பட்டவர்களும் அவருக்குள் உன்னதமானவர்களே. தனித்து கைவிடப்பட்டவர்களும் மிகவும் மகிமையுள்ள கூட்டாளியைக் கொண்டவர்களே. இவ்வாறாக தாவீது போன்ற பக்தர்களும் தேவனுக்குள்ளேயே தங்கள் ஆறுதலையும் மகிமையையும் அனுபவித்து மகிழ்ச்சியடைந்தார்கள். கர்த்தருக்குள் என் ஆத்துமா மேன்மை பாராட்டும் (சங். 34:2). தினந்தோறும் நாம் ஆண்டவருக்குள் மேன்மை பாராட்டவேண்டும். ஏனெனில் அவரே நமக்கு எல்லாவற்றிற்கும் போதுமானவர். அதையே நம்முடைய இருதயம் எதிரொலிக்க வேண்டும். கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகருமானவர். தேவன் நான் நம்பியிருக்கிற துருகமும், என் கேடகமும், என் இரட்சண்ணியக் கொம்பும், என் உயர்ந்த அடைக்கலமும், என் புகலிடமும், என் இரட்சகருமானவர் (2 சாமு. 22:2,3). நீதிமான்களாக்கப்பட்ட ஒவ்வொருவரும் தேவனைக் குறித்து இவ்வாறு அறிந்தவர்களாய் அவருக்குள் மேன்மைபாராட்டுவார்கள். இஸ்ரவேலின் சந்ததியாகிய யாவரும் கர்த்தருக்குள் நீதிமான்களாக்கப்பட்டு மேன்மைபாராட்டுவார்கள் (ஏசா. 45:25).

ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து (ரோம. 5:11) மூலமாகவும் அவருடைய பிராயச்சித்தப் பலியினாலுமே நமக்கு கிருபையும் இரட்சிப்பும் மகிமையும் கிடைக்கின்றனவென்று அப்போஸ்தலன் அடிக

கடி கூறுகின்ருர். இதை நாமும் எப்போதும் மன தில் கொள்ளவேண்டியது மிகவும் தேவையானது. இந்த உண்மையிலிருந்து நம்முடைய பார்வையை அகற்றி, நமக்கு நேராக நாம் நோக்குவோமேயா ஞல் தேவனைக் குறித்தும், அவருடைய நட்பைக் குறித்தும், நித்திய பேரானந்தத்தைக் குறித்தும் நாம் மேன்மைபாராட்டும் சிலாக்கியத்தை இழந்து போவோம். அந்நிலையில் நம்முடைய பாவமும் அபாத்திரத் தன்மையும் நம்முன்னே தோன்றி நம் முடைய இருதயங்களை இளைக்கப்பண்ணும். நம்மு டைய சந்தோஷமும் தேவனுக்குள்ளான மகிமை யும் குன்றிப்போம். எனவே தேவனும் அவருக்கு ரியவைகளும் நமக்குச் சொந்தம் என்னும் உரிமை கிறிஸ்துவின் பிராயச்சித்தத்திஞலேயே உண்டாயி ருக்கிறது நம்முடைய நன்மையோ தகுதியோ அதற்குக் காரணமல்ல. நாம் பாவிகளும், தேவனற் வர்களும், தேவனுக்குச் சத்துருக்களுமாயிருக்கை யில் தேவன் நமக்காகத் தம்முடைய குமாரனைக் கொடுத்த அன்பின் அடிப்படையிலேயே நம்மு டைய மேன்மைபாராட்டுதல் அடங்கியிருக்கிறது

தேவன் நம்மைத் தம்முடைய பிள்ளைகளாகவும் சுதந்தரராகவும் படைத்ததோடு, நாம் பாவிகளும் பகைஞருமாயிருக்கையில் தம்முடைய குமாரனை நம்முடைய இரட்சகராகக் கொடுத்ததினிமித்தம் அவருடைய மரணத்திஞலே தேவனேடு ஒப்புர வாக்கப்பட்டோம் (ரோம. 5:10) என்பதைச் சிந் தித்துப் பார்க்கவேண்டும். ஏழைப்பாவிகளின் ஆறு தலுக்கு இது ஒரு நித்தியமான ஆதாரம். நாம் தடு மறி விழுந்தாலும் இந்த ஆதாரம் விழாமல் என் றைக்கும் நிலையாயும் நிரந்தரமாயும் நிற்கிறது. தேவன் நமக்குப் பெருங்காரியங்களைச் செய்திருக்கி ருர். அவருடைய பகைவர்களாகிய நம்மை அவ ருடைய நண்பர்களாக மாற்றியிருக்கிருர். இவ்வா

றிருக்க அவர் நமக்குச் செய்ய விரும்பாத ஏதாகி லும் இருக்குமோ? அவரே நமக்குப் பிராயச்சித்தம் செய்திருக்க, தம்மோடு ஒப்புரவாகாதவர்களைப் போல நம்மை அவர் நடத்தமுடியுமோ? கூடாதே. அவர் நம்முடையப் பாவங்களைப் பார்க்கமாட் டார்; நியாயப் பிரமாணத்தின்படி நியாயந்தீர்க்க மாட்டார். எப்போதும் நமக்கு நேராக அன்பும் இரக்கமும் பாராட்டி பரமானந்தத்துக்கு நேராக வழி நடத்துவார். அதற்காகவே அவர் நம்மைப் படைத்தார்; அதற்காகவே அவர் அரிய விலை கொடுத்து நம்மை மீட்டுக்கொண்டார்.

நாம் எப்போதும் தேவனுக்குள் மேன்மை பாராட்டவேண்டியது தேவை. அதாவது அவரை நாம் எப்போதும் உண்மையாகவும் இருதய பூர்வ மாகவும் விசுவாசிக்கவேண்டும். ஒரு விசுவாசியின் ஆவிக்குரிய வாழ்க்கை அவருக்குள்ளேயே அமைந் திருக்கிறது. ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப் பண்ணினவர் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்பதை நாம் எப்போதும் பற்றிக் கொள்ளவேண்டும். குறிப்பாக நம்முடைய இருத யம் குளிர்ந்து தேவனைவிட்டு அகன்று போகும் போது இந்த எண்ணத்தை நாம் மனதில் கொள்ள வேண்டும். பாடுகள் நமக்கு நேரிடும்போது நாம் ஜெபிக்க முற்படுகிறோம். அப்போது தேவன் கேளாதவர்போல் மௌனமாயிருக்கிறார். அவர் நமக்காகக் கவலைப்படுகிறதில்லை; நம்மைக் காண் கிறதில்லை, நம்முடைய ஜெபத்தைக் கேட்கிறதில்லை யென எண்ணுகிறோம். இது தேவனைக்குறித்த தவ றான சித்திரம் என்பதை உணரவேண்டும். அவிசுவா சம் நிறைந்த நம்முடைய இருதயத்தின் குளிர்ந்த நிலையினாலும், பிசாசினுடைய ஏவுதலினாலுமே இந்த எண்ணம் உருவாகிறது. ஆனால் தேவனோ தம் மைக்குறித்த தெளிவான சித்திரத்தை நமக்குக் கந்

பித்திருக்கிருர். நித்தியமானதும் அளவிடமுடியாததுமான அன்பு அவரே. அவருடைய அன்பினிமித்தமே அவர் தம்முடைய அருமைக் குமாரனை நமக்குத் தந்தருளினார். அவரை விசுவாசிப்பவர்களை அவர் எப்போதும் உண்மையாக நேசிக்கிருர். கிருபையுள்ள பிதாவாக நமக்கு மிகவும் அருகாமையிலிருந்து நம்முடைய தேவைகளையும் கவலைகளையும் எப்போதும் காண்கிருர். சிலவேளை அவர் தம்மை மறைத்துக்கொண்டாலும், அல்லது நமக்கு உதவுவதில் தாமதித்தாலும் நமக்கு நன்மை செய்வதிலேயே அவர் மகிழ்ச்சி காணுகிருர். தம்முடைய அருமைக்குமாரனால் தம்மோடு ஒப்புரவாக்கப்பட்டு தமக்குள்ளே நீதிமான்களாக்கப்பட்டவர்களோடு தேவன் நிர்விசாரமாக ஈடுபடமுடியாதே.

---

2. எல்லாரும் வழி விலகி ஏகமாய்க் கெட்டுப் போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை. சங். 14:3.

பாவத்தைப் பற்றிய மிகவும் முக்கியமான ஒரு பாடம் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் யாவரும ஒன்றுபோல ஆக்கினைக்குட்பட்ட பாவிகள் என்பதை நாம் புரிந்துகொள்ள ஆண்டவர் இங்கு உதவுகிருர். இந்த நிலையில் நாம் யாவரும் சமமானவர்களே. இதை நாம் நன்ருகக் கவனிக்க வேண்டும். உலகம் முழுவதும் பாவத்திற்குள் மூழ்கிக் கிடக்கிறதைக் காணும்போது நாம் மற்றவர்களைவிட நல்லவர்கள் என எண்ணும் தன்மை நமக்குண்டு.

ஆக்கமயக்கத்தில் வாழும் இவ்வுலக மக்களைப் பொறுத்தமட்டிலும், தேவனுடைய பார்வையில் நாங்களும் கள்ளர், கொலைகாரர், ஆயக்காரர், வேசிகள் என்பவர்களைப்போலப் பெரும் பாவிகளே என்பதை ஒத்துக்கொள்வதில்லை. இக்காரணங் கொண்டு தங்களது இரட்சிப்புக்காக ஆண்டவர் அளிக்கும் ஆலோசனையையும், மனந்திரும்புதலுக் கான எச்சரிப்பையும் எதிர்க்கிறார்கள்.

விசுவாசிகளும் இவ்விதத் தப்பறையான எண் ணத்தை சிலவேளை கொள்வதுண்டு. நம்முடைய பாவத்திற்காக நாம் வேதனைப்பட்டு கிறிஸ்துவுக் குள் இரட்சிப்பைத் தேடிக் கண்டடைந்த பின்னர், இன்னும் நமக்குள் ஆதாமின் சீர்கேடான தன்மை அமைந்துள்ளது என்பதை மறந்துபோகிறோம். பயங்கரமான பாவிகள், ஆயக்காரர், வேசிகள் என் பவர்களைவிட நாம் வேறுபட்ட மேலான இனத்த வர் என எண்ணுகிறோம். ஆனால் தீமை நம்மில் காணப்படும்போது இதைக் குறித்து நாம் ;ஆச் சரியமடைகிறோம். மனித இருதயத்திலிருந்து புறப் பட்டு வருவதாக கிறிஸ்துவால் குறிக்கப்பட்டுள்ள பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொருளாசைகளும், வஞ்சனைகளும், துரோகங் களும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங்களும், வன் கண்ணும், பெருமையும் சீரழிந்த நம்முடைய இரு தயத்தின் அடியிலுள்ள அந்தகாரத்திலிருந்து வெளிப்படும்போது நாம் அதிர்ச்சியும் அச்சமும் கொண்டு நம்பிக்கையிழக்கிறோம். நம்மில் தூஷ ணங்களும் காணப்படலாமென்பதைச் சிந்திக்க வேண்டும் உபத்திரவ காலத்தில் சிலர் தங்கள் ஜெபத்திலும் தேவனைத் தூஷிப்பதாகத் தங்கள் வாழ்க்கையில் உணர்ந்ததுண்டு. மேலும் தேவ னுக்கு நேராக நாம் மிகவும் குளிர்ந்துபோய் உலகக்

காரியங்களையும், பாவத்தையும் அதிகமாய் நேசிக்க லாம். எல்லா வேளைகளிலும் உடைந்த உள்ளம் கொண்டவர்களாய் வாழாது, பல வேளைகளிலும் நம் இருதயம் கடினப்படலாம். அல்லது அயலகத் தாரை நம்மைப்போல நேசிப்பதற்குப் பதிலாய் அவர்கள்மீது பொறாமையும் பகையுங்கொள்ள லாம்.

எல்லாவற்றிலும் பயங்கரமான பாவம் கிறிஸ் துவின் பாடு மரணத்துக்கு நாம் சரியான மதிப்புக் கொடாததே. நாம் இரட்சிப்பும் நித்திய மகிழ்ச்சி யுமடைவதற்காக கிறிஸ்து வாரால் அடிக்கப்பட் டார், முள்முடி சூடினார், சிலுவையில் தொங்கினார் என்றெல்லாம் அறிந்திருந்தும் அவரை மிகவும் குறைவாய் நேசித்து, பயனற்ற காரியங்களுக்கு முதலிடம் கொடுக்க நம்முடைய இருதயம் விரும் பும்போது நாம் அச்சமும் ஆச்சரியமும் கொள்ளு கிறோம். இவ்விதமாய் நாம் வியப்புக்கொள்வதின் காரணமென்ன? நம்முடைய இருதயம் சீர்கெட்டது என்னும் உண்மையை நாம் சரிவர உணராதது தான் காரணம். பாவத்தில் மூழ்கிப்போன ஆதா மின் சந்ததியார் பெருமையினால தங்களைக் குறித்து சாக்குப்போக்குக் கூறி, ஆண்டவருடைய வசனத் துக்கு எதிர்த்து வாதாடி, கிறிஸ்துவை அலட்சியப் படுத்துவதைக் காணும்போது நாம் அதிகமாய் ஆச்சரியப்படுவதில்லை. ஆனால் நம்மைக் குறித்து நாம் ஆச்சரியப்படுவதற்குரிய காரணம் நாம் தனிப் பட்ட இனமெனக் கருதுவதாலேயே. நாம் தேவ னால் பிறக்கும்போது பரிசுத்த ஆவியானவரால் புதிய தன்மையைப் பெற்றுக்கொள்ளுகிறோம் என் பது உண்மை. ஆனால் நமக்குள் மாம்சத்தினால் பிறந்தது மாம்சமாகவே இருக்கிறது; அது பாவ விஷம் கொண்டதாகவேயிருக்கும்.

மற்று வேத வசனங்களைப் போலவே இந்த வசன மும் நமக்குள்ளே பாவத்தன்மையிருக்கிறதென்

றும் நாம் அதை ஆதாமிடமிருந்து பெற்றுக் கொண்டோமென்றும் கற்பிக்கிறது. வித்தியாசமே யில்லை எல்லாரும் பாவஞ்செய்தார்கள் (ரோம. 3:22,23). தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க, கர்த்தர் பரலோகத்தி லிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார். எல்லா ரும் வழிவிலகி, ஏகமாய்க் கெட்டுப் போனார்கள்; நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை (சங். 14:2,3). மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினதென்றும், அவன் இருதயத்து நினைவுக ளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கண்டு (ஆதி. 6:5) கர்த்தர் வேதனைப்பட் டார். ஆதாமிடமிருந்து நாம் பெற்றுக்கொண்ட தன்மையின் அடிப்படையில் நம்முடைய இயற்கை யான சுபாவம் இதுவே. இதை நாம சரிவர உணர்ந்தால் இத்தன்மை நம்மில் செயல்படும் போது நாம் ஆச்சரியப்படவோ அதிர்ச்சியடை யவோ மாட்டோம்.

ஆனால், கர்த்தருக்கு ஸ்தோத்திரம், நம்முடைய இத்தகைய இழிவான நிலையினாலேயே தேவன் தம் முடைய திருக்குமாரனை நம்முடைய இரட்சகராக அனுப்பினார். விசுவாசத்தில் நாம் திடனாயிருக்க வேண்டுமானால் ஆதாமுக்குள் நாம் அனைவரும் சீர் கெட்டு நஷ்டப்பட்டுப் போனவர்களே என்பதைத் திட்டமாய் உணரவேண்டும். பாவம் தீமை பெல வீனம் என்பவைகளே இயற்கையாய் நம்மில் காணப்படுகின்றன. ஆண்டவரும் இதைவிடக் கூடு தலாய் நம்மைக் கணக்கிடவில்லை. எனவே பாவத் தின் படுகுழியில் நாம் விழும்போது ஆண்டவரு டைய கிருபாசனத்துக்கு நேராக விரைந்துசென்று அவரை நோக்கி, தேவனே! நான் முழுவதும் சீர் கெட்டவன்; நீர் என்னைப் பாராதேயும், உமது திருக்குமாரனுடைய முகத்தையே பாரும் என்று

றவேண்டும். தேவன் தம்முடைய திருக்குமாரனி லேயே திருப்தி கொள்ளுகிருரென்பதையும் அவ க்குள்ளாலேயே நாம் நீதிமான்களாகிரும் என் தையும் எப்போதும் மனதில் கொள்ளவேண்டும். ஆகையால் நாம் ஆண்டவருடைய அருமைக் குமா னுக்குள் நிலைத்திருக்கும்வரைக்கும் நம்முடைய ன்மையின் அடிப்படையில் ஆண்டவரது அன்பு மாற்றமடைவதில்லை.

---

3. **அந்தப்படி கிரியைகளில்லாமல் தேவனாலே நீதிமானென்றெண்ணப்படுகிற மனுஷனு டைய பாக்கியத்தைக் காண்பிக்கும்பொருட்டு**

ரோம. 4:6.

ஒரு மனிதன் பாவத்தினாலே அலைக்கழிக்கப்படு கிற வேளையிலும் தேவனுக்கு முன்பாக நீதிமானு இருக்க முடியுமென்று இந்த வசனம் மிகவும் தெளி வாகவும் திட்டமாகவும் கூறுகிறது. தேவன் ஒரு மனிதனை நீதிமானுக்கும்போது அவர் அவனிலி ருந்து எல்லா பாவத்தையும் அழித்துப்போட்டு அவனுக்குப் பாவத்திலிருந்து பரிபூரண விடுதலை அளித்துவிட்டாரெனப் பொருளாகாது. அவனை அவர் நீதிமானுகக் கணக்கிடுகிருரென்றே இங்கு நாம் காண்கிரும். நம்மிலே நாம் பெற்றிராத நீதியை ஆண்டவர் நம்முடைய கணக்கில் வைப்ப தாலும், நம்முடைய பாவங்களை அவர் மன்னித்து அவைகளை மூடிப்போடுகிறபடியாலும் நாம் நீதி மான்களாகிரும் என இந்த வேதபாகம் கற்பிக்

கிறது. நீதிமானாக்கப்படுதல் என்னும் பதம் பலருக்கும் குழப்பத்தை உண்டுபண்ணலாம். ஆகவே அப்போஸ்தலன் இங்கு நீதிமானென்றெண்ணப்படுகிற மனுஷனென்'ற குறிப்பிடுகிறார். அதைத் தொடர்ந்து நீதிமானாக்கப்படும் செயலை விளக்குவதற்காக தாவீதின் வார்த்தைகளைப் பயன்படுத்தி, எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, எவனுடைய அக்கிரமத்தை கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ அவனே இரட்சிக்கப்பட்டவன் என்று விளக்குகிறார்.

ஒரு மனிதனுடைய அக்கிரமத்தை கர்த்தர் எண்ணாது, அவன்மீது தேவன் நீதியை சுமத்தும்போது தான் அவன் இரட்சிக்கப்படுகிறானேயாகில் அந்த மனிதனில் தன்னில்தான் எந்தவித நீதியுமில்லையெனத் தெளிவாகிறது. அப்படியிருக்குமேயாகில் அவன் நீதிமானென்று எண்ணத் தேவையில்லையே. அதே வேளையில் இரட்சிக்கப்பட்டவர்களிடத்தில் பாவம் உண்டென்றும் காண்கிறோம். ஆனால்தேவன் அதைக் கணக்கிடாது மறைத்துப்போடுகிறார். கிறிஸ்துவின் மத்தியஸ்த ஊழியத்தையும் அவருக்குள் நாம் பெற்றுக்கொள்ளுகிற நீதியையுங்குறித்து வேதம் கற்பிப்பவைகள் இவைகளே. நம்மாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, பாவத்திலிருந்துவிடுதலையடையலாம் என்கிற தவறான கொள்கையை இந்த கருத்து முற்றிலும் அழித்துப்போடுகிறது. இந்த உலகத்தில் நாமாக நீதிமான்களாகவோ பாவத்திலிருந்து விடுதலையடையவோ முடியாதென்றும், நாம் கிறிஸ்துவின் நீதியைத்தரித்துத்தான் தேவனுடைய பார்வையில் நீதிமான்களாகிறோமென்றும் அப்போஸ்தலன் இங்கு தெளிவாகக் கற்பிக்கிறார்.

பாவம் முற்றிலும் அழிக்கப்பட்டதாலும் நியாயப்பிரமாணத்தை முழுவதும் கடைபிடிப்பதாலும்

நாம் நீதிமான்களாகவில்லை என்றும், தேவனே தம்முடைய சித்தத்தின்படி நம்மை நீதிமான்களாகக் கணக்கிடுகிருரென்றும் நாம் தெளிவாகப்புரிந்து கொள்ளுவேமேயாகில், இரட்சிக்கப்படாதவர்களையும் தேவன் நீதிமான்களாகவே கருதுவார் என்கிற தவருன கருத்தை நாம் கொள்ளமாட்டோம். ஆண்டவராகிய கிறிஸ்துவுக்கு ஸ்தோத்திரம். நாம் அவருக்குள்ளாலேயே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம். தேவனுடைய பூரண தன்மையை அறிந்திருக்கிறவர்கள் நியாயப்பிரமாணத்தின் நீதியில்லாதபடி தேவனுலே நீதிமான்களாக்கப்படுவதைக் குறித்து ஆச்சரியமே அடைவார்கள். தேவன் நீதி நிறைவேற்ருமல் இரக்கம் காண்பிப்பதில்லை. ஆகையால் ஆண்டவர் தம்முடைய திருக்குமாரனை கிருபாசனமாக அமைத்துள்ளார். தம்முடைய நீதியைக் காண்பிக்கும்பொருட்டு தம்முடைய குமாரனை மரணத்துக்கு ஒப்புக்கொடுத்து, அவருடைய இரத்தத்தில் விசுவாசம் வைக்கிறவர்களையே தேவன் நீதிமான்களாக்குகிருர் தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானுக்குகிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும், கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினுலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினுர். (ரோம. 3:25,26). மேலும் ஒருவருடைய கீழ்ப்படிதலினுலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள் (ரோம. 5:19) என்றும் வாசிக்கிருேம். மத்தியஸ்தராகிய கிறிஸ்து நமக்காக நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றியதாலேயே இது கூடியதாயிற்று.

ஒருவன் தன்னுடைய சகோதரனுடைய கடனைத் தீர்க்கும்போது, அச்சகோதரன் விடுதலையடைகிருன். அவன் கடனற்றவனுகக் கணக்கிடப்படுவது

மாத்திரமல்லாது கடனற்றவனுகவே மாறுகிருன். அவ்வாறிருக்க, நமக்காக கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றி நம்முடைய கடனைத் தீர்த்திருக்கும்போது நாம் கடனற்ற நீதிமான்களாய்த் தீர்ந்திருப்பது அதிக நிச்சயமல்லவா! ஆகையால் தேவன் நம்மை நீதிமான்களென்றெண்ணுகிருர் என்று கூறும்போது நாம் எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் அவர் அவ்வாறு கணக்கிடுவார் எனக் கொள்ளுதல் ஆகாது. கிறிஸ்துவின் நீதி நம்முடைய கணக்கில் வைக்கப்பட்டுள்ளபடியால் நாம் முற்றிலுமாக நீதிமான்களாகிரேமென்றே கருத்தாகிறது. இதன் மூலமாக தேவனுடைய நீதி குறைபட்டுப் போவதில்லை. அவருடைய நியாயத்தீர்ப்புக்களும் தண்டனைகளும் முற்றிலும் நிறைவேற்றப்பட்டுவிட்டன. சுருங்கச்சொன்னுல் தேவன் நீதியுள்ளவர். அவர் கிறிஸ்துவின் நீதியை நமக்களிப்பதினுலேயே நம்மை நீதிமான்களாக்குகிருர். கடைசி நாளில் உலக மக்கள் அனைத்துக்கும் முன்பாக தம்முடைய விசுவாசிகளைப் பார்த்து நீதிமான்களென்று அழைப்பதோடு அவர்களுக்கு நியாயத்தின் அடிப்படையில் நீதியின் கிரீடத்தை அணிவார்.

---

4. சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான். மத். 22:12.

மத்தேயு சுவிசேஷம் 22-ம் அதிகாரத்தில் பரலோக இராஜியத்தை, அதாவது தமது கிருபையின் அரசை தன் குமாரனுக்கு விவாகம் நடத்திய ஒரு அரசனுக்கு உவமித்து கிறிஸ்து கூறினர். கலியாண விருந்துக்கு அழைக்கப்பட்டவர்களில் பலரும் அந்த அழைப்பை அசட்டைபண்ணி, பலவித சாக்குப் போக்குகளைக் கூறினார்கள். ஒருவன் தன்னுடைய வியாபாரத்தினாலும் பிறிதொருவன் தன்னுடைய வயலினாலும் மூன்ருவதொருவன் தன்மனைவியினாலும் தடைபண்ணப்பட்டார்கள். ஆயினும் அரசனுடைய அழைப்பை ஏற்றுக்கொண்ட அநேகர் இருந்தார்கள் கலியாண சாலை விருந்தாளிகளால் நிறைந்தது. அழைப்பை ஏற்று அங்கு வந்திருந்த விருந்தாளிகளிலொருவன் கலியாண வஸ்திரம் தரியாதவனாகத் தன் சொந்த ஆடையணிந்து அமர்ந்திருந்தான்: அக்காரணங்கொண்டு கையுங்காலும் கட்டப்பட்டவனாய் அவன் புறம்பான இருளிலே தள்ளப்பட்டான்.

இதன் கருத்தென்ன? ஆண்டவர் இந்த உவமையை எதற்காகக் குறிப்பிட்டார்? அம்மனிதன் விவாக விருந்துக்கு வந்தவனாயிற்றே! மற்று பலரைப்போல அழைப்பை அவன் புறக்கணிக்கவில்லையே! மகிழ்ச்சியான மற்று விருந்தாளிகளோடு அவனும் விருந்து மேசைக்கருகில் அமர்ந்திருந்தானே! தங்கள் உள்ளங்களில் ஆவியானவருடைய அழைப்பைக் கேட்டு அதற்குக் கீழ்ப்படிந்து நித்திய பேரின்பத்தைத் தேட முன்வந்துள்ள மக்களையே

இம்மனிதன் குறிப்பிடுகிறான். இவர்கள் தங்கள்
பழைய வழிகளையும் வாழ்வையும் கூட்டாளிகளை
யும் விட்டுவிட்டு தங்கள் வழக்கத்திலும் பழக்கத்
திலும் நட்பிலும் விசுவாசிகளோடு சேர்ந்திருக்கி
றார்கள். தேவனுடைய வசனத்தை இவர்கள் வாசிக்
கிறார்கள், கேட்கிறார்கள், பாடுகிறார்கள். ஜெபத்தி
லும் தியானத்திலும் கிறிஸ்தவ சேவைகளிலும்
இவர்கள் விசுவாசிகளோடு ஐக்கியம் கொள்ளு
கிறார்கள். இவ்வாறாக இம்மனிதன் மார்க்கப்பற்
றுள்ள மக்களைக் குறிப்பிடுகிறான். அதாவது விசு
வாசிகளின் கூட்டத்தோடு வாழும் பெயர்க் கிறிஸ்
தவர்களையே இவன் குறிப்பிடுகிறான். இவர்களில்
முக்கியமானதொன்று குறைவுபடுகிற படியால்
இவர்கள் புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்.

மத்தேயு சுவிசேஷம் 25-ம் அதிகாரத்தில் கூறப்
பட்டுள்ள புத்தியில்லாத கன்னிகைகளும் இவன்
குறிப்பிடும் மக்களையே சுட்டிக் காண்பிக்கிறார்கள்.
பரலோக ராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்
கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டு போகப்
புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்
கிறது என்று இயேசு கூறினார். அவர்கள் மணவாள
னுக்காகக் காத்திருந்தபோது மக்கள் அவர்களுக்
குள் எந்த வேற்றுமையும் காணக்கூடாமலிருந்தது.
அவர்கள் அத்தனை பேரும் கன்னிகைகளே. அவர்கள்
அனைவரிடமும் தீவட்டிகள் இருந்தன எல்லாரும்
மணவாளனை சந்திக்கப் புறப்பட்டுச் சென்றார்கள்.
யாவரும் மணவாளனோடு மணவறைக்குள்ளே,
அதாவது மகிமைக்குள்ளே பிரவேசிக்க ஆவ
லோடு இருந்தார்கள். நடு இராத்திரியிலே, இதோ
மணவாளன் வருகிறார் என்ற சத்தம் உண்டாயிற்று.
அப்போதுதான் ஐந்து பேரிடம் எண்ணெய் இல்லை
யென்பது வெளியாயிற்று. அவர்கள் விளக்குகள்
எரியவில்லை. அவர்கள்தான் நித்தியமாக மணவறை
யிலிருந்து புறம்பாக்கப்பட்டார்கள்.

யோவான் சுவிசேஷம் 15-ம் அதிகாரத்தில் இக்கருத்து சற்றுக்கூட பயங்கரமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு கிறிஸ்து இப்படிப்பட்டவர்களைக் குறித்து, என்னில் கனிகொடாதிருக்கும் கொடி என்று கூறுகிறார். அதைக்குறித்து நாம் ஆழமாய்ச் சிந்திக்கவேண்டும். ஆண்டவருக்கு உகந்தவர்களாய் வாழாதிருந்தும் பெருங்காரியங்களைச் செய்யும் மக்களைக் குறித்து மத்தேயு சுவிசேஷம் 7-ம் அதிகாரத்தில் ஆண்டவர் கூறியுள்ளார். அவர்கள் கிறிஸ்துவின் நாமத்தில் தீர்க்கதரிசனம் உரைக்கலாம், அற்புதங்களும் அடையாளங்களும் செய்யலாம், பிசாசுகளைத் துரத்தலாம், மரித்தோரை உயிரோடே எழுப்பலாம். சர்தையிலுள்ள ஊழியக்காரனுடைய உபதேசமும் வாழ்க்கையும் அவனை உயிருள்ளவனாகக் காண்பித்தாலும் அவன் செத்தவனாகவே இருந்தான். நீ உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய் (வெளி. 3:1).

இத்தகைய வார்த்தைகளை கிறிஸ்துவே கூறியிருக்கும்போது தன்னைக் குறித்து அச்சங்கொள்ளாதிருப்பவன் யார்? ஆழமான ஆவிக்குரிய அனுபவங்கொண்ட விசுவாசிகள்கூட இவைகளை வாசிக்கும்போது தாங்களும் வஞ்சிக்கப்பட்டுவிடக்கூடாதே என அஞ்சுகின்றனர். எனவே, அவர்கள் மிகவும் ஆவலோடு, தேவனே என்னை ஆராய்ந்து, வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பாரும் (சங். 139:23,24) என்றே கதறுவார்கள்.

பயங்கரமான முடிவை அடைந்த வேஷபக்தி கொண்ட மக்களிடம் காணப்பட்ட குறை என்ன? கலியாணவஸ்திரமென்றாலென்ன? வெளிப்படுத்தின விசேஷம் 19-ம் அதிகாரத்தில் ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது என்றும், அவருடைய மனைவி சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்தி

ரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது என்றும் கூறிவிட்டு, அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களின் நீதிகளே என்றும் கூறப்பட்டுள்ளது (வச. 7,8) பரிசுத்தவான்களுடைய நீதிகள் என்னவென்று அதே புத்தகம் 7-ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். வெள்ளை அங்கிகளைத் தரித்திருந்த பாக்கியமுள்ள திரள்கூட்டமான மக்களைக் குறித்து, இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்; ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருக்கிறார்கள் (வச. 13-15) என்று கூறப்பட்டுள்ளது. லவோதிக்கேயா சபையின் வெதுவெதுப்பான ஊழியக்காரனைப் பார்த்து கிறிஸ்து, உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களை என்னிடத்திலே வாங்கிக் கொள்ளவும் உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன் (வெளி 3:18) என்று கூறினார்.

இவ்வாறாகப் பார்க்குமிடத்து கலியாண விருந்துக்கு வந்தும் அரசருடைய ஆடையை அணியாதபடி தங்கள் சொந்த ஆடையுடுத்து அமர்ந்திருக்கிறவர்கள் தெய்வபக்தியும் மார்க்கப்பற்றும் மதவைராக்கியமும் கொண்டிருந்தாலும் தங்கள் சொந்த நீதியில் வாழும் கிறிஸ்தவர்களையே குறிக்கிறார்கள். அவர்கள் தங்கள் பாவத்தை இன்னும் கண்டுகொள்ளவில்லை. தங்கள் பக்தியிலேயே நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். கிறிஸ்துவின் நீதியை இன்னும் அவர்கள் தரித்துக்கொள்ளவில்லை. ஆட்டுக்குட்டியானவருடைய மரணத்தினாலும் இரத்தத்தினாலும் மாத்திரமே நமக்கு இரட்சிப்பும் தூய்மையும் நீதியும் உண்டு என்று இன்னும் அவர்கள் இருதயத்திலிருந்து அறிக்கை செய்யவில்லை.

5. கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரி லிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத் திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். ரோம. 10:9.

கிறிஸ்துவே ஆண்டவரென்றும் தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்றும் இருதயத் தில் விசுவாசித்து வாயினால் அறிக்கைபண்ணுகிற வர்கள் மாத்திரமே இரட்சிக்கப்படமுடியும் என்று இங்கு தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. விசுவாச வார்த்தையின் அருகாமையிலும் அடிப்படையிலும் தான் நித்திய மகிழ்ச்சியிருக்கிறது. இயேசுகிறிஸ்து வில் விசுவாசம் வைத்து, அவர் பரலோகத்திலி ருந்து வந்த கர்த்தரென்றும் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்த இரட்சகரென்றும் அறிக்கைபண் ணும்போது இரட்சிப்பு உண்டாகிறது.

உண்மையான விசுவாசத்தின் தன்மையையும் விசுவாசத்தின் செயல் முறையையும் விளக்கிய பின்பே அப்போஸ்தலன் நீ இரட்சிக்கப்படுவாய் என்று பிரகடனம் செய்கிறார். இரட்சிக்கும் விசு வாசத்தின்மூலமாக நாம் இயேசுவின் நண்பர்களா கிறோம். இருதயத்தின் நிறைவினால் அவரை நாம் அறிக்கையிட்டு அவருடைய அரசைப் பரம்பச் செய் கிறோம். உயிருள்ள விசுவாசம் உள்ளத்தில் ஆழ மாய்ப் பதிந்திருக்கும் போது விசுவாசத்தின் பயிற்சிக்கு அறிக்கை தேவைப்படுகிறது. அதன் முக் கிய காரணம் நம்முடைய சிறந்த பொக்கிஷமாகிய கிறிஸ்துவைக் குறித்து பிறருக்குக் கூற நம்முடைய உள்ளத்தில் ஏற்படும் உந்துதலும், அவருடைய மகி

மையைக் குறித்தும் ஆத்துமாக்களுடைய இரட்சிப்பைக் குறித்தும் நம்மில் உண்டாகும் ஆவலுமே.

அறிக்கையென்று சொல்லும்போது நம்முடைய இருதயத்திலுள்ள விசுவாசத்தினாலே ஏற்படும் வெளியரங்கமான வார்த்தைகளையே குறிப்பிடுகிறது இளமையில் கற்ற சில விசுவாசப் பிரமாணங்களை வாயினால் உச்சரிப்பதை இங்கு குறிப்பிடவில்லை. அவிசுவாசிகளும் அப்படிச் செய்யலாமே. எனவே நம்முடைய இருதயத்தில் காணப்படும் ஆழமான விசுவாசமும், அதின் அடிப்படையில் இருதயத்தின் நிறைவினால் வாய்பேசுகிற அறிக்கையுமே இரட்சிப்பைக் கொண்டுவரும். உன் இருதயத்தில் விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய் என்று அப்போஸ்தலன் கூறியதிலிருந்து இந்த விசுவாசத்தின் அடிப்படையில் வெளிப்படுகிற அறிக்கை மாத்திரமே இரட்சிப்புக்கு ஏதுவானதாகும் எனக் காண்கிறோம். அதைத்தான் தாவீதும், விசுவாசித்தேன் ஆகையால் பேசுகிறேன் (சங் 116:10) என்று கூறியுள்ளார்.

அப்படியானால் விசுவாசிக்கிறவர்கள் இயேசுவைக்குறித்து என்ன அறிக்கையிடவேண்டும்? இக்கேள்விக்குப் பிரதியுத்தரமாக, அவரைக் கர்த்தரென்று அறிக்கையிடவேண்டுமென அப்போஸ்தலன் கூறுகிறார். அசட்டைபண்ணபட்டவரும் குரூரமாய் கொல்லப்பட்டவருமாகிய இயேசுவே வானத்துக்கு ஆண்டவரென்றும், அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதி என்றும் (அப். 10:42) விசுவாசித்து அறிக்கையிடுவதே மிகவும் முக்கியமானதாகும். அவரை கர்த்தரென்று அறிக்கையிடும்போது அதற்குள் சகலமும் அடங்கியுள்ளது. இத்தகைய அறிக்கையை ஆவியானவருடைய ஒத்

தாசையின்றி நம்மால் செய்ய இயலாது. இதைக் குறித்து அப்போஸ்தலன், பரிசுத்த ஆவியினுலே யன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாதென்று (1 கொரி. 12:3) கூறியுள் ளார். ஆவியானவர் நம்முடைய ஆத்துமாவிலே செய்கிற கிரியையே இந்த அறிக்கையாகும் என் பதே அப்போஸ்தலனுடைய கருத்து. பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தர் என்று நாவுகள் யாவும் ஒருநாள் அறிக்கை பண் ணப்போகிறதை ஆவியானவருடைய அருள் பெற்ற ஆத்துமாக்கள் இப்பொழுதே விசுவாசிப் பார்கள்.

தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினு ரென்றும் நாம் அறிக்கையிடவேண்டும். கிறிஸ்து வின் உயிர்த்தெழுதலைக் குறித்த இந்த குறுகிய அறிக்கையில் நமக்குத் தேவையான எல்லா ஆசீர் வாதங்களும் அடங்கியிருக்கின்றன. இயேசுவே கர்த் தர் என்றும், தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினுரென்றும் விசுவாசித்து அறிக்கையிடுவ தில் நம்முடைய இரட்சிப்புக்குரிய விசுவாசம் அடங்கியிருக்கிறது என்று அப்போஸ்தலன் குறிப் பிடுகிருர். இயேசுகிறிஸ்துவை விசுவாசி (அப். 16:31), குமாரனையுடையவன் (1 யோவா. 5:12), அவர் மாம்சத்தைப் புசித்து, இரத்தத்தைப் பானம் பண்ணுவது (யோவா. 6:54) என்னும் சொற்ருெடர்களெல்லாம் இக்கருத்தையே விளக்கு கின்றன. கிறிஸ்துவில் அப்படிப்பட்ட விசுவாசம் உள்ளவர்கள் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைவார்கள்.

இரட்சிக்கப்படுவதென்ருலென்ன? நான் நித் தியமாய் இரட்சிக்கப்பட்டு தேவனேடு பரலோகத் தில் வாழ முடியுமா? இதைக் குறித்த திட்டமான

அறிவை நான் பெற்றுக்கொள்ளக்கூடுமா? இக்கேள்விகள் நாம் சிந்திக்கும் வசனங்களை மிகவும் முக்கியப்படுத்துகின்றன. யார் இரட்சிக்கப்படுவார்கள்? என்பதைத் திட்டமாகக் கூறமுடியும் என்றே அப்போஸ்தலன் குறிப்பிடுகிறார். இருதயத்தில் ஏற்படும் விசுவாசத்தின் மூலமாக இரட்சகரை அறிக்கையிட்டு அந்த விசுவாசத்திற்குரிய கிரியைகளை எப்போதும் வாழ்க்கையில் வெளிப்படுத்தும் ஒருவர் இரட்சிக்கப்பட்டாயிற்று என்பதே அப்போஸ்தலனுடைய கருத்தாகும். இன்னும் கொஞ்சக் காலம் மாத்திரமே நாம் இந்த கண்ணீரின் பள்ளத்தாக்கில் வாழ வேண்டும் அதற்குப்பின் தேவனோடு நித்திய பேரின்பத்தில் வாழலாம். கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தில் இறுதிமட்டும் வாழ்ந்து, அந்த விசுவாசத்தின் அடிப்படையில் அவரை அறிக்கையிடுகிறவர்கள் உலகத்தோற்றத்துக்கு முன்னே நமக்காக ஆயத்தப்படுத்தப்பட்டுள்ள இராஜ்யத்தை சுதந்தரிக்கும்படி அவரால் அழைக்கப்படுவதற்குத் தகுதிபெற்று அவருடைய வலது பக்கத்தில் நிற்பார்கள்.

நீ, உன் என்ற ஒருமைப் பதங்களை அப்போஸ்தலன் பயன்படுத்துவதை நாம் கவனிக்கும்போது, நானும் அத்தகைய விசுவாசிதானா? நான் அவரை அறிக்கையிடுகிறேனா? அந்த அறிக்கை என் விசுவாசத்தின் அடிப்படையில் ஏற்பட்டதுதானா? என்ற கேள்விகளின் பின்னணியத்தில் நம்மை நாமே ஆராய்ந்து பார்க்கவேண்டும். இயேசுகிறிஸ்துவை நம்முடைய இருதயத்தில் விசுவாசித்து வாயினால் அறிக்கையிடும்போது நமக்கு நிச்சயமாய் இரட்சிப்பு உண்டு

— —

6. பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவிசெய்யுங்கள். ரோம. 12:13.

ஏழை விசுவாசிகளுடைய தேவைகளை மற்று விசுவாசிகள் தங்களுடையதாகவே கருதவேண்டும். தேவையிலிருப்போருக்கு நாம் எப்போதும் உதவ முன்வரவேண்டும் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களும் கூடப் பாடுபடும் (1 கொரி. 12.26) என்ற வாக்கின்படியேயுள்ள இருதய பூர்வமான உண்மையான அன்பு நம்மில் காணப்பட வேண்டும். உன்னைப்போல் பிறனையும் நேசி என்ற அன்பின் கட்டளைப்படி நாம் நடக்கவேண்டும். பொதுவான அன்பின் பிரமாணத்தின்படி யாவருக்கும் நாம் நன்மை செய்யவேண்டியதோடு விசேஷமாக விசுவாச குடும்பத்தாருக்கு நன்மை செய்யவேண்டுமென்பதைக் (கலா. 6:10) குறிப்பிடவே பரிசுத்தவான்களுக்கு உதவி செய்யுங்கள் என்று அப்போஸ்தலன் கூறினார். ஆதித்திருச்சபையில் சகலத்தையும் பொதுவாக அனுபவித்து வந்த முறை முன்னமேயே நின்றுவிட்டது என்று இந்த வாக்கியத்திலிருந்து அறிய ஏதுவுண்டு. அந்த முறை நிறுத்தப்பட்டதற்குரிய காரணம் அநேகர் சோம்பல் உள்ளவர்களாய் வேலை செய்யாமல் இந்த உரிமையைத் தவருகப் பயன்படுத்தியதாயிருக்கலாம். எனவே சோம்பலையும் தீமையையும் ஊக்குவிப்பதற்குத் தானஞ்செய்யாது தேவைக்கேற்றேகொடுக்க நாம் படிக்கவேண்டும். அவ்வாறு கொடுப்பதை நாம் மனப்பூர்வமாகச் செய்யவேண்டும்; இரக்கத்தோடும் சகோதர சிநேகத்தோடும் தேவையிலிருக்கும் மக்களை நாம் தாங்கவேண்டும்.

பரிசுத்தவான்களுக்குள்ளேயிருக்கிற தரித்திரர் யார்? (ரோம 15:26). பரிசுத்தவான்கள் என்னும் பதத்தை நாம் சரிவர அறிந்துகொள்வது நல்லது. நிருபங்கள் எல்லாவற்றிலும் சாதாரண விசுவாசிகளே பரிசுத்தவான்களென்று அழைக்கப்படுகிறதைக் காண்கிறோம். அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் போன்ற சிறப்பான பக்தர்கள் மாத்திரம் பரிசுத்தவான்களென்று அழைக்கப்படவில்லை. ஆவியானவரால் மறுபடியும் பிறந்து, உலகத்தை விட்டு விலகி, தேவனுக்காகப் பிரிந்து வாழுகிற யாவரும் பரிசுத்தவான்களே. இவர்கள் பரிசுத்தவான்களென்று அழைக்கப்படுவதற்கு இரண்டுகாரணங்களுண்டு. முதலாவதாக கிறிஸ்துவின் தூய்மையை இவர்கள் தரித்திருக்கிறார்கள். இரண்டாவதாக ஆவியானவர் இவர்களில் பரிசுத்தமாக்கும் செயலை ஆரம்பித்துவிட்டார். இந்த இரண்டு கருத்துக்களையும் இணைத்து அப்போஸ்தலன், கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் பரிசுத்தமாக்கப்பட்டீர்கள் (1 கொரி. 6:11) என்று கூறுகிறார்.

இவ்வாறாக நாம் பாவத்திலிருந்து முற்றிலும் விடுதலையடையுமுன்னமேயே பரிசுத்தவான்களாகிவிட்டோம். கிறிஸ்துவுக்குள்ளாக நாம் யாவரும் பரிசுத்தமானவர்களே. எனவே விசுவாசிகள் பரிசுத்தவான்களல்ல என்று மறுக்கிறவர்கள் தேவனைப் பரிகசிக்கிறார்கள். அவ்வாறு செய்கிறவர்கள் கிறிஸ்துவின் இரத்தம், தேவனுடைய வார்த்தை, பரிசுத்தாவியானவர், ஆண்டவருடைய அருள் என்பவைகளுடைய தூய்மையை மறுக்கிறார்கள். ஏனெனில் தேவனே அவர்களை பரிசுத்தவான்களென்று அழைத்திருக்கிறார்.

இந்தப் பரிசுத்தவான்களுடைய தேவையில் தான் நாம் மனப்பூர்வமாக உதவி செய்யவேண்

டும் அவர்களுடைய கஷ்டங்களைப் போக்க நாம் முன்வர வேண்டும் அப்படிச் செய்யாதபடி நமக்கிருக்கிற எல்லாவற்றையும் நமக்கே வைத்துக் கொள்ளுவோமேயானால் தேவனுடைய அன்பில் நாம் வாழவில்லை ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து. தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி? (1 யோவா. 3:17).

அந்நியரை உபசரிக்க நாடுங்கள் என்கிற அறிவுரை அடிக்கடி வேதத்தில் கூறப்பட்டுள்ளதைக் காண்கிறோம் (எபி. 13:2; 1 பேதுரு 4:9 பார்க்க) இதற்குரிய முக்கிய காரணம் ஆதிக் கிறிஸ்தவர்கள் கொடிய உபத்திரவத்திற்கு ஆளாகி, வீடுகளிலிருந்து விரட்டப்பட்டு, அந்நிய நாடுகளில் அலைந்து திரிந்தார்கள். மேலும் அந்நாட்களில் பயணிகள் தங்கி இளைப்பாற வழிச்சத்திரங்கள் அதிகமாக இல்லை ஆகவே துரத்தப்பட்ட கிறிஸ்தவர்களை சக விசுவாசிகள் மகிழ்ச்சியோடும் மனப்பூர்வமாயும் தங்கள் இல்லங்களில் ஏற்றுக்கொள்ளவேண்டிய தேவையிருந்தது சூழ்நிலைகளில் இன்று மாற்ற மேற்பட்டுள்ள போதிலும் அன்பின் பிரமாணத்தில் எந்த மாற்றமுமில்லை. நம்முடைய அயலகத்தாருக்கு எல்லாவிதத்திலும் நாம் உதவவேண்டும். நம்முடைய அன்பு வார்த்தைகளினால் மாத்திரம் வெளிப்பட்டால் போதாது, கிரியைகளில் வெளிப்பட வேண்டும். பிறருக்கு சேவை செய்வதில் நமக்கு ஏற்படும் பாடுகளையும் நஷ்டங்களையும் சகிக்க வேண்டும். தற்காலத்திலும் நாம் பிறரை உபசரிக்க வேண்டியது தேவையே. தேவையிலிருக்கும் சகோதரர்களுக்கு இருதயபூர்வமாக நாம் உதவவேண்டும். முறுமுறுப்பில்லாமல் அப்படிச்செய்யவேண்டுமென்று பேதுரு அறிவுறுத்துகிறார். மற்றவர்கள்

நம்மையும் அப்படி நடத்தவேண்டுமென்றுதானே நாம் எதிர்பார்க்கிறோம், நாம் அயலகத்தாரோடு பழகவேண்டிய முறைக்குரிய முக்கிய நிபந்தனை, மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். (லூக். 6:31) என்பதுவே.

---

7. என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் எனறேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர். சங். 32:5.

ஏழைப் பாவி மன்னிக்கப்படுவதற்குரிய வழியைக்குறித்து வேதம் உபதேசிப்பதின் சுருக்கத்தை இங்கு காண்கிறோம். இந்த முறையில்தான் ஆதாமின் சந்ததியார் ஆண்டவருடைய கிருபையைப் பெற்றுக்கொள்ள முடியுமென்று உலகத் தோற்றம் முதல் தெளிவான வார்த்தைகளினாலும் ஏராளமான எடுத்துக்காட்டுகளினாலும் தேவன் விளம்பியுள்ளார். ஆகவே இந்த வார்த்தைகளுக்கு நாம் மிகவும் முக்கியத்துவம் கொடுப்பது தேவை. என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர் என்று தாவீது கூறுகிறார். இது பழக்கமான பாவ அறிக்கையோ, வழக்கமான பாவ மன்ருட்டோ அல்ல. கவலை கொண்ட ஏழைப் பாவியின் உள்ளத்திலிருந்து எழும்புகிற அறிக்கையே இது.

கவலைப்படுவதிலும் பலவிதம் உண்டு. பலரும் வேதனையோடு பாவத்தை அறிக்கையிட்டாலும்

தொடர்ந்து அந்தகாரத்திலேயே வாழ்கிறார்கள். சவுல் அரசனுடைய வாழ்க்கையிலும் இதையே காண்கிறோம். நான் கர்த்தருடைய கட்டளையையும் உம்முடைய வார்த்தைகளையும் மீறினதினாலே பாவஞ்செய்தேன் (1 சாமு. 15:24) என்று அவன் கூறினபோதிலும் முழு இருதயத்தோடு அவன் மனந்திரும்பி தேவனோடு ஒப்புரவாகவில்லை. நான் இந்த முறை பாவம் செய்தேன் (யாத். 9:27) என்று பார்வோன் அறிக்கையிட்டதின் காரணம் எட்டு வாதைகள் அவனுக்கு அளித்த அச்சமே அவன் தேவனோடு ஒப்புரவாக எவ்வித ஆவலும் கொண்டதாகத் தெரியவில்லை எனக்கு இட்ட தண்டனை என்னால் சகிக்கமுடியாது (ஆதி. 4:13) என்று காயீனும் அறிக்கையிட்டான். ஆயினும் அவன் தேவனுடைய கிருபையைத் தேடாதபடி அவர் சமூகத்தை விட்டு விலகிச் சென்றான். யூதாசின் நிலையும் அதுவே. மிகவும் மனக் கசப்போடு, குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக் கொடுத்ததினால் பாவஞ்செய்தேன் (மத். 27:4) என்று அவன் கதறினான். ஆயினும் அவன் ஆண்டவரிடம் மன்னிப்பைத் தேடவில்லை.

மேலே கூறப்பட்ட எடுத்துக்காட்டுகளிலிருந்து உண்மையான அறிக்கையிடுதலுக்குத் தேவையானது மனஸ்தாபமும் மனந்திரும்புதலும் எனக் காண்கிறோம். பாவம் தேவனுக்கு விரோதமான மீறுதல். எனவே பரிசுத்தாவியானவர் ஆத்துமாவில் செயல்படும்போது மாத்திரமே மனந்திரும்புதல் ஏற்படுகிறது ஆகவே ஆண்டவருக்கு முன்பாக நம்முடைய இருதயத்தை ஊற்றி, பாவங்களை அறிக்கையிட்டு, பாவ மன்னிப்புக்காக இறைஞ்ச வேண்டும்.

நாம் முன்னே கண்டதுபோல பாவத்தினால் கட்டப்பட்ட பலரும் மனஸ்தாபத்தோடும் மனக்கசப்

போடும் தங்கள் பாவங்களை அறிக்கையிடுவதற்
குரிய ஒரே காரணம் அவைகளால் தங்களுக்கு ஏற்
பட்ட வேதனையான அனுபவமே. தாங்கள் தேவ
னுக்கு விரோதமாக மீறுதல் செய்துவிட்டோமே
என்கிற துக்கத்தினால் அறிக்கையிடுவதில்லை. அப்
படிப்பட்டவர்கள் ஆண்டவரோடு ஐக்கியங்
கொள்ள ஆசிப்பதில்லை பாவத்தின் பலனால் அவ
திப்படும்பொழுது மாத்திரமே ஆண்டவரண்டை
வருகிறார்கள். மற்றப்படி அவர்கள் தொடர்ந்து
பாவத்தின் அடிமைத்தனத்திலேயே வாழ்கிறார்கள்.
ஆகவே தேவனுடைய சத்தம் மனசாட்சியைத்
தட்டி எழுப்பி, ஆத்துமாவை நீதியுள்ள நியாயத்
தீர்ப்புக்குக் கீழ் கொண்டுவரும்போது மாத்திரமே
உண்மையான பாவ அறிக்கையுண்டாகிறது. அத்
தகைய ஆத்துமா தேவனுடைய இரக்கமுள்ள
அழைப்பையும் கிருபையின் சுவிசேஷத்தையும்
கேட்டு, கிருபையைப் பெற்றுக்கொள்ளும் நம்பிக்
கையோடு கிருபாசனத்தைக் கிட்டிச்சேருகிறது.
கிருபையைக் குறித்து அறியாது, பாவத்தைக் குறித்
தும் தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறித்தும்
மாத்திரம் அறிந்திருக்கிற ஆத்துமா அவரண்டை
செல்லமாட்டாது. ஆகவே பாவஅறிக்கைக்கு விசு
வாசம் தேவை. ஆதாமும் ஏவாளும் தங்கள் பாவத்
தையும் தேவனுடைய நியாயத்தீர்ப்பையும்
குறித்து மாத்திரம் கருதியபோது தேவனுடைய
சமுகத்துக்கு ஒளித்தோடினார்கள். தாவீதும் சில
காலம் அவ்வாறே செய்தார். தன்னுடைய
பாவத்தை அறிக்கையிடாதபடி ஆண்டவரைவிட்டு
அகன்று வாழ்ந்தார். ஆனால் அவர் அடக்கி வைத்த
மட்டும் நித்தம் அவர் கதறுதலினாலே அவரதெலும்
புகள் உலர்ந்துபோயிற்று. அவர் சாரம் உஷ்ண
கால வறட்சிபோல வறண்டு போயிற்று. ஆகவே
தான் அவர் தன் பாவத்தை அறிக்கையிட்டார்.

உண்மையான பாவ அறிக்கையைக் குறித்து அறிய வேண்டுமானால் தாவீதின் சங்கீதம் 51-ஐக் கவனிக்கவேண்டும். தாவீதின் ஜெபத்திலிருந்து இரண்டு காரியங்களைக் கற்றுக்கொள்ளலாம். அவர் பிறருக்கு எதிராகவும் குறிப்பாக உரியாவுக்கும் பெரிய தீமைகளைச் செய்திருந்த போதிலும் அவை களெல்லாவற்றையும்விட தேவனுக்கு விரோத மாகச் செய்த பாவமே அவர் முன்பாகப் பயங்கர மாகத் தோன்றியது. ஆகவேதான், தேவரீர் ஒரு வருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப் பித்தேன் (வச. 4) என்று கூறினார். உண்மையாய் உருகிய உள்ளத்தின் ஒரு காட்சியை இங்கு காண்கி றோம்.

இரண்டாவதாக அவர் செய்த பாவத்தைக் காட்டிலும் அவருக்குள்ளே காணப்பட்ட பாவ சுபாவமே அவருக்கு அதிக வேதனையளித்தது. எனவேதான் தன்னை பாவஞ்செய்வதற்குத் தூண் டிய மூல காரணத்தைக் குறிப்பிட்டு, இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள் (வச. 5) என்று கதறி னார். நமக்குள் வசிக்கும் பாவப்பிரமாணத்தையும், நம்முடைய சீர்கேடான தன்மையையும் அறிந்து கொள்வதே மிகவும் முக்கியமானதாகும். தன்னு டைய திருக்குள்ள இருதயத்தின் தீய தன்மையை உணராது, தன்னில் வெளிப்படும் தீய செயல்களை மாத்திரம் கவனிக்கிற ஒருவர் தன்னில் தானே மாயமான ஆறுதலைப் பெற்றுக்கொள்ள வழி யுண்டு. அப்படிப்பட்டவர் பாவத்திலிருந்து விடு தலை அடையவோ, கிறிஸ்துவால் இரட்சிக்கப் படவோ முடியாது. எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயி ருக்கிறது (எரே. 17:9) என்று தேவன் தாமே நம்மு

டைய இருதயத்தைக் குறித்து கூறியுள்ள அறி
கையின் அடிப்படையில் நம்முடைய சேர்கேட்டை
அறிந்துகொள்வதே நம்முடைய பாவ அறிக்கை
யின் மிக முக்கியமான பாகமாகும்.

---

8. கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனை அவர் சிட்சிக்கிறார். எபி. 12:6.

என்னில் கனி கொடுக்கிற கொடி எதுவோ அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம் பண்ணுகிறார் (யோவா 15:2) என்று கர்த்தரா கிய கிறிஸ்து கூறினார். தேவனால் அங்கீகரிக்கப்பட்டதும், நல்ல கனி கொடுக்கிற கொடிகள் என்று அழைக்கப்படுகிறதுமான ஆத்துமாக்களும் தங்களில் தாங்களே சுத்தமுள்ளவர்களல்லவென்று இந்த வசனத்திலிருந்து கண்டுகொள்ளுகிறோம். கனி கொடுப்பது என்றால் தீமையை விட்டு விலகித் தூய்மையாய் வாழுதல் என்று சிலர் கருதுகிறார்கள் இந்த இரண்டும் இரண்டு வேறுபட்ட காரியங்களே. தாராளமாய்க் கனி கொடுக்கிற நல்ல சில கொடிகளிலும் வெட்டிப் போடப்படவேண்டிய தேவையற்ற சில பாகங்கள் காணப்படலாம். அது போலவே அன்பும் ஆவியின் கனிகளும் நிறைந்துள்ள உண்மையும் உயிருமுள்ள விசுவாசிகளும் பொதுவான சேர்கேட்டின் தன்மையைக் கொண்டவர்களாய் வாழ்வதோடு, சில குறிப்பிட்ட தவறுகளும் கெட்ட பழக்கங்களும் அவர்களை அதிகமாய்த் தாக்கலாம். அப்பழக்கங்கள் தொடர்பாக

சிலுவையிலறையப்பட்டு அழிக்கப்படவேண்டும். இத்தகைய விசுவாசிகள் கனிகொடாத கொடிகளல்ல. ஆனால் ஜென்ம சுபாவமுள்ள மனுஷன் பழக்க வழக்கங்களில் நல்லவனாக இருந்தாலும் அவன் கனியற்ற கொடிக்கு ஒப்பானவனே.

இங்கு நாம் கவனிக்கவேண்டிய சில கருத்துக்கள் உண்டு. நாம் முழுவதும் பரிசுத்தமானவர்களல்ல. அடிக்கடி பாவமும் பழைய பழக்க வழக்கங்களும் நம்மைத் தாக்கலாம். ஆனால் இரட்சகரோடு ஐக்கியங்கொண்டிருக்கும் வரையிலும் நாம் ஆக்கினைக்குட்படோம். மேலும் நாம் அவரில் நிலைத்திருப்பதினால் நம்முடைய பெலவீனங்களின் மத்தியிலும் ஆவியின் கனிகள் நம்மில் காணப்படும். நம்மில் தோன்றும் கனியினாலே நாம் திருப்தியடையாதிருந்தாலும் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கும் வரையிலும் நாம் புதிய சிருஷ்டிகளே.

கனி கொடுக்கிற கொடிகளைத் தோட்டக்காரர் என்ன செய்கிறார்? கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம் பண்ணுகிறார் என்று நாம் பார்த்தோம். சுத்தம்பண்ணுகிறாரென்பது குறுகிய சொற்றொடராக இருந்தாலும் அந்த அனுபவம் நீண்டதும் வேதனை கொடுப்பதுமாகும். அவர் கனி கொடுக்கிற கொடிகளையே சுத்தம்பண்ணுகிறார். ஆனால் கனிகொடாத கொடிகள் நெருப்புக்கு வைக்கப்பட்டுள்ளபடியால் இஷ்டம்போல வளரவிடுகிறார். சுத்தம்பண்ணுவது எவ்வாறு? யோவான் சுவிசேஷம் 15-ம் அதிகாரத்தில் கிறிஸ்து அதைக் குறித்து தெளிவாகக் கூறியுள்ளார். தோட்டக்காரர் கத்தியோ, கத்திரியோ எடுத்து காய்ந்த கொம்புகள், நோய்கொண்ட பாகங்கள், தேவையற்ற தளிர்கள், கனிகளைத் தடுக்கும் இலைகள் முத

லியவற்றை வெட்டிப்போடுகிறார். விசுவாசிகளுக்கு வரும் அனுபவத்தையே இது குறிப்பிடுகிறது. தோட்டக்காரருடைய கத்தி நம்முடைய வாழ்க்கையைத் தொட்டதில்லையா? தேவனுடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருக்கும்போது இருபுறமும் கருக்குள்ள பட்டயமாகிய தேவ வசனம் நம்மைக் குத்துவதோடு, குறிப்பாக நம்மை அலைக்கழிக்கும் பெலவீனங்களையும் கெட்ட பழக்கங்களையும் தாக்குகின்றது. மேலும் கர்த்தருடைய ஊழியத்தில் கவனக்குறைவு காண்பிக்கும்போதும், ஆண்டவருக்குக் கீழ்ப்படியாதிருக்கும்போதும் தேவனுடைய ஆவியானவர் உள்ளாக நம்மைச் சுத்தம் பண்ணுகிறார் கருணையுள்ள தோட்டக்காரர் தன்னுடைய தோட்டத்தில் உலாவி நம்மைத் தொடர்பாக சுத்தம்பண்ணுகிறார்.

பரிசுத்தாவியானவர் தங்குகிற இடத்தில் காணப்படுகிற அசுத்தங்களையெல்லாம் அவர் திட்டமாய் சுத்தம்பண்ணுகிறார். உள்ளான சிட்சையின் மூலமாக சாதிக்க முடியாத காரியங்களைக் கிருபையுள்ள ஆண்டவர் துன்பம் துக்கம் பாடுகள் போன்ற வெளியரங்கமான அனுபவங்களால் செய்து முடிக்கிறார். துன்பப்படவேண்டியது அவசியமானதால் பலவிதமான சோதனைகளினாலே (1 பேது. 1:6) தேவன் நம்மைச் சுத்தம்பண்ணுகிறார். நாம் பரலோக பிள்ளைகளானபடியாலே இவ்விதமாய்ச் சுத்தம்பண்ணப்படுகிறோம் கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார். எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப் பிள்ளைகளாயிருப்பீர்களே. எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும்

பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதி யாகிய சமாதான பலனைத் தரும் (எபி. 12:6,8,11) என்று வாசிக்கிறோம்.

தேவனுடைய நோக்கத்தைக் கவனிக்க வேண்டும். அவர் மனப்பூர்வமாய் மனுப்புத்திரரைச் சிறுமையாக்கிச் சஞ்சலப்படுத்துகிறதில்லை (புல. 3:33). கிறிஸ்து கூறுகிறதுபோல அதிக கனிகளைக் கொடுக்கும்படிக்கே அவர் சுத்தம்பண்ணுகிறார். இங்குதான் தேவனுடைய நல்ல நோக்கத்தைக் காண்கிறோம். நல்லகனி கொடுக்கிற அருமையான கொடி இன்னுஞ்சிறந்து செயலாற்றி அதிகக் கனிகளைக் கொடுக்க அவர் ஆசிக்கிறார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். சிட்சையினாலேயே இதை நிறைவேற்ற முடிகிறது.

ஒரு அருமையான கிறிஸ்தவனுடைய வாழ்க்கையில் திடீரென்று ஒரு துக்கமோ விபத்தோ உள்ளான சஞ்சலமோ ஏற்படுகிறது. இதைக் குறித்து நாமும் கலங்குகிறோம் ஆனால் உபத்திரவத்தின் குகையிலிருந்து அந்த நண்பர் வெளியே வரும்போதோ அவருடைய வாழ்க்கையில் பெரும் மாற்றத்தைக் காண்கிறோம் மிகவும் கரிசனையோடு அதிகக் கனிகளைக் கொடுக்க ஆரம்பிக்கிறார். இவ்வாறாக தேவன் தாம் நேசிக்கிற மக்களைப் பற்பலவிதமான சிட்சைகளின் மூலமாக மிகவும் அதிகமாகச் சுத்தப்படுத்தி அவர்களிலிருந்து அதிகக் கனிகளைப் புறப்படுவிக்கிறார். கனிகொடாத மக்களோ தங்களுடைய மனதும் மாமிசமும் விரும்பினதுபோல வாழ்ந்து இறுதியில் அழிவை அடைவார்கள்.

———

9. மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்.

மத். 25:40

பசியாயிருந்தேன், எனக்குப் போஜனங் கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள், வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிலிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள். மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் (மத். 25:35,36,40). இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நற்கிரியைகளின் அடிப்படையில் கிறிஸ்தவ சேவையின் விரிவான எல்லையைக் காணலாம். வீட்டிற்குள் செய்யப்படும் நற்கிரியைகளை மாத்திரம் கிறிஸ்து குறிப்பிடாது வியாதியஸ்தரை விசாரிக்கச் செல்வது, காவலிலிருப்பவரைக் காணச்செல்வது போன்ற செயல்களையும் கிறிஸ்து நம்மிடம் எதிர்பார்க்கிறார்.

பாடுகளிலிருப்போரை நாம் தேடிச்செல்ல வேண்டுமா? அல்லது அவர்கள் நம்மண்டை வந்தால் மாத்திரம் நாம் உதவ வேண்டுமா? என்கிற காரியத்தில் கிறிஸ்தவர்களுக்குள் கருத்து வேற்றுமை உண்டு. வீட்டுக்குரிய கடமைகளில் தாங்கள் ஈடுபட்டிருப்பதாகவும் ஆகையால் நற்கிரியைகள் செய்யத் தங்களுக்கு வாய்ப்பில்லையென்றும் அங்கலாய்க்கும் ஒரு கூட்டத்தாருண்டு. நம்மைச் சுற்றி

யிருப்போரின் மத்தியிலேயே நாம் அதிக நன்மைகளைச் செய்யமுடியும் என்பதை இவர்கள் கண்டுகொள்வதில்லை. இன்னொரு கூட்டத்தாரோ விசாலமான செயல்பாடுகளில் நம்பிக்கையற்றவர்களாய் தங்களுக்கு அருகிலுள்ளவர்களுக்கே இரக்கம் காண்பிக்கிறார்கள். ஆனால் சாக்குப்போக்குக் கூற விரும்பாது உண்மையை அறிந்துகொள்ள விரும்புகிற ஆத்துமா கிறிஸ்துவின் வார்த்தைகளை கவனிக்க வேண்டும். நான் வியாதியாயிருந்தேன், காவலிலிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள்.

உன்னைப்போல பிறனை நேசி என்கிற அன்பின் கட்டளையை அனுசரிக்க விரும்புகிறவர்கள் எல்லா மக்களுக்கும் சூழ்நிலைக்கேற்றவாறு தொண்டு செய்வார்கள். நம்முடைய வீட்டாருக்கும் நண்பர்களுக்கும் மாத்திரம் நாம் நன்மை செய்தால் போதாது. ஏனெனில் ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா? (மத். 5:46). நமக்கு அந்நியமானவர்களுக்கும் உதவிசெய்யவேண்டும். கிறிஸ்து உலகத்தில் வாழ்ந்தபோது அன்பின் கட்டளைக்குத்தப்ப முயற்சித்த ஒரு வாலிபன் அவரைப்பார்த்து என்னுடைய அயலான் யார் என்று கேட்டான். அதற்குப் பிரதியுத்தரமாக கிறிஸ்து நல்ல சமாரியனுடைய உவமையைக்கூறி, யூதருக்கும் சமாரியருக்குமிடையே வேற்றுமை அதிகமாயிருந்தாலும், நம்முடைய தொண்டுள்ளம் இவை எல்லாவற்றிற்கும் அப்பால் செயல்படவேண்டுமெனக் கற்பித்தார்.

கிறிஸ்துவோடு ஐக்கியம் கொள்ளும்போது தேவனுக்குப் பிரியமான நற்கிரியைகள் செய்ய வேண்டும். அதோடு வீட்டில் கொடுக்கப்பட்டுள்ள உத்திரவாதம் எதுவாயிருந்தாலும் அதை உண்மையோடும் பொறுமையோடும் செய்ய வேண்டும். எல்லாச் சூழ்நிலைகளிலும் நன்மை செய்ய நமக்கு

வாய்ப்பு உண்டு. அவற்றில் நாம் உண்மையுள்ளவர்களாயிருக்கும்போது தேவன் அதில் பிரியப்படுகிருர். ஏனென்றுல் ஒரு தகப்பனுகவோ தாயாகவோ குழந்தையாகவோ வேலையாளாகவோ ஆண்டவரே நம்மை அமர்த்தியுள்ளார். இதற்கு அப்புறமாக வியாதியிலும் வறுமையிலும் அறிவீனத்திலும் வாழும் மக்களுடைய ஆவிக்குரிய தேவைகளையும் சரீரத் தேவைகளையும் நாம் சந்திப்போமேயானுல் ஒருநாள் கிறிஸ்து நம்மைப் பார்த்துப் புகழ்ந்து கூறி நான் வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள்; நான் காவலிலிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் என்பார்.

சுருங்கச் சொன்னுல் லூத்தர் கூறியுள்ளதுபோல கிறிஸ்தவனுடைய கிரியைகளுக்குப் பெயரில்லை. அதாவது, விசுவாசிகள் குறிப்பிட்ட சில கிரியைகளை மாத்திரம் தெரிந்து கொள்வதில்லை. மாயமாலக்காரரோ ஏதாவது சில கிரியைகளை மாத்திரமே செய்வோமென்பார்கள். அவைகள் தவிர வேறு எந்த நன்மைகளையும் அவர்களிடம் எதிர்பார்க்கமுடியாது. ஆனுல் விசுவாசியோ அன்பின் அடிப்படையில் எல்லாவித நற்கிரியைகளையும் செய்ய முற்படுவான்.

கிறிஸ்து நாம் செய்கிற சிறிதும் பெரிதுமான எல்லாக் கிரியைகளிலும் பிரியங்கொண்டவராக, நீங்கள் அதை எனக்கே செய்தீர்களென்று சொல்லுகிருர். ஆகவே இரட்சகருக்காகவே இந்த ஏழை மனிதனுக்கு ஆடை அளிக்கிறேன், அன்பருக்காகவே அறியாமையிலிருக்கும் இந்த மனிதனுக்கு அறிவுரை கூறுகிறேன், நேசருக்காகவே நிர்ப்பந்த நிலையிலிருக்கும் மனிதனைச் சந்திக்கச் செல்லுகிறேன் என்றெல்லாம் நமக்குள்ளே எண்ணி நற்கிரியைகளைச் செய்வது எத்தனை இன்பமானது!

நம் இருதயத்திற்குள் அன்பும் ஆறுதலும் இருக்குமட்டும் நாம் செய்வதெல்லாம் நமக்கு இன்பம் அளிக்கும். ஆயினும் நாம் செய்த கிரியைகளை ஆண்டவர் பாராட்டும்போது நாம் ஒன்றும் செய்யவில்லையென்றே நமக்குத் தோன்றும். எனவே நாம் அவரைப் பார்த்து, ஆண்டவரே உம்மை சேவிக்கும் பாக்கியத்தை எப்போது பெற்றோம்? என்று கேட்போம். அவரோ மாறுத்தரமாக, மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.

---

10. எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை. ரோம. 3:20.

ஆங்கிலத்தில் எந்த மாம்சமும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே நீதிமானாக்கப்படுவதில்லை என்று கூறப்பட்டுள்ளது. மாமிசபிரகாரமான பிறப்பை நமக்கு நினைப்பூட்டவே அப்போஸ்தலன் மாமிசம் என்னும் பதத்தை பயன்படுத்தியுள்ளார். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும் (யோவா. 3:6) என்று கிறிஸ்து கூறினார். எல்லா மாம்சமும் என்று கூறும்போது ஆதாமின் வீழ்ச்சிக்குப் பின்னான மனித தன்மையையே குறிப்பிடுகிறது. அது சர்ப்பத்தின் சந்ததியாய், தேவனுடைய ஜீவனற்றதாயிருக்கும். இயற்கையிலுள்ள

புல் செடி மரங்களும், மீன் பறவை மிருகங்களும் தங்கள் தங்கள் ஜாதியின்படியே இனவிருத்தி செய்யும்படி படைப்பின் கர்த்தர் கட்டளையிட்டார். இவ்வாறாக சர்ப்பம் சர்ப்பத்தையும், புலி புலியையும் பிறப்பிப்பதுபோலவே விழுந்துபோன ஆதாமின் சந்ததி அவனுடைய தன்மையிலேயே பிறக்கின்றது. எனவே அவர்கள் சர்ப்பத்தின் சந்ததியாய், தேவனுக்குப் பகைஞராய், தெய்வீகத்தையும் அவரது சித்தத்தையும் எதிர்ப்பவர்களாய்த் தீமை செய்யும் நாட்டம் கொண்டவர்களாய் வாழுகிறார்கள். ஆகவே மனிதர்களைக் குறித்து தேவன் வேதத்தின் ஆரம்பத்திலேயே, மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் (ஆதி. 6:5) கூறினார். பிறவியிலே எல்லா மனிதர்களும் இப்படிப்பட்டவர்களே.

இதை அறிந்துகொண்டால்தான் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளால் ஒரு மனிதனும் நீதிமானாக்கப்படுவதில்லை என்று அப்போஸ்தலன் திட்டமாய்க் கூறியதின் கருத்தை அறிந்து கொள்ள முடியும். மனிதன் பிறவியிலேயே பாவம் நிறைந்தவன். தேவன் அவன் முன்பாக பரிசுத்த பிரமாணமாகிய கண்ணாடியைக் காண்பிக்கிறார். இந்தக் கண்ணாடி ஒரு சிறிய அசுத்தமான எண்ணத்தைக்கூட மறைக்காது; தேவனுக்கு நேராகவோ அயலகத்தாருக்கு நேராகவோ காண்பிக்கும் ஒரு சிறிய அசட்டையைக்கூட இது ஒழிக்காது; அதற்குப் பதில் நாம் தேவனை முழு இருதயத்தோடும் நேசிக்கவேண்டுமென்றும், நம்முடைய அயலகத்தார் அனைவரையும் எந்தவித விதிவிலக்குமின்றி எல்லா வேளைகளிலும் நம்மைப்போல நேசிக்கவேண்டுமென்றும் தேவனுடைய பிரமாணம் எதிர்பார்க்கிறது. இவ்வாறி

ருக்க தாஞக யாரராவது தேவனே பிரீதிப்படுத்தக் கூடுமோ?

நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினுல் மனிதன் ஏன் நீதிமாஞக்கப்பட முடியாது என்பதற்குரிய இன்னெரு தெளிவையும் இறுதியாக நாம் கூறவேண்டும். இதைக் குறித்து பலரும் சிந்திப்பதில்லை. தேவனுடைய நியாயப்பிரமாணம் நமக்குத் தேவைப்படுகிறது என்பதே நம்மை ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாக்கப் போதுமானது நாம் நல்லவர்களல்லாதபடியினுலேயே தேவன் நமக்குக் கற்பனைகள் கொடுத்திருக்கிருர் என்பது தெளிவாகிறது. மேலும் நியாயப்பிரமாணத்தின் அச்சுறுத்தலுக்குப் பயந்தோ தேவனுடைய வாக்குறுதிகளால் கவரப்பட்டோ தீமையை விட்டுவிலகி நன்மை செய்வோமேயாகில் அது நம்முடைய பக்திக்குப் பங்கம் விளைவிப்பதாகும். இருதயத்தின் உள்ளான நன்மையினுலேயே நாம் புறம்பே நன்மை செய்யவேண்டும் அல்லவென்ருல் இருதயத்திற்குள் தீமையை வைத்துக்கொண்டு புறம்பே நன்மைசெய்கிற மாய்மாலக்காரராவோம். எடுத்துக்காட்டாக யாராவது நம்மிடம் ஒரு குழந்தையைத் தந்துவிட்டு இது களவு செய்யாதபடி ஒருவாரம் கவனித்துக் கொள்ளுங்கள்என்று சொல்லுகிருர்களென்று வைத்துக்கொள்ளுவோம். அக்குழந்தை ஒன்றையும் திருடாதபடி மிகவும் கருத்தாக ஒருவார காலம் அதைக் காத்துவிட்டு தாயிடம் திரும்பக் கொடுக்கும்போது அக்குழந்தை ஒன்றையும் திருடவில்லையென்று சொல்லுவது அதற்குரிய நற்சான்ருகுமா? அனுதினமும் அக்குழந்தையைக் காவல்புரிவது எத்தனை நிர்ப்பந்தமானது! அதுபோல்வே நியாயப்பிரமாணமும் நமக்குச் செய்கிறது.

களவு செய்யாதே, கொலே செய்யாதே, அந்நிய தேவர்களே வணங்காதே, விபசாரம் செய்யாதே,

பொய் சாட்சி சொல்லாதே என்று நியாயப்பிரமாணம் நம்மோடு கூறுவது அந்த குழந்தையைக் காவல் காத்ததுபோலத்தானே. நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதே நாம் கள்ளர் கொலை பாதகர் பொய்யர் விபசாரக்காரர் என்பதற்குரிய சான்றுகும். களவு செய்யாதிருப்பாயாக என்னும் கற்பனை நம்முடைய காதுகளுக்குள்ளே, நீ களவு செய்கிறவன் ஆகவே உன்னை நான் காவல் புரிகிறேன் என்று மெதுவாய்க் கூறுகிறது. அது போலவே விபசாரம் செய்யாதிருப்பாயாக என்னும் கற்பனை உனக்குள்ளே தீய ஆசையிருக்கிறது; அதை நீ பின்பற்றுதே என்று கூறுகிறது. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் என்னும் கற்பனை நீ என்னை நேசிக்கவில்லை; ஆனுல் நீ அவ்வாறு செய்யவேண்டுமென்று கட்டளையிடுகிறேன் என்று கூறுவதுபோலாகும். இவ்வாருக ஒவ்வொரு கற்பனையும் நம்மை ஒவ்வொரு விதத்தில் குற்றஞ்சாட்டுகிறது.

பாவச்செயல்களை மாத்திரமல்லாது பாவ எண்ணங்களையும் ஆவல்களையும் விருப்பங்களையும் கர்த்தராகிய ஆண்டவர் வெறுக்கிருர். தீயச்செயல்களை கட்டுப்படுத்துகிறதையல்ல அவற்றை இருதயத்திலிருந்து ஒழிப்பதையே அவர் விரும்புகிருர். நாம் அதிகமாய் நன்மையை நேசிப்பதின் அடிப்படையில் நாம் நன்மைக்கு நேராகவே சாய்வு கொள்வதினிமித்தம் நன்மை செய்யவேண்டும். அல்லாமல் வற்புறுத்தலின் பேரில் நன்மை செய்ய நாம் எதிர்பார்க்கப்படவில்லை. இவ்வாருக நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதே நாம் தேவனுக்கு முன்பாக நீதிமான்களல்ல என்பதற்குரிய தெளிவாகும். நியாயப்பிரமாணத்துக்குப் பயந்து நாம் தீமைக்கு விலகி நன்மை செய்வது நமக்குள்ளே நியாயப்பிரமாணமில்லையென்பதைத் தெளிவாக்குகிறது. இவை

களின் மூலமாக அப்போஸ்தலனுடைய வார்த்தை களை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளமுடியும்.

———

11. அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று எழுதியிருக்கிறபடி, அவன் தான் விசுவாசித்தவருமாய் மரித் தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவரு மாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல் லாருக்கும் தகப்பனானான். ரோம. 4:17.

ஆபிரகாம் சர்வ வல்லவரான தேவனில் விசு வாசம் வைத்தார். மரித்தோரை உயிரோடே எழுப் பவும் தேவனால் முடியும் என்று விசுவாசிக்கிற ஒரு வருக்கு அவரால் எல்லாம் கூடும் என்று விசுவா சிப்பது எளிது. மரித்தோரை உயிரோடே எழும் பப்பண்ண வல்லவராகிய தேவன் ஏன் வயதான ஆபிரகாமுக்கும் மலடியான சாராளுக்கும் ஏராள மான குழந்தைகளைக் கொடுக்கவில்லை? தேவன் அவ் வாறு செய்திருந்தால் தான் பலிசெலுத்தி நெருப் புக்கு இரையாக்கப்போன ஈசாக்கின் மூலமாகத் தனக்குத் திரளான சந்ததியைத் தருவதாக தேவன் கொடுத்திருந்த வாக்குறுதியைக் குறித்து ஆபிர காம் சந்தேகிக்க இடமிருந்திருக்காதே! தேவன் நிச்சயமாய் தன் குமாரனாகிய ஈசாக்கை உயி ரோடே எழுப்புவார் என்று ஆபிரகாம் திட்ட மாய் விசுவாசித்தார். மேலும் தேவன் மரித்

தோரை உயிர்ப்பித்து, இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல் அழைக்கிறவர். — அதாவது தேவன் ஒரு காரியத்தைச் செய்ய நிர்ணயம் பண்ணி விட்டால் அது இல்லாதிருக்கும்போது இருக்கிறது போலவே தேவன் பேசுவார் என்றும் அவர் விசுவாசித்தார். அந்நிலையில்தான் தேவன் இல்லாத காரியங்களைக் குறித்து ஆபிரகாமோடே பேசி அவருக்கு திரளான ஜாதிகளின் தகப்பனென்னும் கருத்துள்ள ஆபிரகாம் என்ற பெயரைக் கொடுத்தார். தன்னுடைய வாக்குத்தத்தத்தின்படியே நடக்கப் போகிறவைகளை ஆபிரகாமில் தேவன் முன்கூட்டியே கண்டிருந்தார்.

பெலவீனமான நம்முடைய விசுவாசத்திற்கு அறிவுரையும் ஊக்கமும் இந்த வசனத்திலிருந்து பெற்றுக்கொள்ளுகிறோம். தேவனைக்குறித்த மேற்கூறிய அறிவு நமக்கு இருக்குமேயானால் நாமும் ஆபிரகாமியரே. தேவன் தம்முடைய வார்த்தையினால் வானத்தையும் பூமியையும் படைத்து, இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்னார் (2 கொரி 4:6). ஒன்றுமில்லாய்மையிலிருந்து எல்லாவற்றையும் உண்டாக்கஅவர் வல்லவராயிருந்தார். மரணத்திலிருந்து ஜீவனையும், பாவத்திலிருந்து நீதியையும் உருவாக்க அவரால் கூடும். பிசாசின் அடிமைத்தனத்திலிருக்கும் மக்களுக்கு மகிமையான விடுதலையளித்து தேவனுடைய பிள்ளைகளாக அவர்களை அவர் ஆக்குவார். உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்: அவைகளைச் சிருஷ்டித்தவர் யார்? அவர் அவைகளின் சேனையை இலக்கத் திட்டமாகப் புறப்படப்பண்ணி, அவைகளையெல்லாம் பேர் பேராக அழைக்கிறவராமே; அவருடைய மகா பெலத்தினாலும், அவருடைய மகா வல்லமையினாலும், அவைகளில் ஒன்றும் குறையாமலிருக்கிறது (ஏசா. 40:26) என்று தீர்க்கதரிசி கூறுகிறார். வானத்தின் நட்சத்

திரங்களை தேவன் பெயர்சொல்லி அழைக்கிறது போலவே, ஆபிரகாமுக்குக் குழந்தை பிறக்கும் முன்னமேயே அவருடைய எண்ணிறந்த சந்ததியை அவர் பேர்பேராக அறிந்திருந்தார். ஏனெனில் தேவனுக்கு கடந்தகாலமும் வருங்காலமுமில்லை. அவருக்கு எல்லாமே நிகழ்காலந்தான். நம்முடைய வருங்காலமும் அவருக்கு நிகழ்காலமே.

ஆபிரகாம் சர்வ வல்லவரையும் அவருடைய வாக்குகளையும் நம்பினபடியால் அவர் காணுதிருந்தவைகளையும் விசுவாசித்தார். குறிப்பாகத் தன்னுடைய உணர்ச்சிகளுக்கும் அறிவுக்கும் எதிரான காரியங்களையும் விசுவாசித்தார். இவ்வாருகவே தேவனுடைய வாக்குறுதிகள் விசுவாசிகளுடைய அறிவுக்கும் உணர்ச்சிகளுக்கும் எதிராயிருந்தாலும் அவற்றை அவர்கள் நம்பவேண்டும். இதுவே சர்வ வல்லமையும் உண்மையுமுள்ள தேவனில் நாம் வைக்கும் விசுவாசம். இதைக்குறித்து லுத்தர் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார்: கிறிஸ்தவர்கள் காலின் கீழ்மிதிக்கப்படும்போதும் சிரச்சேதம்செய்யப்படும்போதும் அவை மகிமையும் மகிழ்ச்சியுமான அனுபவமாய்த் தோன்ருது. ஆனல் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிற தேவன் துக்கத்திலிருந்து மகிழ்ச்சியையும் துன்பத்திலிருந்து இன்பத்தையும் உருவாக்குவார். மரணத்தையும் பாதாளத்தையும் பார்த்து நீ ஜீவனுயிரு என்றும், நரகத்தைப் பார்த்து நீ பரலோகமாகவும் பேரின்பமாகவும் மாறு என்றும், விஷத்தைப் பார்த்து நீ விலையேறப்பெற்ற ஔஷதமாக மாறு என்றும், பிசாசையும் உலகத்தையும் பார்த்து என் மக்களுக்கு சேவகராகப் பணிபுரியுங்களென்றும் கட்டளையிடுவார் என்பதுவே அவரது கூற்று.

பிசாசுக்கு ஒப்படைக்கப்பட்ட ஒரு ஆத்துமாவின் இருதயமும் எண்ணமும் பாவம் பாரம் துக்

கம் முதலியவற்ருல் நிறைந்திருந்தாலும் அந்த ஆத்துமாவைத் தூய்மையாயும் சுத்தமாயும் மாற்ற தேவனுல் கூடும். அருவருப்பான ஒரு ஆத்துமாவைத் தம்முடைய ஆலயமாக்கவும் அவராலே ஆகும். தமக்கு ஆகாதவர்களைத் தமக்கு மிகவும் பிரியமானவர்களாக மாற்ற வல்லவர் அவர். மரணத்துக்கும் அழிவுக்கும் ஆளான ஆத்துமாக்களை இரட்சித்து தூதர்களோடு மகிமை அனுபவிக்க மாற்றக்கூடியவர் அவர். மரித்தவர்களை உயிரோடெழுப்பி இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல அழைக்கிற தேவன் ஆபிரகாமுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி அவருடைய சந்ததியைப் பூமியெங்கும் பரவச்செய்தது போலவே இன்றும் பெருங்காரியங்களைச் செய்ய அவரால் கூடும். ஆபிரகாமின் விசுவாசத்தை ஆண்டவர் நமக்குத் தந்தருளட்டும்!

விசுவாசமாகிய விலையேறப்பெற்ற ஈவை நாம் மிகவும் கரிசனையோடு தேடவேண்டும். அடிக்கடி கருதலோடும் இருதய பூர்வமாகவும் இந்த ஈவுக்காக ஆண்டவரை வேண்டி அவரைத் தேடுவதோடு தேவனுடைய வார்த்தைகளையும் செய்கைகளையும் கருத்தாய்ச் சிந்திக்கிறவர்கள் விசுவாசத்தில் வளருவதோடு ஆவியிலும் பெலப்படுவார்கள். தங்களுக்கிருக்கிற எளிய விசுவாசத்தில் திருப்திகொண்டு இந்த சிறந்த ஈவைக்குறித்து அஜாக்கிரதையாய் வாழுகிறவர்களுடைய விசுவாசமோ படிப்படியாகக் குன்றி இறுதியில் முழுதும் மாய்ந்துவிடலாம். இத்தகைய நிலை நமக்கு வராதிருக்கட்டும்.

——

12. தேவமகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மைபாராட்டுகிறோம். ரோம. 5:2.

தேவ மகிமை என்று அப்போஸ்தலன் குறிப்பிடுவது தேவனுக்குள்ள மகிமையென்றும் தேவன் தம்முடைய விசுவாசிகளுக்குக் கொடுக்கிற மகிமையென்றும் இருவித பொருட்படலாம். ஆனால் இந்த இரு மகிமையும் ஒன்றே, தேவன் நமக்கு அவருடைய மகிமையையே தந்தருள்வார். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன் என்றும், நீர் எனக்குத் தந்த மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன் என்றும் இயேசு பிதாவிடம் ஜெபித்தார். (யோவா. 17:22,24,). இவ்வார்த்தைகளில் கூறப்பட்டுள்ள வாக்குறுதியை யார்தான் புரிந்துகொள்ள முடியும்?

நாம் மிகவும் கருத்தாகக் கவனிக்கவேண்டிய ஒரு காரியத்தை இங்கு காண்கிறோம் இந்த வசனத்துக்கு முந்திய வேதபாகத்தில் விசுவாசிகளின் பரிசுத்தமாகுதலையும் மற்றும் நற்கிரியைகளையும் குறித்து ஒரு வார்த்தை போலும் இந்த நிருபத்தில் எழுதப்படவில்லை. ஆனால் அவைகளுக்கு முன்பே தேவ மகிமையை அடைவோமென்கிற நம்பிக்கையினாலே மேன்மை பாராட்டுகிறோம் என்று கூறுகிறார். விசுவாசத்தினால் வருகிற, பரிசுத்தமாகுதலினால் இந்த நம்பிக்கை ஏற்படவில்லையென்பதை அவர் தெளிவுறுத்துகிறார். விசுவாசத்தினாலே நாம்

நீதிமான்களாக்கப்பட்ட உடனேயே தேவனோடு ஒப்புரவாகி தேவ மகிமையை அடையும் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளுகிறோம் என்பதே அவர் கூறும் கருத்து. கிருபையினால் மறுபடியும் பிறந்த உடனேயே தேவனுடைய பிள்ளைகள் பரலோக சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். பெந்தெகொஸ்தே தினத்தில் பேதுருவின் செய்தியைக் கேட்ட மக்களில் விசுவாசித்தவர்கள் அனைவரும் உடனடியாக மகிழ்ச்சியோடு அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும் தரித்திருந்து ஒரு மனதோடு தேவனைத் துதித்தார்கள். எத்தியோப்பிய மந்திரியும், பிலிப்பி சிறைச்சாலைக்காரனும் விசுவாசிகளான உடனேயே சந்தோஷப்பட்டார்கள் என வாசிக்கிறோம் (அப். 8:39; 16:34). கிருபையில் முதிர்ச்சியடையவோ விசுவாசத்தின் கனிகளைக் கொடுக்கவோ அவர்கள் காத்திருக்கவில்லை. கிறிஸ்துவுக்குள்ளான கிருபை அவர்களுக்கு அறிவிக்கப்பட்டவுடனே ஆனந்தமும் ஆசீர்வாதமும் பெற்றார்கள். தற்கால கிருபையையும் வருங்கால மகிமையையும் விசுவாசியாதவர்கள் மகிழ்ச்சியான உள்ளம் பெற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் இரண்டாவதுள்ளத்தை விசுவாசியாதவர்களுக்கு முதலாவதுள்ளதால் பயனில்லை.

நாம் விசுவாசித்தவுடனே பரலோக பதவிக்கு அருகதையுடையவர்களாக மாட்டோமென்றும், கிருபையில் முதிர்ச்சியும் ஆவிக்குரிய கனியும் அதற்குத் தேவையென்றும் கற்பிக்கிற ஆபத்தான வஞ்சகத்திலிருந்து நம்மை நாம் காத்துக்கொள்ள வேண்டும். வேத வசனத்தில் சில இடங்களில் கூறப்பட்டுள்ளதைப்போல ஆவிக்குரிய வளர்ச்சி அதிக மகிமையைக் கொண்டுவரும் என்பது உண்மைதான். ஆயினும் நாம் விசுவாசிகளான உடனேயே விசுவாசத்தின் மூலமாக தேவனுடைய இராஜியத்

தையும் புத்திர சுவிகாரத்தையும் பிரஜா உரிமைக ளையும் பெற்றுக்கொள்ளுகிறோம். அதற்கப்புறம் கிருபைக்குள்ளே எவ்வளவு காலம் வாழ்ந்தாலும் நித்திய மகிமை பெற்றுக்கொள்ளுவதற்கு வேறு காரணங்கள் தேவை இல்லை. ஒரு பாவி விசுவாசத் தினால் கிருபை பெற்றவுடனே கலியாண வஸ்திரம் தரித்து மகிமைக்குள்ளே பிரவேசிக்கிறான். சிலுவை யிலறையப்பட்ட கள்ளர்களில் ஒருவனும் கிறிஸ்து வுக்காக அதிகமாய்ப் பாடனுபவித்த யோவானும் ஒரே கிருபையினாலே நித்திய ஜீவனாகிய ஈவைப் பெற்றுக்கொண்டார்கள். பவுல் அப்போஸ்தலன் கொலோசேயருக்கு எழுதிய நிருபம் மூன்றும் அதி காரத்தில் அங்குள்ள திருச்சபை மக்களைக் கண் டித்து எழுதியபோதிலும் ஒளியிலுள்ள பரிசுத்த வான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கின (கொலோ. 1.12) பிதாவை ஸ்தோத்திரியுங்கள் என்று நிரு பத்தின் ஆரம்பத்தில் அறிவுரை கூறுகிறார்.

உலகப்பிரகாரமான பிள்ளைகள் பிறப்பின் அடிப்படையில் பெற்றோருடைய சொத்தை சுதந்த ரிக்கிறதுபோலவே விசுவாசத்தினாலும் கிருபையினா லும் மறுபடியும் பிறந்த தேவனுடைய பிள்ளைக ளுக்கு இரட்சிப்பையும் நித்திய பேரின்பத்தையும் சுதந்தரிக்கும் நம்பிக்கையை நாமும் சொந்தமாக்கி அதில் மகிழ்ச்சியடைவோமாக.

இந்த நம்பிக்கையினிமித்தம் நாம் தேவனுக்கு மகிமை செலுத்துகிறோம். இதினிமித்தமே நம்மு டைய ஆவிக்குரிய போரில் நாம் அதிக வல்லமைய டைகிறோம். நம்முடைய போராயுதத்தில் இரட்சணி யமென்னும் தலைச்சீரா (எபே. 6:17) மிகவும்முக்கிய மானதாகும். நாம் உண்மையிலே கிரீடத்தைப் பெற்றுக்கொள்ள போராடுவோமேயாகில் இவ்வுல

கத்தில் வரும் உபத்திரவங்களால் நாம் களைப்படைவதோடு பகைவன் அனுப்பும் அக்கினியாஸ்திரங்களால் படுகாயங்களும் அடையலாம். இவ்வித சமயங்களில் வருங்காலத்தைக் குறித்த நம்பிக்கை நம்முடைய ஆவிக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும். மகிழ்ச்சியான வீடு மகிமையான கிரீடம் போன்றவற்றைக் குறித்த காட்சி நம்முடைய பார்வையில் மங்கிப்போக ஆரம்பிக்கும்போது வருங்கால நம்பிக்கையின் ஆதிகாரணரிடம் ஓடிச்செல்லவேண்டும். நம்முடைய தேவன் உண்மையும் நம்பிக்கையும் உள்ளவரானால் நமது நம்பிக்கை அபத்தமாகாது.

நம்மைச் சுற்றியுள்ள காரியங்களைக் கவனித்தவர்களாய், தேவன் மனிதனை வீணாகவா படைத்தார்? சிறிது காலம் உலகத்தில் வேதனை அனுபவித்து அழிந்துபோவதைத்தவிர வேறு சிறந்த நோக்கத்திற்காக ஆண்டவர் அவனைப் படைக்கவில்லையா? என்ற கேள்விகளைக் கேட்கவேண்டும். மனித ஆத்துமாவின் சிறந்த அறிவுப் புலன்கள் அவன் படைக்கப் பட்டதில் சிறந்த நோக்கமுண்டென்பதைத் தெளிவாக்குகின்றன. தேவனும் தம்முடைய அருமைக் குமாரனைக் குரூரமான மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தது நம்முடைய இம்மைக்குரிய வாழ்வுக்காக மாத்திரமா? ஓய்வு நாளையும் வேத வசனங்களையும் மற்றும் சாக்கிரமந்துகளையும் ஆண்டவர் நமக்கு அருளியது நம்முடைய சரீர நன்மைக்காகவா? நம்முடைய குற்றத்தை உணர்த்தவும் நம்மை ஆறுதல்படுத்தவும் பரிசுத்தமாக்கவும் தேவன் தம்முடைய ஆவியை தந்திருக்கிறாரே! நாம் தவறிப்போகும்போது நம்மை அவர் சிட்சிக்கிறாரே! அவரவருக்கான சிலுவையை அவர் அளித்திருக்கிறாரே! இவையெல்லாம் வருங்கால மேன்மையைக்குறித்து நமக்கு முன்னறிவிக்கவில்லையா? மேலும் நித்தியஜீவனைக் குறித்து ஆண்டவர்

கொடுத்துள்ள எல்லா வாக்குத்தத்தங்களும் ஏமாற்றுதானே? நம்பிக்கையினாலே உண்டாகும் தைரியத்தையும் மேன்மை பாராட்டலையும் முடிவுபரியந்தம் உறுதியாய் பற்றிக்கொண்டிருக்க (எபி. 3:6). நமக்குத் தேவையான ஜெபம், கர்த்தாவே எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணியருளும் (லூக். 17:5) என்பதுவே.

---

13. என் இருதயத்தில் அக்கிரமசிந்தைகொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்குச் செவிகொடார். சங். 66:18.

தேவனுடைய புத்திர சுவிகாரத்தைக் குறித்து நம்புவது அனேகருக்கு அரிதாயிருக்கிறது. வாழ்க்கையில் நேரிடும் பலவிதமான காரியங்களினால் அவர்கள் குழப்பமடைகிறார்கள். ஆகவே தங்களுடைய ஆத்தும நிலையைக் குறித்து அவர்கள் தெளிவாக அறிந்திருப்பது நலம். தாங்கள் விட்டுவிட விரும்பாத ஒரு பாவப்பழக்கத்தினாலேயே அவர்களுடைய வாழ்க்கையில் நம்பிக்கையிழப்பு நேரிடலாம். அது அயலாரோடு ஒப்புரவாக விரும்பாத விரோத மனப்பான்மையாயிருக்கலாம். அல்லது மாம்ச இச்சைக்குரிய தீமையாயிருக்கலாம். அல்லது தொழிலிலோ அலுவலிலோ காண்பிக்கும் உண்மைக்கேடாயிருக்கலாம். சுருங்கச்சொன்னால் இவர்கள் மாம்சத்தின் கிரியைகளை (கலா. 5:19) நிறைவேற்றி, அவைகளில் தொடர்ந்து வாழ ஆசிக்கிறார்

கள். இப்படிப்பட்டவர்கள் கிருபையின் இராஜியத்திற்குள் இருப்பதாகத் தங்களை வஞ்சித்துக்கொள்ள வேண்டாம். ஏனெனில் தேவனுடைய வசனம் இதற்கு எதிரிடையாகவே அறிவிக்கிறது.

மேலும் நாம் தேவனுடைய பிள்ளைகளென்று நமக்கு நம்பிக்கையளித்து நமக்குள்ளே சாட்சி கொடுக்கிற கர்த்தருடைய ஆவியானவர் சுத்தமும் தூய்மையுமான சத்திய ஆவியானவர் என்பது மிகவும் முக்கியம். ஆகவே அவர் சத்தியத்துக்கெதிராகச் சாட்சி கூறமாட்டார். எனவே. உன் இருதயம் தேவனுக்குமுன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை (அப். 8:21) என்று அப்போஸ்தலன் மாயவித்தைக்காரனை சீமோனுக்குச் சொன்ன வார்த்தைகள் மேற்கூறிய மக்களுக்குப்பொருத்தமானவையாகும். நீ கடுமையான அதிக பாவங்களைச் செய்திருக்கிறாய் என்று அப்போஸ்தலன் கூறாதபடி உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாயில்லையென்றே கூறுகிறார். அதைத் தொடர்ந்து, நீ நித்தியமாய் நஷ்டப்பட்டுப் போவாய் என்று கூறாது நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம் (வச. 22) என்றே அறிவுரை கூறினார் அந்த மாய வித்தைக்காரன் கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டவனாய் மாய்மாலமாகிய புளித்த மாவைக் கொண்டிருந்தான். அத்தகையவனும் கண்டனம் செய்யப்படாது. தேவனிடம் மன்னிப்புக்காக வேண்டுதல் செய்ய அறிவுரை கூறப்பட்டான். ஆனால் அவன் தன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பவேண்டுமென்பது அவனுக்குக் கொடுக்கப்பட்ட நிபந்தனையாகும்.

உன் கண் உனக்கு இடறல் உண்டாக்கினல் (கிருபையின் வாழ்க்கைக்கு அது தடையாகவோ தடுமாற்றமாகவோ இருந்தால்), அதைப் பிடுங்கி எறிந்து போடு (மத். 18:9) என்று இயேசு கூறினர். என்னில் விசுவாசித்தால் உன் கண்ணைப் பிடுங்கத் தேவையில்லை என்று அவர் கூறவில்லை. விசுவாசமும் நல்மனசாட்சியும் நாம் நேசிக்கிற பாவத்தோடு ஒத்துப்போகா. அத்தகைய பாவங்கள் கிருபாசனத்திலிருந்து நம்மை விரட்டிவிடும். தங்களை ஆண்டுகொண்டிருக்கிற பாவங்களால் கட்டப்பட்டிருப்பதாலேயே அநேகர் தேவபக்தி, ஜெபம் போன்றவற்றிற்கு அந்நியராயிருக்கிருர்கள். அந்தப் பாவங்களை அவர்கள் விட்டுவிட விரும்புகிறதுமில்லை. அப்படிப்பட்டவர்களுக்குக் கொடுக்கக் கூடிய ஒரே அறிவுரை தங்கள் பாவங்களை விட்டுவிட்டு ஆண்டவரண்டை வரவேண்டுமென்பதுவே. இவ்வாறு செய்வது தங்கள் பாவங்களில் தொடர்ந்து வாழ்ந்து தங்கள் சரீரத்தையும் ஆத்துமாவையும் பிசாசுக்கு ஒப்புக்கொடுப்பதைவிட மிகவும் மேலானது என்று லுத்தர் கூறியுள்ளார். இரண்டு கண்ணுடையவனுய் எரிநரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்கிலும், ஒற்றைக் கண்ணனுய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நலமாயிருக்கும் என்று இயேசுவும் கூறினர். பாவத்துக்கு விலகி ஓடுங்கள். மாம்சத்தைச் சிலுவையிலறைவதற்குச் சிறப்பான பிரதிபலனுக மகிமையின் கிரீடத்தைப் பெற்றுக்கொள்வீர்கள். பாவத்திலேயே வாழ்வீர்களானல் இவ்வுலகத்தில் தேவனுடைய ஆசீர்வாதங்களையும், சமாதானத்தையும் இழந்துபோவதோடு மறுமையில் நித்திய வாழ்வும் கிட்டாதேபோம்.

மக்கள் வைத்துக் காக்கிறதும் விட்டுவிட விரும்பாததுமான பாவங்களுக்கு அடுத்தக் காரியமே

இது. அவர்கள் நேசிக்கிற பாவங்கள் இங்கு குறிப்பிடப்படவில்லை. தூய்மையை நேசிக்கிறதுபோலவே பாவத்தைக்குறித்த பழைய பாசமும் மாம்சத்தில் தங்கியிருக்கும். ஆனால் விட்டுவிட விரும்பாது பற்றிக்கொள்ளுகிற மனப்பூர்வமான பாவம் விசுவாசத்திற்கும் கிருபைக்கும் எப்போதும் எதிரானதே. பாவத்தின்மீது பாசமிருந்தாலும் அதை வெறுத்துப் பகைத்து, தேவனுடைய ஒத்தாசையோடு விட்டுவிட விரும்புகிறவர்கள் தேவனுடையகோபத்துக்கு அஞ்சி அவரைவிட்டு ஓடவேண்டியதில்லை. அதற்கு நேர்மாறாக அவருடைய கிருபையில் நம்பிக்கை வைத்து அவர் ஏற்றுக்கொள்வாரென்னும் முழுநம்பிக்கையோடு அவருடைய கரங்களுக்குள் தஞ்சம் புகுந்துகொள்ளவேண்டும்.

பாவத்திலிருந்து முற்றிலும் விடுதலையடைந்த பின்புதான் கிருபையில் விசுவாசிக்கமுடியும் என்கிற எண்ணத்தைக்குறித்து ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவ்வாறு காத்திருக்கிற வேளையில் சாத்தான் நம்மைத் தன் வலையில் சிக்க வைத்துவிடுவான். விசுவாசத்தினால் மாத்திரமே நாம் மீட்படையமுடியும், நம்முடைய மாம்சம் பாவத்தை நேசிக்கிறது. நாம் இந்த உலகத்தில் வாழுமட்டும் உள்ளான சில பாவ பழக்கங்கள் நம்மைத் தொடர்ந்து வேதனைப்படுத்துகின்றன. இந்நிலையைக் குறித்து பக்தர்கள் பரிதபித்துக் கலங்க வேண்டியதே. நம்மாலே தண்டிக்கப்படுகிற பாவங்களுக்கும் தேவனுக்குமிடையே கிறிஸ்துவின் சிலுவைத் தியாகம் வந்துவிட்டது என்று லுத்தர் கூறுகிறார். எனவே நாம் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருந்து மாம்சத்தை சிலுவையில் அறையும் காலம் மட்டும் நம்மில் தொக்கி நிற்கும் பாவங்கள் நம்மை ஆக்கினைக்குட்படுத்தா.

நம்முடைய வாழ்க்கையில் காணப்படுகிற பெலவீனங்களையும் குறைகளையும் ஆண்டவர் சமூகத்தில் அறிக்கையிட்டு அவருடைய மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டும். நாம் அனுதினம் பாவத்தோடு போராடினாலும் நமக்கு வைக்கப்பட்டிருக்கும் நித்திய ஆசீர்வாதங்களில் குழந்தையைப்போல் நம்பிக்கை வைக்கவேண்டும். இந்த நம்பிக்கையை நம்முடைய இருதயத்திலிருந்து அகற்றி, நம்மை நம்பிக்கையிழவில் போடவும், மானசீக அடிமைத்தனத்தில் ஆக்கவும் சாத்தான் எப்போதும் முயலுவான். எனவே ஆண்டவருடைய வசனத்தையும் ஊக்கமான ஜெபத்தையும் உடன் விசுவாசிகளுடைய உபதேசங்களையும் அவர்களுடைய வேண்டுதல்களையும் பக்கபலமாகக் கொண்டு நிலைத்து நிற்போமேயாகில் நம்முடைய மனசாட்சி அடிமைத்தனத்துக்குட்படாது நாம் விசுவாசத்தில் வெற்றி காணலாம்.

---

14. உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.

லூக். 11:2.

இயேசு கற்பித்த ஜெபத்தில் இந்த வாக்கியத்துக்கு முதலிடம் கொடுத்துள்ளபடியால் நமக்கு வெளிப்படையாகத் தோன்றாத மிகவும் ஆழமான கருத்து இந்த வேண்டுதலில் இருக்க ஏதுவுண்டு. மேலும் உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக (யாத். 20:7) என்ற இரண்டாம் கற்பனையின் கருத்தையே இந்த வேண்

டுதல் குறிக்கிறது. கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார் என்ற பயங்கரமான எச்சரிப்பு அந்த கற்பனையோடு கொடுக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இவ்வாறாக இந்த கற்பனைக்கும் இந்த வேண்டுதலுக்கும் சிறப்பான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளபடியால் இங்கே ஏதோ பெரிய இரகசியம் மறைந்திருக்கிறதென்பதை உணரவேண்டும். ஏனெனில் இந்தக் கற்பனையும் வேண்டுதலும் மனித புத்திக்கு மிகவும் சாதாரணமாகத்தான் தோன்றுகின்றன.

உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக என்று கிறிஸ்து கற்பித்த ஜெபத்தின் கருத்தென்ன? இதை விளக்கமாகப் புரிந்து கொள்ள தேவனுடைய நாமம் என்றாலென்ன? என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். தேவனுடைய நாமம் என்ன? தேவன் யார் என்பதையும், அவருடைய தெய்வீகத் தன்மைகளையும், பரிபூரணத்துவத்தையும் வெளிப்படுத்துவதே அவருடைய நாமமாகும். ஆனால் தேவன் யார் என்பதை நமக்குக் கற்பிக்க அவரை இந்த உலகில் வெளிப்படுத்தும் எல்லா ஏதுக்களும் போதா. தேவன் முதலாவதாகத் தம்முடைய படைப்பின் மூலம் தம்மை வெளிப்படுத்தினார். அந்த வெளிப்படுத்துதலின் மூலமாக அவருடைய வெளியரங்கமான ஒரு தன்மையையே கண்டுகொள்ளுகிறோம். ஆனால் அவருடைய இருதயத்தின் எண்ணங்களும், தெய்வீக நீதியும் இரக்கமும் மனிதனைக் குறித்த அவரது சித்தமும் ஆலோசனையும் வார்த்தையின் மூலமாக அவர் வெளிப்படுத்தியிராவிட்டால் அவை என்றைக்கும் நமக்கு மறைபொருளாயிருந்திருக்கும். தேவன் தம்மைத்தாமே முதலாவதாக எழுதப்பட்ட வார்த்தையின் மூலமாகவும், பின்னால் அவருடைய மகிமையாகவும் அவருடைய தன்மையின் பரிபூரண சாயலாகவும் வாழ்ந்த மாம்சமான

வார்த்தையின் மூலமாகவும் வெளிப்படுத்தினார். இவ்விதமாகத் தேவனை அறிந்துகொள்வதற்கு அவருடைய வார்த்தை முழுவதும் தேவை.

மனோவா கர்த்தருடைய தூதனைவரைப் பார்த்து உம்முடைய நாமம் என்ன என்று கேட்டதற்கு தூதனைவர் பதிலளித்ததுபோலவே கர்த்தடைய நாமத்தை நாம் வீணிலே வழங்கக்கூடாது. அவர் கொடுத்த பதில், என் நாமம் என்ன என்று நீ கேட்கவேண்டியது என்ன? அது அதிசயம் என்பதே (நியா. 13:18). அதுபோலவே மோசேயும் கர்த்தநடைய நாமம் என்ன என்று கேட்டதற்கு அவர் கொடுத்த பதில் இருக்கிறவராக இருக்கிறேன் (யாத். 3:14) என்பதுவே. யெகோவா என்பதின் கருத்துத்தான் இது மகிமையுள்ள அவரது தன்மையின் நாமம் இதுவாகும் இதைத் தொடர்ந்து அவருடைய கொடியதும் இனியதுமான பல்வேறு தன்மைகளை விளக்கும் வேறு பல நாமங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. உன் தேவனுகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவன் (யாத். 20:5) என்ற அவரது நாமம் நம்முடைய ஊனை உருவக் குத்துகிறதல்லவா! ஆம், அவர் பட்சிக்கிற அக்கினி (உபா. 4:24; எபி. 12:29) என்றும் அழைக்கப்படுகிறார் தேவனற்றவர்களுக்கு அவர் பயங்கரமானவர். மேலும் அவர் சர்வவல்லவர், நீதியுள்ளவர், பரிசுத்தர், மகாப்பெரிய தேவன்.

தேவனைக் குறித்த மிகவும் இனிமையான நாமங்களையும் வேதத்தில் காண்கிறோம். மன உருக்கமும் இரக்கமும் நீடிய சாந்தமும் தயவும் மிகுந்த கிருபையும் சத்தியமும் நிறைந்தவரென்று அவரைக் குறித்துக் கூறப்பட்டுள்ளது. மிகவும் சிறப்பாக தேவன் நம்முடைய இரட்சிப்புக்காக மாம்சத்தில் வெளிப்பட்டபோது, தேவன் நம்மோடிருக்கிறார்

என்ற கருத்துள்ள இம்மானுவேல் என்றும், மற்றும் அதிசயமானவர் ஆலோசனைக்கர்த்தா வல்லமையுள்ள தேவன் நித்திய பிதா சமாதானப்பிரபு (ஏசா. 9:6) என்றும் பெயர் பெற்றார். மேலும் அவர் தம்மை நம்முடைய ஆறுதல், அன்பர், மேய்ப்பர், மணவாளன், சகோதரன், பிதா என்றெல்லாம் அழைக்கிறார். உன்னதமானவரின் எல்லா நாமங்களையும் யாரால் குறிப்பிடமுடியும்? சுகந்த தைலம் போல அவரது நாமம் தேவனுடைய வசனம் முழுவதும் வீசுகிறது. சாலொமோன் சொல்லுவது போல அவருடைய நாமம் ஊற்றுண்ட பரிமள தைலமாயிருக்கிறது. (உன். 1:3).

சுருங்கச் சொன்னால், வேதம் முழுவதும் அவருடைய நாமத்தை வெளிப்படுத்துகிறது. எல்லா நாமத்துக்கும் மேலான அந்த நாமத்தை எப்படி நாம் அசட்டைப் பண்ணமுடியும்? பாவிகளுக்கு அந்த நாமம் வானத்திலும் பூமியிலுமுள்ள எல்லா நாமங்களிலும் இனிமையானது. நாம் இரட்சிக்கப் படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை (அப். 4:12). வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிற யாவருக்கும் இளைப்பாறுதலளிக்கும் நாமம் அது. அந்த நாமம் துக்கத்திலிருக்கிறவர்களுக்கு ஆறுதலும், காயப்பட்டோருக்கு ஆரோக்கியமும், சிறைப்பட்டோருக்கு விடுதலையும் அளிக்கிறது. அது தரித்திரரை தனவான்களாக்குகிறது. மனுப்புத்திரருடைய பாவங்களை மன்னித்து நீதிமான்களாக்கி இரட்சிக்கிறது. தன்னுடைய குமாரனுக்குள்ளே தேவன் தம்மை வெளிப்படுத்திய விலையேறப்பெற்ற நாமம் அதுவே. இரட்சகரின் நாமமும் அதுவே: அதுதான் இயேசு என்னும் ஆறுதலளிக்கும் நாமம். அந்த நாமத்திற்குள்ளே தேவன் இரட்சிப்புக்குரிய தம்

நித்திய ஆலோசனை, மற்றும் தம்முடைய நித்திய அன்பு இரக்கம் நீடிய பொறுமை உண்மை என்பவற்றை அடக்கி வைத்துள்ளார். ஒரு பாவியின் இரட்சிப்புக்கேதுவானவற்றை இயேசு என்னும் அந்த நாமத்தில் தேவன் வைத்திருக்கிறார். இந்த மூன்றெழுத்து நாமமே முழுசுவிசேஷமாகும். ஏனெனில் இதுவே பாவிகளின் இரட்சிப்பு.

தேவனுடைய நாமங்களையும் அவைகளின் விளக்கங்களையும் சிந்திக்கும்போது ஆண்டவர் நம்முடைய ஆத்துமாக்களுக்கு மகிமையும் மகத்துவமும் சிறப்பும் பரிசுத்தமும் கொண்டவராகத் தோற்றமளிக்கிறார். ஒருவன் தன் அயலகத்தானுடைய ஆளத்துவத்தையும் வார்த்தைகளையும் செய்கைகளையுங்குறித்து பழித்துக் கூறும்போது அவன் அந்த மனிதனுடைய பெயரை இழிவுபடுத்துகிறானென்றே கூறுகிறோம். அவ்விதமாகப் பார்க்குமிடத்து தேவனுடைய நாமத்தை பரிசுத்தப்படுத்துதலென்றால் பிற மனிதர்கள் அவரை சரிவர அறிந்து கனப்படுத்தி நேசிக்கத்தக்கதாக அவர்கள் மத்தியில் அவரை மகிமைப்படுத்துவதே.

———

15. உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக.

லூக். 11:2.

தேவனை முழுவதுமாய் நேசிக்கிறதும் அவருக்குப் பிரியமானவைகளையே செய்ய ஆசிக்கிறதுமான ஒரு இருதயம் இந்த ஜெபத்திற்கு அடிப்படைத் தேவையாகும். தன்னுடைய சித்தஞ் செய்ய விரும்பாது பிதாவின் விருப்பத்தையே நிறைவேற்றும் ஒரு குழந்தையுள்ளம் தேவை. தன்னுடைய வாழ்க்கையில் நிகழும் காரியங்களுக்குக் காரணம் தேடாது இவையெல்லாம் பிதாவின் சித்தமென அமர்ந்திருக்கும் ஒரு சிறு குழந்தையின் இருதயம் தேவை. நல்லதும் சிறந்ததும் பயனுள்ளதும் தேவையானதுமான காரியங்களைப் பலரும் நேசிக்கலாம். ஆனால் அதுவல்ல பிதாவின் சித்தத்தை நேசிப்பது. தேவன் நேசிக்கிறவைகளை நாம் நேசித்தால் மட்டும் போதாது. அவருடைய சித்தத்தையும் அவருக்குப் பிரியமானவைகளையுமே நேசிக்க வேண்டும். இவ்வாறு நாம் தேவனையும் அவருடைய சித்தத்தையும் நேசிக்கும்போது அவர் நம்மிடம் எதிர்பார்க்கிற காரியம் தன்னுடைய வாக்குத்தத்த புத்திரனாகிய ஈசாக்கைப் பலியிடும்படி தேவன் ஆபிரகாமிடம் கட்டளையிட்டது போன்ற கடினமான காரியமாயிருந்தாலும் நாம் அதையும் நேசிப்போம். ஆபிரகாம் தான் செய்யப்போகிற காரியத்தின் காரணத்தை அறியாதிருந்தார் ஆயினும் அது தேவனுடைய சித்தமென்று அறிந்ததால் அவர் அதைச் செய்யத் திட்டமிட்டார். எனவே தேவனுடைய சித்தத்தை நாம் சகித்துக்கொள்கிறது மாத்திரமல்ல, அதை நேசித்து அதற்காக ஜெபிக்கவேண்டுமென்றே இந்த ஜெபம் நமக்குக் கற்பிக்கிறது.

நம் பழைய ஆதாமை சிலுவையிலறைந்து அழித்துப்போடவேண்டுமென்பது தேவனுடைய சித்தம் என்கிறதை அறிந்திருந்தும், சுயாதீனத்தை விரும்பும் மனுக்குலம் சுயசித்தத்தையே செய்ய ஆசிக்கிறது. எனவே தேவனுடைய சித்தத்திற்காக நாம் ஜெபிக்குமளவிற்கு அதை நேசிக்கும் இருதயத்தைப் பெற்றுக்கொள்வது எவ்வாறு எனக் கேட்கலாம். மறுபடியும் பிறவாதபடி இவ்வித இருதயத்தைப் பெற்றுக்கொள்ளுவது எவ்விதத்திலும் கூடாத காரியம். தன்னுடைய தீமைகளால் மனம் நொறுங்குண்டு ஆண்டவருடைய ஆக்கினைத்தீர்ப்பால் அச்சங்கொண்டு சஞ்சலப்படுகிற ஒரு ஆத்துமா தன்னுடைய தகுதியற்ற நிலையை உணருகிற வேளையில் ஆண்டவருடைய மகத்துவமான கிருபை அதில் கிரியை செய்யுமேயானுல் அந்த ஆத்துமா தாங்கொணு மகிழ்ச்சியோடு, ஆண்டவரே, தம்முடைய இரக்கங்கள் சொல்லிமுடியாதவை என்றே கூறும். இந்நிலையில், கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, ஆண்டவரால் கிடைக்கும் மகிழ்ச்சியால் நிரம்பிய உள்ளத்தில் தேவனுடைய அன்பு ஊற்றப்படும்போது தேவனுடைய சித்தமே அந்த ஆத்துமாவுக்கு எல்லாவற்றிலும் விலையெறப்பெற்றதாய்த் தோன்றும். அப்போது அவருடைய உள்ளத்தில் ஒப்பற்ற இரட்சகரே, தம்முடைய சித்தத்தை மாத்திரம் நிறைவேற்றவும் தம்மை மாத்திரம் பிரீதப்படுத்தவும் நான் என்ன செய்யவேண்டும் என்ற கேள்வியே முதலாவதுஎழும்பும். அத்தகைய ஆத்துமாவுக்கு பரலோகபிதாவின் சித்தம் தவிர வேறெதுவும் நன்மையாய்த் தோன்ரு. தன்னுடைய சித்தம் தவருனதாகவே தெரியும். அப்போது அவர் ஆண்டவரைப் பார்த்து, கர்த்தாவே, என்னுடைய சித்தத்தை என்ஞல் ஒழிக்க முடியவில்லையாதலால் நீரே அதை ஒழித்தருளும்

என்று ஊக்கமாக ஜெபிப்பார். இவரே தேவனுடைய சித்தத்திற்காக ஜெபிக்கிறவராகும்.

இவ்வாறாக என் சுயசித்தத்தில் காணப்படும் தீமைகளால் நான் சோர்படைந்து தேவனுடைய மகிமையால் கவரப்படும்போது அவருடைய சித்தமே எல்லாவற்றுக்கும் மேலாக என்னை ஆட்கொள்ளுகிறது. ஆகவே அவருடைய அன்பும் இனிமையும் என்னை வெற்றிகொண்டபின் அவருடைய சித்தம் செய்யும்பொழுது மாத்திரமே எனக்கு எல்லாம் நன்மையாகத் தோன்றுகிறது. அப்போதுதான் அவருடைய சித்தத்தை நேசிக்கும் இருதயம் கொண்டவனாகிறேன்.

ஜெபம் என்பது இருதயத்தின் அடித்தளத்திலிருந்து எழும்பும் ஒன்றாகும். ஆகையால் எல்லாரும் இந்த ஜெபத்தை ஏறெடுக்கமுடியாது. எனவே இதை வாசிக்கும் நண்பா! உன்னுடைய எண்ணங்களையும் இருதயத்தின் நோக்கங்களையும் அறிகிற ஆண்டவருக்கு முன்பாக சற்றுநேரம் அமர்ந்திரு. இக்காரியத்தைப் பொறுத்தமட்டிலும் உன்னுடைய நிலை என்ன? ஆண்டவரே உம்முடைய சித்தத்தை எனக்குக் காட்டும், உம்முடைய சித்தத்தைச் செய்ய எனக்கு உதவும் என்று ஏக்கத்தோடும் பெருமூச்சோடும் ஜெபிக்கிற பழக்கம் உனக்கு உண்டா என்று சிந்தித்துப் பார். இப்படிப்பட்ட ஒரு ஆர்வத்தை உனக்குள் உருவாக்காதபடி ஆவியானவர் உனக்குள் தங்கியிருக்கமுடியாது. ஒரு கிறிஸ்தவன் தன்னை அறியாமலே உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக என்று ஜெபிக்கிறான் என்பது உண்மை. ஆயினும் அவனுடைய இருதயத்தின் ஆரம்ப ஜெபமும் இறுதி வேண்டுதலும் கீழ்க்கண்டவாறு இருத்தல் வேண்டும்: என் பிதாவும் இரட்சகருமான ஆண்டவரே, தம்முடைய சித்தம் செய்ய

எனக்கு உதவியருளும். தம்முடைய சித்தம் செய்ய ஆவலும் தம்முடைய ஆவியின் வல்லமையும் தந்தருளும். தம்முடைய சத்தியத்தில் நடக்க தம்முடைய பாதையை எனக்குக் காண்பித்தருளும்.

பரிசுத்தாவியானவர் வாசம் செய்கிற இருதயத்தின் தன்மையே இது. புதிய உடன்படிக்கையின் புத்திரரைத் தெளிவுபடுத்தும் அடையாளங்களிலொன்ருகும் இது. இதைக்குறித்து ஆண்டவரும், நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதுவேன் (எரே. 31:33) என்று கூறியுள்ளார். தேவனுடைய சித்தமே தேவனுடைய பிரமாணங்கள். தேவன் தம்முடைய பிரமாணங்களை நம்முடைய இருதயத்திலே எழுதியிருக்கிருரென்பதற்குரிய அடையாளம் நான் அவருடைய சித்தத்தை நேசித்து அதைச் செய்வதற்கு ஆவல் கொள்ளுவதாகும். விசுவாசிகள் பரிபூரணரென்று சொல்ல முடியாது. அவர்களுடைய வாழ்க்கையின் உள்ளும் புறமும் ஏராளம் குறைகள் காணப்படலாம். அவர்கள் தேவையான அளவு காத்திருந்து ஜெபிக்கவோ, தீமைக்கு எதிர்த்து போராடவோ செய்யாதிருக்கலாம். ஆயினும் தேவனுடைய சித்தத்தை அவர்கள் அறியும்பொழுது அதையே தங்கள் பிரமாணமாகக் கொள்ளுகிருர்கள்; அதை நிறைவேற்றவும் ஆசிக்கிருர்கள். இப்படிப்பட்ட ஒரு இருதயம் விசுவாசிகளுக்கு நிச்சயம் இருத்தல் வேண்டும்.

———

16. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். மத். 6:11.

எங்களுக்கு வேண்டிய ஆகாரம் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ள மூலபதத்தின் கருத்து தெளி வற்றதாயிருந்தாலும் பொதுவாக எல்லா வியாக்கி யானிகளும் அந்தப் பதமானது நம்முடைய வாழ்க் கைத் தேவையைக் குறிப்பிடுகிறது என்று ஒத்துக் கொள்ளுகின்றனர். நமது இருதயம் ஆசிப்பது அல்ல, நம்முடைய தேவையே இங்கு குறிப்பிடப் பட்டுள்ளது. நாம் வாழ்வதற்குத் தேவையானவை என்பதுவே இதன் சரியான கருத்தாகும். இவ்வாறு பார்க்குமிடத்து நாம் இதுவரையிலும் நம்முடைய வாழ்க்கைக்குத் தேவையானவற்றைப் பெற்றிருக்கி ரோமல்லவா? உலகப்பிரகாரமாக எந்த நிலையில் வாழ நாம் ஆசிக்கிரோமோ அதற்குரிய காரியங் களை நாம் பெற்றுக்கொள்ளாதிருக்கலாம். ஆயி னும் அவர் வாக்களித்தவைகளை நமக்குத் தந்திருக் கிருர். நமக்கு எது நன்மையென அவர் அறிவார்.

தரித்திரஞன ஒரு விசுவாசி கடன் தொல்லைகளி ஞல் கவலைப்படும்போது கீழ்க்கண்டவாறு கூற லாம்: என்னுடைய நிலை வேறு. என்னுடைய தரித் திரத்துக்கு நிகர் வேறென்றுமில்லை. நான் பலருக் குக் கடன்பட்டிருக்கிறேன். எல்லாருக்கும் நான் நீதி செய்து கொள்ளமாட்டேன். பிறர் என்னைக் குறித்து புறங்கூறுவதினிமித்தம் என்ஞல் ஆண்டவருடைய நாமம் நிந்திக்கப்படும் என்பதுவே. இப்படிப்பட்ட வர்கள் பெருமையினுலும், கவலையீனத்திஞலும், சோம்பலினுலும், வீண் செலவிஞலும், ஆடம்பர வாழ்க்கையிஞலும் ஆண்டவரை சோதிக்காதபடி

ஒழுங்கும் தாழ்மையும் உள்ளவர்களாய், கடமையில் கரிசனையும் உண்மையும் காண்பிக்கிறவர்களாய், எளிய விசுவாசத்தோடு இந்த ஜெபத்தைச் செய்வார்களேயாகில் இவர்கள் நிந்தையும் அவமானமும் அனுபவியாத அளவில் ஆண்டவர் அவர்கள் தேவைகளைச் சந்திப்பார் என்பதே இதற்குரிய பதிலாகும்.

வியாதியாலோ வேறு சூழ்நிலைகளாலோ சில தேவனுடைய பிள்ளைகள் சொந்தத் தேவைகளைத் தாங்களாக சந்திக்க முடியாத நிலையில் பிற சகோதரர்களுடைய தயவில் வாழவேண்டியது வரலாம். இது அவர்களுடைய பெருமைக்கு பங்கம் விளைவிக்கலாம். ஆயினும் இது தேவன் அவர்களோடு இடைபடுகிற ஒரு வழியாகும் அவர்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களை சரிவர பயன்படுத்தக் கற்றுக்கொள்ளும்வரை தேவன் அவர்களை இவ்வாறு சிட்சிக்கலாம். ஆகவே இப்படிப்பட்ட அனுபவம் வழியாகக் கடந்துபோகிறவர்கள் மிகவும் பயத்தோடு தேவனுடைய கரங்களுக்குள் அடங்கியிருக்க வேண்டும். அவர் ஞானமும் வல்லமையுமுள்ள பிதா. அவருடைய வலதுகரம் எல்லாவற்றையும் மாற்ற வல்லது.

வாழ்க்கையில் கவலை ஏதுமில்லாது மகிழ்ச்சியோடு வாழுகிறவர்கள் இந்த ஜெபத்தை ஏறெடுக்கத் தேவையில்லை எனத்தோன்றினாலும் அவர்களும் இதிலிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய பாடங்களுண்டு. அவர்கள் சிந்திக்கவேண்டிய ஒரு வார்த்தை இங்கு காணப்படுகிறது. எங்களுக்கு என்பதுவே அந்த வார்த்தை. கிறிஸ்துவின் சிந்தை நம்மிலிருந்தால் கிறிஸ்துவைப்போல இந்த வார்த்தையை நாமும் சிந்திப்போம். எனக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எனக்குத் தாரும் என்று ஜெபிக்க

அவர் கற்பிக்காமல் எங்களுக்கு வேண்டிய ஆகா ரத்தை இன்று எங்களுக்குத் தாரும் என்றே ஜெபிக் கப் படிப்பித்தார். ஆண்டவர் நமக்கு அளித்திருக் கும் அதிகமான நன்மைகளை நாம் மாத்திரம் அனு பவிக்கலாமா? அல்லது அவைகளை நம்முடைய பிள் ளைகளுக்காக சேர்த்துவைக்கலாமா? ஆண்டவர் இதைக் குறித்து என்ன சொல்லுகிறார்? உன் உக் கிராணக்கணக்கை ஒப்புவி, இனி நீ உக்கிராணக் காரனாயிருக்கக் கூடாது (லூக். 16:2) தேவன் சிலருக்கு அதிகமான உலக நன்மைகளைக் கொடுக் கும்போது என்ன எதிர்பார்க்கிறாரென் பதை இங்கு காண்கிறோம். ஏன் ஆண்டவர் சரிசம னற்ற நிலையிலே தன்னுடைய நன்மைகளை மக்க ளுக்குப் பகிர்ந்து கொடுக்கிறாரென்பதைச் சிந்தித்த துண்டா? சிலர் தங்களுடைய தேவைகளைக் காட்டி லும் அதிகமாகப் பெற்று செல்வந்தராயிருக்கின் றனர். பிறரோ தங்களுடைய சாதாரண தேவை களைக்கூட நிவிர்த்திக்க முடியாத தரித்திரராயிருக் கின்றனர்.

இவ்விதமாக செல்வமானது சரிசமமில்லாதபடி பங்கிடப்பட்டுள்ளதின் காரணம் நம் ஒவ்வொரு வருக்கும் வெவ்வேறு ஊழியங்கள் கொடுக்கப்பட் டுள்ளன என்பதுவே. தேவைக்கு மிஞ்சி நன்மை கள் பெற்றவர்கள் ஆண்டவருடைய உக்கிராணக் காரராய் இருக்கவேண்டும். ஆண்டவருடைய ஈவு களை அவருக்காகவே செலவிடவேண்டும். தேவன் கொடுத்திருக்கிற நன்மைகளை நல்ல உக்கிராணக் காரராக உண்மையாய் அவர்கள் பங்கிட்டு கொடுக்கிறார்களா? அல்லது அவற்றைத் துணியில் பொதிந்து பத்திரப்படுத்தி தங்களுக்கும் பிள்ளை களுக்கும் தெய்வமாக வைத்திருக்கிறார்களா? என் பதை சோதிக்கவே ஆண்டவர் அவர்களைச் சுற்றி லும் ஏராளம் தரித்திரரை வைத்திருக்கிறார். எவ னிடத்தில் அதிகங் கொடுக்கப்படுகிறதோ அவ

டத்தில் அதிகங் கேட்கப்படும் (லூக். 12:48) என்ற பொதுவான கற்பனையை நாம் மறந்து போகக் கூடாது அது மாத்திரமல்ல, உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக (மத். 19:19) என்ற ராஜரீகப் பிரமாணத்தையும் மறந்துபோகக்கூடாது. அதோடு நம்மைச் சுற்றிலும் ஏராளம் தரித்திரரும், நோயாளிகளும், பெலவீனரும், அங்கவீனருமுண்டு. அவர்கள் தங்கள் அன்றுட ஆகாரத்துக்காக நம்மிடமே கையேந்துகிறார்கள். ஆகவே இந்த ஜெபத்தை நாம் ஏறெடுக்கும்போது நான், என்னுடைய என்கிறவைகளை மறந்து, எங்கள், எங்களுடைய என்கிற எண்ணத்தோடு பிறமனிதருக்காகவும் ஜெபிக்கவேண்டும். எங்களுக்கு என்று ஜெபித்துவிட்டு சில துரோகிகளைப்போல நமக்கிருக்கிற நன்மைகளை நமக்காகவே வைத்துக்கொள்ளக்கூடாது. நாம் ஆண்டவருடைய உக்கிராணக்காரர். கிறிஸ்துவின் அன்பினிமித்தம் அந்த உத்திரவாதத்தை மகிழ்ச்சியோடு நிறைவேற்றவேண்டும். அவ்வாறு நாம் செய்யும்போது நாம் செய்கிற எல்லா நல்ல காரியங்களைக்குறித்தும் அதை எனக்கே செய்தீர்கள் (மத் 25:40) என்று அவர் கூறுவார்.

———

17. மேலும் மண்ணுனவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம்.

1 கொரி. 15:49.

இவ்விதமான ஒரு அறிவிப்பைக் கேட்கும் போது நம்முடைய விசுவாசக் கண்கள் திறக்கத் தக்கதான கிருபைக்காக நாம் ஜெபிக்கவேண்டும். கவனியுங்கள்! மண்ணுனவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்துகொள்ளுவோம். இதை நாம் நம்புகிருேமா? ஆதாமின் சாயலாகிய பூமிக்குரிய சாயலை நாம் அணிந்திருக்கிருேமென்பதை நம்முடைய அவயவங்களும் அறிவும் தெளிவிக்கின்றன. ஆனல் ஆண்டவரோடு இணைக்கப்பட்டவர்களாகிய நாம் ஒரு நாள் பரலோக சாயலை அணிந்துகொள்ளுவோமென்பதையும் விசுவாசிக்கிருேமா? நமக்கு இரண்டு வாழ்வு உண்டென்றும், அவைகளுக்கு ஆதாமும் கிறிஸ்துவும் முன்னேடிகளென்றும் நம்புகிருேமா? ஒரு வாழ்வில் மண்ணுனவனுடைய சாயலை அணிந்து ஆதாமைப்போல இவ்வுலகத்திலும், மறு வாழ்வில் விண்ணேருடைய சாயலணிந்து கிறிஸ்துவைப்போல நித்தியத்திலும் வாழ்வோமென்பதை நம்புகிருேமா? இவ்வுலகில் மண்ணுனவனுடைய சாயலை அணிந்து அதனுல் விளையும் எல்லாப்பாடுகளையும் அனுபவிப்பதுபோலவே ஒரு நாள் கிறிஸ்துவின் சாயலையணிந்து அதற்குரிய தான மகிமையை அனுபவிப்போமென்பதையும் விசுவாசிக்கிருேமா? கிறிஸ்துவுக்குள்ளானவர்கள் அனைவருக்கும் குறிப்பிட்ட காலத்தில் இந்த மாற்றம் ஏற்படுமென்பதும், இரவுக்குப்பின் பகலும்

கோடைகாலத்திற்குப்பின் குளிர்க்காலமும் வருவது போலவே இந்த இரண்டு நிலைகளும் திட்டமாய் ஒன்றன்பின் ஒன்று வருமென்பது நிச்சயமே. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

நம்முடைய தற்கால வாழ்வின் அடிப்படையில் மண்ணானவனுடைய சாயல் என்னவென்பதை நாம் அறிவோம் ஆதாம்... தன் சாயலாகத் தன் ரூபத்தின்படியே ஒரு குமாரனைப் பெற்றான் (ஆதி. 5:3) நாம் எடுத்துக்கொண்ட வசனத்தில் அப்போஸ்தலன் நம்முடைய சரீரத்தைக் குறித்தே பேசுகிறார். 42-45 வசனங்களில் கூறப்பட்டுள்ள தன்மைகளில் நம்முடைய சரீரம் ஆதாமின் சாயலை ஒத்திருக்கிறது; அது அழிவுள்ளது, பெலவீனமுள்ளது, கனவீனமுள்ளது சுருங்கச் சொன்னால் உலகப்பிரகாரமான ஆகாரத்தால் போஷிக்கப்பட வேண்டிய இயற்கை சரீரமே அது. இறுதியாக அது மண்ணுக்கே திரும்பும். எல்லாப் பாவங்களும், பாடுகளும், வேதனைகளும், வருத்தங்களும், துக்கமும், துன்பமும் மண்ணானவனுடைய சாயலுக்கே உரியவை. நம்முடைய தன்மை தேவனைக் குறித்த அலட்சியம், விக்கிரகாராதனை, சுகபோகம், இருதயக்கடினம், சுயவஞ்சனை, பெருமை, மாய்மாலம், உண்மைக்கேடு, கோபம், பகை, பொறாமை, சந்தேகம், இச்சை, பொருளாசை, சுயநலம் போன்ற பாவங்களாலேயே ஆக்கப்பட்டிருக்கின்றது. கிறிஸ்து சொன்னதுபோல மனுஷனுடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும் புறப்பட்டு வரும் (மாற். 7:21,22). இதுவே ஆதாமின் சாயலாகும். இதிலிருந்து எல்லா சாபமும் துயர

மும் பூமியில் பரந்தன. அவையாவன: அமைதலற்ற இருதயம், குற்ற மனசாட்சி, துக்கம், தீமை, கவலை, ஆபத்து, பயம், சந்தேகம், வேதனை, தரித்திரம், சாத்தானின் அக்கினியாஸ்திரங்கள். இறுதியில் மரணமும் அழிவுமாகும். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஆதாம் விட்டுப்போன இவ்விதமான பாடுகளை நாம் தரித்துக்கொண்டேயாக வேண்டும் முட்கள் நிறைந்த ஒரு காட்டினூடே கடந்து செல்வது போன்றதே இவ்வுலக வாழ்க்கை எப்போதும் நம் சரீரம் காயப்பட்டு இரத்தம் வடிகிறது. ஆனால் தேவனுடைய பிள்ளையே, சோர்ந்து போகாதே! பொறுமையிழக்காதே! இது கடினமான பாதை தான். தேவன் மனிதனை பாடுகளுக்காக மாத்திரம் படைக்கவில்லை என்று தெளிவிக்கும் நாள் சீக்கிரம் வருகிறது.

மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறது போல, வானவருடைய சாயலையும் அணிந்து கொள்ளுவோம். வானவருடைய சாயல் மண்ணானவனுடைய சாயலுக்கு நேர் எதிரிடையானதே ஆவிக்குரிய சரீரம் கிறிஸ்துவின் சாயலுக்கொத்தது. அது அவருடைய மகிமையடைந்த சரீரத்தைப் போன்றது. கனவீனத்திற்குப் பதிலாக நித்தியமான பரலோக கனத்தையும் மகிமையையும் பெற்றுள்ளது. பெலவீனத்துக்கும் சுகவீனத்துக்கும் பதிலாக நித்திய ஆரோக்கியத்தையும் பெலனையும் நலனையும் பெற்றது. துக்கம், பயம், வேதனை, ஆபத்து என்பவற்றிற்குப் பதிலாக நித்திய மகிழ்ச்சி பேரின்பம், பாதுகாவல், தேவனுடைய வலது கரத்திலுள்ள பூரிப்பு போன்ற முடிவடையா தொடர்பான பரலோக இன்பங்களுக்குப் பாத்திரமானது எல்லாவற்றிற்கும் மேலாக பாவத்தின் நித்தியமான வேதனைக்குப் பதிலாக அழிவில்லா பரிசுத்தமும் அன்பும் தூய்மையும் அடைவோம். இந்த உல

கத்தில் அறிந்துகொள்ள முடியாத பெருமளவில் நாம் அங்கு ஆண்டவரை முழுவதுமாகவும் பூரணமாகவும் ஆழமாகவும் அறிந்து நேசிப்போம்.

எல்லா விதத்திலும் தீமையற்ற ஒரு வாழ்க்கை நடத்த முடியுமென்பது எத்தனை மேன்மையானது! தேவ தூதர்களைப்போல முற்றிலும் தூய்மையாயும் பரிசுத்தமாயுமிருக்கலாம். எந்த தீமையைக் குறித்தும் ஆபத்தைக் குறித்தும் அஞ்சாது பத்திரமாய் மகிமையுள்ள இரட்சகரோடு என்றும் இளைப்பாறலாம். தேவனுடைய அற்புதமான இரகசியங்களை நாம் அறிந்துகொள்ளத்தக்கதாக கிறிஸ்துவாகிய ஒளியில் என்றும் கற்றுக்கொண்டேயிருக்கலாம். இவ்வித நிலைக்காகவே மனிதன் படைக்கப்பட்டான். ஆகவேதான் அவனை தேவன் தம்முடைய சாயலாகவே படைத்தார். அளக்க முடியாக் கடலில் எண்ண முடியா பாசிகளை ஆண்டவர் படைத்துள்ளதுபோலவே தம் வல்லமையினால் நம்மால் கூறியறிவிக்க முடியாத நித்தியமான பேரின்பத்தை நமக்கு ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறார்.

———

18. நியாயப்பிரமாணத்தைக் குறித்து மேன்மை பாராட்டுகிற நீ நியாயப்பிரமாணத்தை மீறி நடந்து, தேவனைக் கனவீனம் பண்ணலாமா? எழுதியிருக்கிறபடி, தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே உங்கள் மூலமாய்த் தூஷிக்கப்படுகிறதே. ரோம. 2 23, 24.

அப்போஸ்தலன் ரோமர் 2-ம் அதிகாரத்தில் கூறியுள்ளவைகளையும் மேலும் அவர் கூறவேண்டியவைகளையும் சேர்த்து இறுதியாக, நியாயப்பிரமாணத்தைக் குறித்து மேன்மை பாராட்டுகிற நீங்கள் அதை மீறுகிறதின் மூலமாக தேவனை கனவீனம் பண்ணுகிறீர்கள் என்று கண்டித்து முடித்தார். அதாவது நியாயப்பிரமாணத்தைச்குறித்து மேன்மைபாராட்டுகிற நீங்கள் உங்கள் துன்மார்க்க வாழ்க்கையினால் ஆண்டவரையும் அவரது வார்த்தைகளையும் தூஷித்து கனவீனப்படுத்துகிறீர்கள் என்றே அது கருத்தாகிறது. ஏனெனில் தாங்கள் வணங்கும் உண்மையான கடவுளின் நியாயப்பிரமாணத்தைக் குறித்து யூதர்கள் மேன்மைபாராட்டுகிறதைக் கேள்விப்பட்ட புற ஜாதியார் அவர்களுடைய செய்கைகளைக் கண்டபோது அவர்களுடைய தேவனும் அவர் கொடுத்த நியாயப்பிரமாணமும் சிறந்தவைகளல்ல என்று எண்ணும் அளவிற்கு அவர்கள் தீமையில் வாழ்ந்தார்கள். அதைக் குறித்து ஆண்டவரும், அவர்கள் புறஜாதிகளிடத்தில் போனபோது அந்த ஜனங்கள் இவர்களைக் குறித்து: இவர்கள் கர்த்தருடைய ஜனங்கள். அவருடைய தேசத்திலிருந்து வந்தார்களென்று சொன்னதினால் இவர்கள்

என் பரிசுத்த நாமத்தைப் பரிசுத்தக் குலேச்சலாக்கிளுர்கள் (எசே. 36:20)என்று குற்றஞ்சாட்டினுர்.

நம்முடைய வாழ்க்கையின் குறைகள் அருமை ஆண்டவருடைய நாமத்துக்கு அவமகிமை கொண்டு வரும் என்ற எண்ணம் தேவனுடைய பிள்ளைகளை அதிக வேதனைக்குட்படுத்துவதாகும். யூதர்கள் புறஜாதிகளைக் காட்டிலும் பல்வேறு சிறப்புக்கள் பெற்றிருந்தபடியால் அவர்கள் புறஜாதிகளைத் தாழ்வானவர்களாயும், குருடராயும் அந்தகாரத்தில் இருப்பவர்களாயுமே குறிப்பிட்டனர். ஆனால் அப்போஸ்தலனே அத்தகைய புறஜாதிகள் யூதர்களுடைய பாவ வாழ்க்கையால் தேவனைப் புறக்கணித்து தூஷித்தார்கள் என்று அவர்களைக் குற்றஞ்சாட்டினுர்.

யூதர்களைக் குறித்து அப்போஸ்தலன் கூறிய வார்த்தைகள் பேர்கிறிஸ்தவர்களுக்கு மிகவும் பொருத்தமானதாகும். அப்போஸ்தலனுடைய வார்த்தைகளை நாம் ஒவ்வொருவரும் கவனித்து, இருதயத்தில் ஏற்றுக்கொண்டு, நாமும் இந்நிலையில்தானு இருக்கிறோம் என சிந்திக்கவேண்டும். நாம் ஞானஸ்நானம் பெற்றிருக்கலாம்; திருவிருந்திலும் பங்கெடுக்கலாம்; பிறரிடம் தேவனுடைய வசனங்களைத் தெளிவாக எடுத்துக்கூறுமளவு வேத அறிவில் தேர்ச்சி பெற்றிருக்கலாம். மனந்திரும்புதல், ஆழமான விசுவாசம், பரிசுத்த வாழ்க்கை என்பவைகளின் தேவையைக் குறித்து நாம் பேசலாம். ஆனால் நம்முடைய உண்மையான வாழ்க்கை எவ்வாறு இருக்கிறது? நாம் உண்மையான மனந்திரும்புதலின் வாழ்க்கை நடத்துகிறோமா?

அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை, சகலமும் அவருடைய கண்களுக்கு

முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் (எபி.4:13) ஆண்டவருக்கு எல்லாம் தெரியும். நாம் இரட்சகரோடுள்ள தெளிவான விசுவாச ஐக்கியத்தில் வாழுகிறோமா? நம்முடைய மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் தினந்தோறும் சிலுவையிலறைந்து பரிசுத்த வாழ்க்கை நடத்துகிறோமா? அல்லது நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கை வெறும் அறிவிலும் பேச்சிலும்தானா? தேவனாகிய கர்த்தரை எல்லாவற்றிற்கும் மேலாக நேசிக்க வேண்டுமென்று கூறிவிட்டு நாம் வேறு தேவர்களை வணங்குகிறோமா? பிறருக்கு தேவனுடைய கட்டளைகளை விளக்கிக் கூறிவிட்டு நாமே சத்தியம்பண்ணுகிறவர்களாயும், ஓய்வு நாளை மீறுகிறவர்களாயும், மதுபானப்பிரியராயும், அயலாரைப் பகைக்கிறவர்களாயும், இரகசிய பாவங்களை நேசிக்கிறவர்களாயும் இருக்கிறோமா?

இத்தகைய வாழ்க்கை பெரிய மாய்மாலமே. மகத்துவமுள்ளவரும் பரிசுத்தருமாகிய கர்த்தர் இதைக் காண்கிறார். அவர் இதை அறிவார். தேவனுடைய நீதியுள்ள தீர்ப்பு வெளிப்படும் கோபாக்கினை நாளிலே உனக்காகக் கோபாக்கினையைக் குவித்துக் கொள்ளுகிறாயே (ரோம. 2:5) என்ற வசனம் பொய்யுரையாத தேவன் இவர்களுக்கே கூறியுள்ளார். இவர்கள் தேவனுடைய நாமம் தூஷிக்கப்பட இடம் கொடுக்கிறார்கள். தாங்கள் போதிக்கிற பரிசுத்த உபதேசங்களை இவர்களே அலட்சியம் பண்ணுகிறார்கள். இவர்களுடைய வாழ்க்கையினிமித்தம் மனந்திரும்பாத மக்கள் இடறலடைகிறார்கள். கிறிஸ்து மற்ற மக்களுக்காகவும் மரித்திருக்க, அவர்களுடைய அழிவுக்கு இவர்கள் காரணமாகிறார்கள். அதைக் குறித்து இவர்கள் ஆண்டவருக்குக் கணக்கு ஒப்புவித்தேயாக வேண்டும். இவர்களைக்

குறித்து கர்த்தர், நீ என் பிரமாணங்களை எடுத்துரைக்கவும், என் உடன்படிக்கையை உன் வாயினால் சொல்லவும் உனக்கு என்ன நியாயமுண்டு; சிட்சையை நீ பகைத்து என் வார்த்தைகளை உனக்குப் பின்னாக எறிந்து போடுகிறாய் (சங். 50:16,17) என்று பராது கூறுகிறார்.

---

19. தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் (ஆபிரகாம்) அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல் .. .. தேவனை மகிமைப் படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான்.

ரோம. 4:20,21.

ஆபிரகாம் தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து சந்தேகப்படாமல், பிரதிகூலமான சூழ்நிலைகளிலும், மனிதர் பார்வையில் அரிது என்று எண்ணப்பட்ட காரியம் நிச்சயமாய் நடக்கும் என்று பூரணமாய் நம்பி, அதின் நிறைவேறுதலுக்காகக் காத்திருந்ததினால் அவர் தேவனை மகிமைப் படுத்தினார் என்று அப்போஸ்தலன் குறிப்பிடுகிறார். நாம் இதைக் குறித்து கருத்தாய்ச் சிந்திக்கவேண்டும். விசுவாசத்தின் கடினமான சோதனையிலும் தேவன் உண்மையுள்ளவரும், தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகிறவருமென்று விசுவாசிக்கிறவர்களும், நம்பிக்கைக்கு இடமில்லாத சூழ்நிலைகளிலும் நம்பிக்கை கொள்ளுகிறவர்களுமே தேவனுக்கு மகிமை செலுத்துகிறார்கள். அவர்கள்

தேவன் சர்வவல்லவரும் உண்மையுள்ளவருமென உத்தமமாய் அறிக்கையிடுகிறார்கள்.

தேவன் உண்மையும் சத்தியமும் ஞானமும் இரக்கமும் கொண்ட சர்வவல்லவரென்றும், எல்லாவற்றையும் படைத்தவரும், சகல நன்மைகளையும் அளிக்கிறவரென்றும் உணர்ந்து கொள்வதே தேவனை மகிமைப்படுத்துவதாகும் என்று லூத்தர் கூறியுள்ளார். இது விசுவாசத்தினாலே மாத்திரமேயாகும். இதற்கு நேர்மாறாக நாம் அவிசுவாசத்தின் மூலம் ஆண்டவரை பெலவீனரும் வல்லமையற்றவரும் உண்மையற்றவருமாக சித்தரித்து, அவருக்கு அவமகிமை கொண்டுவருகிறோம். யோவான் சொல்லுவதுபோல தேவனை விசுவாசியாதவனே அவரைப் பொய்யராக்குகிறான் (1 யோவா. 5:10). இது எத்தனை பயங்கரமானது!

நம்முடைய கர்த்தராகிய தேவனுக்கு மகிமை செலுத்தி, அவரை நம்முடைய ஆண்டவராகக் கொள்வது தவிர வேறெதையும் அவர் நம்மிடம் எதிர்பார்க்கவில்லை. உலகத்துக்குரிய வெறுமையான தெய்வமாக அவரைக் கருதாது, நம்மில் கரிசனை கொள்ளுகிறவரும், நம்முடைய ஜெபத்தைக் கேட்கிறவரும், நம்மீது இரக்கம் காண்பிக்கிறவரும், ஆபத்துக் காலத்தில் நமக்கு உதவுகிறவருமான உண்மையுள்ள தேவன் என ஒத்துக்கொள்ளவேண்டும். நாம் அவ்வாறு மகிமை செலுத்தும்போது அவருடைய தெய்வீகத்தை அங்கீகரிக்கிறோம். இவ்வாறு தேவனுக்கு முழு இருதயத்தோடு மகிமை செலுத்துவதே எல்லா ஞானத்துக்கும் மேலான ஞானமும், எல்லா நீதிக்கும் மேலான நீதியும், எல்லா ஆராதனைக்கும் மேலான ஆராதனையும், எல்லா பலிக்கும் மேலான பலியும் என்று லூத்தர் கூறியுள்ளார்.

இதை நாம் சரிவர மனதில் கொள்ளுவோமேயானால் நாம் அதிகமான விசுவாச வரம் பெற்றுக் கொள்ள ஆசிப்போம். ஏனெனில் அதின் மூலமாகவே நாம் தேவனுடைய வார்த்தைகளிலும் வாக்குத்தத்தங்களிலும் நம்பிக்கை வைத்து, அவ்வாறு அவருக்கு மகிமை செலுத்துவோம். தேவனுக்குப் பிரியமான ஒன்றை நாம் அவருக்குச் செலுத்தும் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளுவது நமக்கு எவ்வளவு இன்பமானது! வாக்குத்தத்தம் செய்தவர் அதை நிறைவேற்றுவார் என ஆபிரகாம் முழுநிச்சயமாய் நம்பியது தேவனை மகிமைப்படுத்தியதாகுமென்று அப்போஸ்தலன் சொல்லுகிறார். கர்த்தரால் ஆகாத காரியம் உண்டோ? (ஆதி. 18:14) என்ற கேள்வியின்மூலமாக தம்முடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து ஆழமாய் சிந்திக்கும் வாய்ப்பை தேவன் ஆபிரகாமுக்கு அளித்தார். 'தேவன் வாக்களித்த யாவற்றையும் அவர் நிறைவேற்றுவார். அவரே சகலத்தையும் படைத்தவர்; அவர் சர்வ வல்லவர்; அவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.

தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை (லூக். 1:37) என்று தேவதூதன் மரியாளுக்கு நினைப்பூட்டினான். ஆகையால்தான் புருஷனை அறியாத நிலையில் தேவ குமாரனைப் பெறப்போகிறதைக் குறித்து அவளுக்கு அறிவிக்கப்பட்டபோது அவள் விசுவாசிக்கக் கூடியதாயிற்று.

தேவனுடைய சர்வ வல்லமையிலேயே நம்முடைய விசுவாசம் நிலைவரப்படவேண்டும். விசுவாசிக்கப்படும் காரியங்கள் எத்தனை பெரிதாயிருந்தாலும் தேவனுடைய சர்வ வல்லமை சகலத்தையும் நிறைவேற்றும். ஒரு காரியம் இன்னபடி நிறைவேற முடியுமென பெலவீனரும் அறிவீனருமாகிய நம்மால் விளக்கங்கொடுக்கப்பட முடியுமேயாகில்

அதற்கு விசுவாசம் தேவையில்லை. இது எவ்வாறு ஆகுமென்ற கேள்விக்கு விசுவாசத்தில் இடமே யில்லை. தேவனால் கூடாத காரியமுண்டோ? என்பதுவே விசுவாசத்திற்குரிய கேள்வியாகும். இந்த கேள்வியின் அடிப்படையிலேயே லூத்தரும் அவருடைய தோழர்களும் சுத்தாங்க சுவிசேஷத்துக்காகப் போராடினார்கள்.

வாழ்க்கைப் போராட்டத்தின் மத்தியில் நம்முடைய விசுவாசத்தைக் காத்துக்கொள்வது தேவனுடைய வல்லமையே. தேவனுக்கு நாம் மகிமை செலுத்தவும், அவருடைய கிருபையில் நாம் பூரணப்படவும் தேவன் நமக்கு சோதனைகளை அனுப்புவார். நாம் அதிகமாக சோதிக்கப்பட்டு, உள்ளும் புறம்புமான பாடுகளால் வாதிக்கப்படும்போது, அவர் நம்மை விடுவிக்கிறார்; அவருடைய வல்லமையும் உண்மையும் மகிமைப்படுகிறது.

நான் உனக்கு முன்னே போய், கோணலானவைகளைச் செவ்வையாக்குவேன். வெண்கலக் கதவுகளை உடைத்து, இருப்புத் தாழ்ப்பாள்களை முறித்து ...நானே கர்த்தர், வேறொருவர் இல்லை.... என்னைத்தவிர ஒருவருமில்லையென்று சூரியன் உதிக்கிற திசையிலும், அது அஸ்தமிக்கிற திசையிலும் அறியப்படும் (ஏசா. 45.2-6) என்று ஆண்டவரே கூறியுள்ளார்.

———

20. என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்தார். சங். 103:2,3.

என்னிடத்திலிருக்கிற ஒரு பாவம் மிகவும் பயங்கரமானது; அது மன்னிக்கப்படுவதற்கு அரிது. எனவே தேவன் மன்னிக்கிறார் என்பதை நம்புவது எனக்குக் கடினமாயிருக்கிறது என்று சிலர் சொல்லலாம். இது உண்மையென்றாலும் தேவன் அக்கிரமங்களையெல்லாம் மன்னிக்கிறார் என்று வசனம் சொல்லுகிறது. மன்னிக்கப்படமுடியாத மரணத்துக்கேதுவான பாவம் உண்டென்பது உண்மைதான். ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை (மத். 12:31) ஆனால் இந்த குற்றமுள்ளவர்கள் பாவமன்னிப்பைத் தேடுவதே இல்லை. இந்த ஒரு பாவமுந்தான் மன்னிக்கப்படமாட்டாது என்று கிறிஸ்து தெளிவாகக் கூறியுள்ளார். வேறு எந்தப் பாவமும், எந்தத் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும் என்று அவரே கூறினார். மிகவும் பயங்கரமான பாவங்களும், தேவ தூஷணம் போன்ற கொடுமையான பாவமும் மன்னிக்கப்படும், உங்கள் பாவங்கள் சிவேறென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும் (ஏசா. 1:18) என்று கர்த்தர் தாமே கூறியுள்ளார்.

சற்று சிந்திப்போம்! இவ்வளவு பெரிதான வாக்குறுதியை இரக்கமுள்ள தேவன் அளித்திருக்க, அவருடைய வார்த்தைகளை அவ்வாறே ஏற்றுக்கொள்

வது தேவையல்லவா? அதற்குப் பதிலாக தேவனுக்கு எதிர்த்துப் போராடி, அவர் அளித்துள்ள ஆறுதலான வார்த்தைகளை விசுவாசிக்க மறுப்பது அவரைப் பொய்யராக்குவதாகும். எனவே அவிசுவாசமும் கடின இருதயமும் மற்றும் தவறான நோக்கமுங்கொண்டு அவரை விட்டு அகன்று போவது எத்தனை நிர்ப்பந்தமானது!

நான் ஒருமுறை விசுவாசித்து மன்னிப்பைப் பெற்றும் மறுபடியும் பாவஞ் செய்கிறேன்; ஆண்டவர் என்னை மறுபடியும் மறுபடியும் மன்னிப்பாரா? என்று சிலர் கேட்கலாம். கிருபையும் மன்னிப்பும் பெற்ற பிற்பாடு மறுபடியும் பாவஞ்செய்வது மிகப் பெரிய தவறுதான். ஆனாலும் வசனத்தைக் கவனிப்போம். அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து விட்டார் என்று கூறுதபடி, அவர் மன்னிக்கிறார் என்றே கூறுகிறது. அதாவது ஒரு முறை நடந்த சம்பவத்தைக் குறிப்பிடாது தொடர்பாகவும் நிரந்தரமாகவும் நடைபெறுகிற ஒரு சம்பவத்தையே இது குறிப்பிடுகிறது. தேவன் நிரந்தரமாக மன்னிக்காவிடில் ஒரு ஆத்துமாவும் இரட்சிக்கப்பட முடியாதே. ஏனெனில் நம்முடைய மாம்சத்தில் நிரந்தரமாகப் பாவம் தங்கியிருந்து அடிக்கடி அது வெளிப்படுகிறது. நாம் இந்த உலகத்தில் வாழும் காலம் மட்டும் பாவம் நம்முடைய மாம்சத்தில் ஒட்டிக் கொண்டிருக்கிறது. ஆகையால் நம்மில் காணப்படும் குறைகளுக்கும் குற்றங்களுக்கும் ஒரு முடிவே இல்லை. எனவே தேவனுடைய மன்னிப்பும் நிரந்தரமானதாயிருக்கவேண்டும். நாம் நம்முடைய பாவங்களினிமித்தம் மறுபடியும் ஆக்கினைக்குள்ளாகாதபடி எப்போதும் கிருபைக்குள் நிலைத்திருக்க இது தேவையானதாகும் என்று லூத்தர் கூறியுள்ளார். இவ்வாறு தேவன் நம்மோடு நித்திய

உடன்படிக்கை ஏற்படுத்தியுள்ளபடியால் பாவம் நம்மை ஆக்கினைத்தீர்ப்புக்குட்படுத்த முடியாது.

இதை நிரூபிக்க தாவீதின் வாழ்க்கையை எடுத்துக்கொள்ளலாம். அதிககாலமாக அவர் தேவனுடைய சிறப்பான கிருபைக்குள்ளே வாழ்ந்து வந்தார். வாலிபனான காலத்தில் வேத அறிவும் ஆவியின் ஒளியும் பெற்றிருந்தார். இடையனான அவர் தேவனுடைய ஜனத்தின் அரசனாக அபிஷேகம் பண்ணப்பட்டார். அனேக வெற்றிகள் பெற்று அதிக மகிமையாய் அரசாண்டார். அவர் தேவனுடைய தீர்க்கதரிசியாகவுமிருந்தார். ஆனால் அந்தோ பரிதாபம்! ஒரே வேளையில் இருபெரும் பாவங்களாகிய விபசாரமும் கொலையுஞ் செய்தார். அவரில் இரத்தாம்பர சிவப்பான பாவங்கள் காணப்பட்டன. பக்தியும் அறிவும் கொண்ட ஒரு மனுஷனிலே அவைகள் காணப்பட்டனவென்பதையும் கவனிக்க வேண்டும். ஆயினும் அவர் மன்னிக்கப்பட்டார். மகிமையான வாக்குத்தத்தமும் மன்னிப்பும் பெற்றார். அவர் தேவனிடம் தன்னுடைய பாவங்களை அறிக்கையிட்டார். தேவனோடு ஒப்புரவாகவும் பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளவும் அவர் என்ன செய்தார்? ஒன்றுமே செய்யவில்லை. அவர் சிலகாலம் எதிர்த்து நின்றார். பின்னல் சஞ்சலங்களால் துரத்தப்பட்டு, வெட்கத்தோடு தேவனுடைய சமூகத்தில் வந்து தன்னுடைய பாவத்தை அறிக்கையிட்டார். உடனே மன்னிப்பையும் பெற்றார். நான் அடக்கி வைத்தமட்டும், நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று. என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர் (சங். 32:3,5) என்று அவரே கூறினார்.

தேவனுடைய நித்திய உடன்படிக்கையின் கருத்தை இப்போது நான் அறிகிறேன். ஒரு பாவமும் நம்மை ஆக்கினைக் குட்படுத்த முடியாது என்பதுவே அந்த உடன்படிக்கை. நம்முடைய பாவங்கள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தால் கழுவப்படும்பொழுது அவை பஞ்சைப்போலாகும். அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் (1 யோவா. 1:7). தாவீது ஞானமும் கிருபையும் பெற்றிருந்தபோதிலும் பயங்கரமான பாவத்தில் விழுந்தார். அப்படிப்பட்டவரையும் ஆண்டவர் மன்னித்திருக்க, நான் என்னைக்குறித்து சஞ்சலப்பட்டு அவரைவிட்டு ஓட வேண்டியதில்லை. தேவன் பட்சபாதமுள்ளவரென்றும் (ரோம 2:11). அவர் தம்முடைய வார்த்தையை நிறைவேற்றுகிறவரல்ல என்றும் தேவனைப் பழித்துக்கூறி அவரைத் தூஷித்து இவ்வாறு என்னுடைய பாவத்தோடே பாவத்தைக் கூட்டாதிருக்குமட்டும் தேவன் என்னுடைய எல்லாப் பாவங்களையும் மன்னிப்பாரென்னும் நிச்சயம் எனக்குண்டு. தாவீதைப்போல நானும் ஒரு மனிதனே. கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தால் நானும் மீட்கப்பட்டேன். நானும் தாவீதைப் போன்ற பாவியே. ஆயினும் தாவீது தன்னுடைய கொடிய பாவங்களுக்கும் கிருபை பெற்றிருக்க நான் நம்பிக்கை இழக்கத் தேவையில்லை. ஏனெனில் கிருபை நிறைந்த நம்முடைய ஆண்டவரே, நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பவில்லை (எசே. 33:11) என்றும், உன் அக்கிரமத்தை ஒத்துக் கொள் (எரே. 3:13) என்றும், உன் பாவங்கள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும் என்றும் கூறியுள்ளார்.

———

21. உன் நோய்களையெல்லாம் குணமாக்கி.

சங். 103:3.

நோய் என்ற பதம் ஸ்வீடன் நாட்டு மொழியிலே குற்றம், குறை, தவறு என்ற கருத்தில் வருவதாகக் கூறப்பட்டுள்ளது. எனவே இந்த வாக்கியம் பாவத்துக்கு எதிரான ஒரு ஆறுதலாய் அமைந்துள்ளது நாம் பாவமன்னிப்புப் பெற்றபின்பு பாவங்களிலிருந்து விலகி வாழ கிருபை தேவை. தேவனே நமக்கு இந்தக் கிருபை அளித்து நம்முடைய குறைகளிலிருந்து விடுதலை கொடுக்கிறார். நாம் பாவமன்னிப்பைப் பெற்று, தேவனுடைய பிள்ளைகளாகி, இரட்சகரோடு இணைந்து, பரிசுத்தாவியைப் பெற்றிருக்கிறபடியால் நம்மில் ஒட்டிக் கொண்டிருக்கிற குறைகளிலிருந்து விடுதலையடைய விரும்புவதே மிகப்பெரிய கவலையாகும். நம்முடைய விசுவாசத்தோடு நம்முடைய குறைகளைக் குறித்த வேதனையும் காணப்படாவிட்டால் நம்முடைய விசுவாசம் சரியானதல்ல.

அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள் (ரோம. 8:5) என்றும், கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல (ரோம. 8:9) என்றும் வேதம் தெளிவாகக் கூறுகிறது. கிறிஸ்துவினுடைய ஆவியுடையவர்கள் அவரைப்போலத் தூய்மையாய் வாழவே எப்போதும் ஆசிப்பார்கள். ஆகவே கிறிஸ்துவின் ஆவி மக்களிலுள்ள மாம்சீக பெலவீனங்களோடு ஒத்துவாழ முடியாதாகையால், கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டவர்கள் தங்கள்

பெலவீனங்களைக் குறித்து எப்போதும் வேதனை கொள்வார்கள். ஆகவேதான் பவுல் அப்போஸ்த லன் மிகவும் வேதனையோடு, உள்ளான மனுஷனுக் கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் மேல் பிரியமாயிருக்கிறேன்; ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக் கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண் டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது (ரோம. 7:22,23) என்று அங்கலாய்க்கிறார்.

இரண்டாவதாக, கர்த்தர் நம்முடைய வியாதி களையெல்லாம் குணமாக்குகிறார் என்பதையும் அறி யவேண்டும். நாம் வியாதியிலிருந்து முற்றும் விடு தலையாகி, கிறிஸ்துவைப்போலவும் பரலோகவாசி களைப்போலவும் எப்போதும் சுத்தமாயிருப்போ மென்று இந்த வாக்கியம் குறிப்பிடுகிறதாக சிலர் கூறுகிறார்கள். அது முற்றிலும் தவறு. ஆண்டவர் நம்முடைய ஆவிக்குரிய குறைகளை மன்னிக்கிறாரென் பது உண்மை. ஆயினும் அவைகள் மீண்டும் நம்மு டைய வாழ்க்கையில் காணப்படலாம். தன்னுடைய ஆவியின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போரா டுகிறதும் சிலவேளை தன்னை அடிமைப்படுத்துகிறது மான வேறொரு பிரமாணம் தன்னுடைய வாழ்க் கையிலே இருந்ததாக பவுல் ஒத்துக்கொள்ளுகிறார். அதுபோலவேதான் சரீர வியாதியும். ஒருமுறை ஆரோக்கியம் அடைந்த மனிதன் மறுபடியும் காய மும் வியாதியும் அடையலாம். அப்படிப்பட்ட ஒன் றும் நமக்கு நேரிடாது என்று ஆண்டவர் ஒரு இடத் திலும் கூறவில்லை. அதற்குப் பதில் நாம் ஆரோக் கியம் பெற்றுக்கொள்வதற்கேதுவாக எல்லா வழி களையும் அவர் உண்டுபண்ணி வைத்திருக்கிறார். அதோடு அவரும் நமக்கு ஆரோக்கியம் தர வல்ல

வர். நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் (யாத். 15:26) என்று அவர் கூறியுள்ளார்.

ஆவிக்குரிய நிலையிலும் ஆண்டவரே நமது மருத்துவராக இருந்து, நமக்கு எப்போதும் ஆரோக்கியம் அளிப்பது நமக்கு ஆறுதலளிக்கும் உண்மையாகும். ஆவிக்குரிய நோய் கொண்டோரது மருத்துவமனை திருச்சபையே. ஆவிக்குரிய பெலவீனமில்லாத ஒரு கிறிஸ்தவனையும் காணமுடியாது. அதோடு நம்மை நாமே ஆரோக்கியப்படுத்திக்கொள்ளவும் கூடாது. நம்முடைய பரிகாரியாகிய ஆண்டவரே நமக்கு விடுதலையளிக்கிறவராயிருக்கிறார்.

உன் நோய்களையெல்லாம் குணமாக்கிவிட்டார் என்று கூறாதபடி குணமாக்குகிறாரென்றே கூறப்பட்டுள்ளது. அது ஒருமுறை மாத்திரம் நடைபெற்ற சம்பவமாயிராதபடி நிரந்தரமாய் நடைபெறுகிற சம்பவமாகும். சரீர நோயை ஆரோக்கியப்படுத்த மருத்துவர்கள் வேதனை தரும் அறுவை சிகில்ச்சையைப் பயன்படுத்துவதுபோலவே, ஆண்டவரும் நம்மிலுள்ள பழைய மனிதனை அழித்துப்போட நம்மை சிட்சித்து அடித்து வேதனைப்படுத்தலாம். ஆயினும் அவர் நம்மை ஆற்றித் தேற்றி ஆறுதலளித்து, ஆரோக்கியப்படுத்தி, கருத்தோடு அவர் பாதையில் நடக்க உதவி செய்கிறார். நான் நானே அவர், என்னோடே வேறே தேவன் இல்லை என்பதை இப்பொழுது பாருங்கள்; நான் கொல்லுகிறேன், நான் உயிர்ப்பிக்கிறேன்: நான் காயப்படுத்துகிறேன், நான் சொஸ்தப்படுத்துகிறேன். (உபா. 32:39) என்று அவரே கூறுவது நமக்கு ஆறுதலளிப்பதாகும். இதற்கு எடுத்துக்காட்டாகத் தாவீதின் வாழ்க்கையைப் பார்க்கலாம். அவரது அன்றாட வாழ்க்கையில் வருகிற குறைகள் தவிர ஒரு பெரிய ஆவிக்குரிய வியாதியில் அவர் விழுந்தார். அயலா

னுடைய மனைவியை அவர் இச்சித்து அபகரித்துக் கொண்டார். அவ்வேளையில் ஆண்டவர் அவரை அடித்தார்; பின்பு அவரை ஆரோக்கியப்படுத்தினார். இன்னொரு முறை தாவீது பெருமைகொண்டு தன் ஜனத்தைத் தொகையிடக் கட்டளையிட்டார் அப்போதும் ஆண்டவர் அவரை அடித்தார்; ஆயினும் காயங் கட்டினார். ஆகவேதான் தாவீது என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே: அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து; உன் நோய்களையெல்லாம் குணமாக்குகிறார் என்று பாடினார்.

22.

நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பெயர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. 1 கொரி. 13:2.

நம்முடைய அன்பினாலும், அன்புச் செயல்களினாலும் நித்திய பேரின்பத்தைப் பெற்றுக்கொள்ளத் தேடும் சுயநீதி ஒருபுறமிருக்க, சிலர் நேர் எதிரிடையான செயலில் ஈடுபடுவதும் வேதனை தரும் உண்மையாகும். கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தினாலே மாத்திரம் நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோமேயொழிய நம்முடைய புண்ணியக் கிரியைகளினாலல்ல என்கிற முக்கியமான சத்தியத்தை

அறிந்துள்ள விசுவாசிகள், அந்த விசுவாசத்தின் மூலமாக தெய்வீக அன்பைப் பெற்றுள்ளபோதிலும், சிலகாலங்கழித்து அன்பில் அனலற்றுப்போய் அன்பின் செய்கையற்று சுயநலத்தில் வாழ்கிறார்கள். அன்பற்ற விசுவாசவாழ்க்கையில் இவர்கள் ஆறுதல் காண்கிறார்கள். விசுவாசம் மாத்திரந்தானே நம்மை இரட்சிக்கிறது என்று தங்களைத் தாங்களே தேற்றிக் கொள்ளுகிறார்கள்.

இந்த வஞ்சனைக்கு எதிராக தேவன் கூறியுள்ள மேற்கூறிய பாடத்தை நாம் கருத்தாக சிந்திக்க வேண்டும். தேவனுடைய கிருபையினால் மாத்திரம் நாம் நீதிமான்களாகிறோம் என்பதுவும், தேவன் கிறிஸ்துவுக்குள் நம்மை நேசித்த அன்பில் நாம் வைக்கும் விசுவாசத்தின்மூலமாக இரட்சிக்கப்படுகிறோமென்பதுவும் உண்மை. இவைகளில் நம்முடைய அன்புக்கு இடமில்லை. ஆயினும் அன்பற்ற விசுவாசத்தினால் நாம் நீதிமான்களாகமுடியுமென்பது அரிது. மலைகளைப் பெயர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை என்று அப்போஸ்தலன் கூறுகிறார். சூடில்லாத நெருப்பு இருக்கமுடியாததுபோலவே அன்பற்ற விசுவாசமும் இருக்க முடியாது என்று லுத்தர் கூறியுள்ளார்.

விசுவாசத்தின்மூலமாக மாத்திரம் நாம் நீதிமான்களாகிறோம் என்று வேதம் கற்பிக்கும்போது, விசுவாசம் நம்முடைய இருதயங்களுக்கு உயிரளித்து அன்பினால் அனலேற்றுகிறது என்றே பொருள்படுகிறது. நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் (யோவா. 13:35) என்று நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து கூறினார். யோவான் தம்முடைய

முதலாம் நிருபத்தில் அன்பினிமித்தமே நாம் நம்மை சத்தியத்திற்குரியவர்களென்று அறிகிறோம் (1 யோவா. 3:19) என்றும், நாம் தேவனால் உண்டாயிருக்கிறோம் என்று அறிந்திருக்கிறோம் (1 யோவா. 5:19) என்றும், நாம் தேவனால் பிறந்திருக்கிறோம் (1 யோவா. 4:7) என்றும் பலமுறை கூறியுள்ளார். நமக்கு விசுவாசமிருக்குமேயானால் நம்மை மன்னித்த கிருபையுள்ள ஆண்டவருக்கு நேராகவும், அதோடு நம்முடைய அயலகத்தாருக்கு நேராகவும் ஆழ்ந்த அன்பு உண்டாகிறது.

கிறிஸ்து இயேசுவில் நம்பிக்கை வைத்துள்ள மற்றுள்ளோரோடு நாம் சகோதர சிநேகம் காண்பிப்பது ஒருபுறமிருக்க, எல்லாரும் இரட்சிப்படைந்து நித்திய பேரின்பத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்கிற கரிசனையும் நம்முடைய உள்ளத்தில் உண்டாகிறது. இத்தகைய தெய்வீக அன்பை நாம் இழந்துபோனால், நம்முடைய விசுவாசத்தின் நிலையென்ன? எபேசு சபையின் தூதன் தன் ஆதி அன்பை இழந்தபிற்பாடும் புகழ்ச்சிக்குரிய பல செயல்கள் புரிந்ததைக் கிறிஸ்து கண்டார். ஆயினும் அவன் மனந்திரும்பாவிட்டால் விளக்குத்தண்டு அவனிடத்திலிருந்து எடுத்துப் போடப்படும் என்ற பயங்கரமான எச்சரிப்புக்கு ஆளாகும் நிலையில் அவன் விழுந்து விட்டானெனக் காண்கிறோம்.

உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும், நீ பொல்லாதவர்களைச் சகிக்கக்கூடாதிருக்கிறதையும். அப்போஸ்தலரல்லாதவர்கள் தங்களை அப்போஸ்தலரென்று சொல்லுகிறதை நீ சோதித்து அவர்களைப் பொய்யரென்று கண்டறிந்ததையும்; நீ சகித்துக்கொண்டிருக்கிறதையும், பொறுமையாயிருக்கிறதையும், என் நாமத்தினிமித்தம் இளைப்படையாமல் பிரயாசப்

பட்டதையும் அறிந்திருக்கிறேன். ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பைவிட்டாய் என்று உன் பேரில் எனக்குக் குறை உண்டு ஆகையால் நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாத பட்சத்தில், உன் விளக்குத்தண்டை அதனிடத்தினின்று நீக்கி விடுவேன் (வெளி. 2:2-5).

கிறிஸ்துவின் பாதபீடத்தில் எப்போதும் காத்திராத ஆத்துமா தன்னிலே சுயநீதி கொண்டு சகோதர சிநேகத்தை இழந்துபோவதினால், கிறிஸ்து மேலே கூறிய எல்லா நற்கிரியைகளும் அந்த ஆத்துமாவிலே காணப்பட்டாலும் அன்பு குறைந்து போகக் கூடுமென்று அறிகிறோம். நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம்போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். நான் தீர்க்கதரிசன வரத்தையுடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும் சகல அறிவையும் அறிந்தாலும் ....எனக்குண்டான யாவற்றையும் நான் அன்னதானம்பண்ணினாலும், (இரத்த சாட்சிகளைப்போல) என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை (1 கொரி. 13:1-3) என்று அப்போஸ்தலன் கூறியதிலிருந்து மிகச் சிறந்த செயலும் சேவையும் செய்கிறவர்களிடமும் அன்பில்லாதிருக்கலாம் என்பது தெளிவாகிறது.

உண்மையான அன்பைப் பெற்றுக்கொள்வது எவ்வாறு என்பதை தேவனுடைய சமூகத்தில் சிந்திக்கவேண்டும். விசுவாசத்தினாலும் கிருபையினா

லும் நம்முடைய உள்ளத்தில் பிறக்கிற உண்மையான அன்பில்லாதபடி நாம் எவைகளைச் செய்தாலும் எவ்வாறு வாழ்ந்தாலும் எல்லாம் வஞ்சனையும் ஏமாற்றமும் என்று கிறிஸ்துவின் வார்த்தைகளிலிருந்தும் அப்போஸ்தலனுடைய நிருபத்திலிருந்தும் அறிந்துகொள்ளுகிறோம். இதை நம்முடைய வாழ்நாள் முழுவதும் நினைவில்கொள்ளுதல் தேவை.

———

23. ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம். ரோம. 14:8.

விசுவாசிகளுடைய இவ்வையக வாழ்க்கையின் இரகசியமும் மகத்துவமும் இதுவே. அவர்களது முழு வாழ்க்கையும் அதாவது அவர்களது ஜீவனும் மரணமும் ஆண்டவருக்கே உரியது. அவர்கள் தங்களுக்குச் சொந்தமானவர்களல்ல. தங்களைப் படைத்தவரும் மீட்டுக்கொண்டவரும் பரிசுத்தம்பண்ணினவருமாகிய ஆண்டவருக்கே அவர்கள் சொந்தம். அவரோடு அவர்கள் செய்த உடன்படிக்கையினிமித்தம் அவர்கள் அவருக்குச் சொந்தம். அவர்களுடைய வாழ்க்கை முறையிலும் அவருக்கே சொந்தம்.

நாம் யாரும் நமக்காக வாழ்வதில்லையே! ஆனால் ஆவிக்குரிய மரணமடைந்தவர்கள் நீதிக்கு விலகி தங்களுக்கென்றும், தங்கள் நலனுக்காகவும் தங்கள்

சுய இச்சைகளின்படியும் வாழுகிறார்கள். புதுப்பிறவியும் ஆவிக்குரிய ஜீவனும் வெறும் ஊகமல்ல அவைகள் அனுபவத்திற்குரியவைகள். அவைகளை அடைந்து கொண்டவர்கள் இயற்கையில் அமைந்திராத வல்லமைகளையும் தன்மைகளையும் பெற்றுக் கொள்ளுகிறார்கள். எனவேதான் அப்படிப்பட்டவர்கள் மாத்திரமே தங்களுடைய ஆவியிலும் வாழ்க்கை முறைகளிலும் ஆண்டவருக்காக ஜீவிக்கிறார்கள். அத்தகைய அனுபவத்தை அடைந்த நமக்கு ஆண்டவருக்காகவும் அவருடைய மகிமைக்காகவும் வாழ்ந்து, அவரைப் பிரியப்படுத்துவதே வாழ்க்கையின் இலக்காகவும் இலட்சியமாகவும் இருக்கும். எனவே நம்முடைய உள்ளத்தின் ஆழத்தில் ஆண்டவருக்காக வாழும் ஆவலும் ஆர்வமும் மாத்திரமே இருக்கும். இதற்கு மாறாக நமக்காக வாழும் எண்ணம் நம்மில் தோன்றுமேயானால் அதைக் குறித்து நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

மரணத்திலும் ஒரு விசுவாசி தனக்குரியவனல்ல. அவன் கர்த்தருக்கே உரியவன். தன்னுடைய வாழ்க்கையைத் தன் விருப்பம்போல முடித்துவிட ஒரு விசுவாசிக்கு உரிமையோ அனுமதியோ இல்லை. தன் வாழ்க்கையை தியாகம் செய்கிறதாயிருந்தாலும் அதுவும் தேவனுடைய சட்டப்படியும் ஒழுங்குப்படியுமே நடக்கவேண்டும். 1 கொரி. 6:19,20 என்ற வாக்கியங்களில் நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களென்றும் அப்போஸ்தலன் கூறுகிறார். எனவே தேவனுடைய மகிமைக்காகவும் பிரியத்தின்படியும் அவருடைய சட்டமும் ஒழுங்கும் தேவைப்படுமேயானால் மாத்திரமே நம்முடைய வாழ்க்கையை நாம் தியாகஞ்செய்யலாம். ஆகையால் ஒரு விசுவாசி வாழவோ மாளவோ விரும்பக்கூடாது. நான் இந்த உலகத்தில் தொடர்ந்து வாழ்வது ஆண்டவ

ருக்குச் சித்தமானால் நான் அதையே விரும்புகிறேன்; அவர் என்னை எடுத்துக்கொள்ள விரும்பினால் இங்கு நான் வாழ ஆசிக்கவில்லை என்றே ஒரு விசுவாசி கூறவேண்டும். சிலவேளை நீண்ட நாள் வாழ ஆசிப்ப தால் நாம் தவறு செய்கிறோம். வேறு சமயம் நாம் மரிக்க விரும்புவதால் குற்றமுள்ளவர்களாகிறோம். நாமும் நமக்குள்ள யாவும் நம்முடைய ஜீவனுங்கூட ஆண்டவருக்கே சொந்தம். நாம் அவருக்கு அடங்கியே வாழவேண்டும்.

நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம். நம்முடைய உயிரையும் நம்முடைய வாழ்க்கை முழுவதையும் கர்த்தருடைய உடைமையென்றும், எனவே நாம் அவருடைய அடியாரென்றும் கருதுவதே அவருக்காகப் பிழைப்பதாகும். நாம் செய்கிறதும் கைவிடுகிறதுமான எல்லாவற்றிற்கும் அவருடைய சித்தத்தையே பிரமாணமாகக் கைக்கொள்ளுவதும், அவரை மகிமைப்படுத்துவதையும் பிரியப்படுத்துவதையுமே நம்முடைய குறிக்கோளாகக் கொள்ளுவதும், நம்முடைய வாழ்க்கை முழுவதையும் அவருடைய கரத்திலே அர்ப்பணிப்பதும், துன்பமானாலும் இன்பமானாலும், லாபமானாலும் நஷ்டமானாலும் நம்முடைய எல்லா தாலந்துகளையும் திறமைகளையும் அவருக்காகத் தத்தஞ்செய்வதுவே அவருக்காகப் பிழைப்பதாகும்.

நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம். நம்முடைய வாழ்க்கையை கர்த்தருக்குரியதாக அர்ப்பணித்துள்ளதுபோலவே நம்முடைய மரணத்திலும் நாம் அவருக்குரியவர்களே. நாம் இயற்கையான மரணமடைந்தாலும் நாம் கர்த்தருடையவர்கள் என்கிற உணர்வோடேயே இவ்வுலகத்தை விட்டு கடந்து போகிறோம். ஆண்டவர் நம்மை எப்போது அழைத்தாலும், எம்முறையில்

அழைத்தாலும் அவரண்டை செல்ல நாம் மகிழ்ச்சி
அடைகிறோம். ஆயினும் சிலவேளை மரணம் நம்மு
டைய தெரிந்தெடுப்பைப் பொறுத்தும் இருக்க
லாம். கடுமையான உபத்திரவகாலத்தில் கிறிஸ்
துவை மறுதலிப்பதின் மூலமாக இரத்தசாட்சி மர
ணத்துக்கு ஒரு விசுவாசி தப்பலாம். தனக்கு மரணத்
தைக் கொண்டுவரக்கூடிய ஊழிய முறையையோ
ஊழிய களத்தையோ ஒரு மிஷனெரி கைவிடலாம்.
ஆண்டவருடைய ஆணைப்படி தன் ஜீவனை இழக்க
வேண்டிய ஒரு போர்ச்சேவகன் யுத்தக்களத்திலி
ருந்து ஓடி தன் ஜீவனைக் காக்கலாம். மேலே கூறிய
சூழ்நிலைகளில் உண்மையான ஒரு விசுவாசி ஆண்ட
வரை மறுதலிப்பதைக் காட்டிலும் தன் ஜீவனை
இழப்பதையே தன் முதற்கடமையாகக் கொள்ளு
வான். இவ்வாறு ஆண்டவர் நிமித்தம் தன் ஜீவ
னைத் தியாகஞ் செய்கிற ஒருவன் கிறிஸ்துவுக்
கென்றே மரிக்கிறான்.

நாம் பிழைத்தாலும் மரித்தாலும் கிறிஸ்துவுக்
குரியவர்களே. வாழ்விலும் சாவிலும் நாம் அவரது
உடைமையும் ஊழியருமே. வாழ்விலும் மரணத்தி
லும் மரணத்துக்குப் பின்பும் கர்த்தருடையவர்களா
யிருக்கும் உரிமையும் சிலாக்கியமும் ஆறுதலும் விசு
வாசிகளுக்கே உரியது. அவர்கள்மேல் அவர் அன்
பும் கரிசனையுங் கொள்ளுகிறார். வானத்திலும் பூமி
யிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்
டிருக்கிறது. (மத். 28:18) என்று கூறியவருடைய
கரத்திலேயே அவர்கள் இருக்கிறார்கள். நாம் பர
தேசிகளாய் இவ்வையகத்தில் வாழும் காலத்தும்
நாம் அவருடைய பிள்ளைகளும் ஊழியருமே. இந்த
உலக வாழ்க்கையை விட நேரிடும்போது நாம்
கர்த்தரிடத்தில் குடியிருந்து (2 கொரி. 5:8) அவர்
இருக்கிறவண்ணமாகவே நாம் எப்போதும் அவ
ரைத் தரிசிப்போம். இவ்வுலகத்தில் வாழும்போது

விசுவாசம், அன்பு, ஊழியம் என்பவைகளில் நாம் அவருடையவர்கள். மரித்தபின்னர் நம்முடைய சரீரமும் ஆத்துமாவும் அவருடையது. உயிர்த்தெழுதலின் நாள் வரைக்கும் நம்முடைய சரீரங்கள் பத்திரமாக அவரால் பாதுகாக்கப்படுகின்றன. ஆனால் ஒருநாள் அந்த சரீரங்கள் நித்திய ஜீவனைப் பெற்று அழியாமையை அடைந்துகொள்ளும். நம்முடைய ஆத்துமா கிறிஸ்துவின் மகிமையான சரீரத்துக்கொத்த ஆவிக்குரிய சரீரத்தைத் தரித்துக்கொள்ளும் மகத்துவமான நாள் மட்டும் அது கிறிஸ்துவோடும் அவருடைய பரிசுத்தவான்களோடும் பரதீசிலே வாசம் செய்யும். இக்காலத்தில் கர்த்தருடையவர்களாயிருப்பவர்கள் மாத்திரமே மறுமையிலும் நித்தியமாய் அவருடையவர்களாயிருப்பார்களென்கிறதைத் திட்டமாய் அறிந்து கொள்ளவேண்டும். ஆகவே பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களென்கிற கருத்து விசுவாசிகளாகிய நமக்கு மிகவும் ஆனந்தம் அளிப்பதாகும்.

———

24. விசுவாசமுள்ளவனுகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்.

மாற். 16:16.

ஞானஸ்நானத்தால் வரும் மகிமையான ஈவுகள் எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து சுருக்கமாகவும் அழுத்தமாகவும் தெளிவாகவும் கூறும் வசனமே கலாத். 3:27 ஆகும் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்கள் என்னும் சத்தியத்தை நாம் கண்டுகொள்ள தேவன் நமக்கு உதவட்டும். கிறிஸ்துவுக்குள்ளான ஞானஸ்நானத்தின் மூலமாக நாம் பெற்றுக்கொள்ளும் தானமாகிய பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான வாழ்க்கையின் இரகசியமிதுவே. நாம் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டோம். பிராயச்சித்தத்தின் நாளிலே கிறிஸ்து பிதாவின் முன்பாக தன்னுடைய தன்மையில் காணப்படாது, உலகத்தின் பாவத்தைச் சுமந்தவராய் நம்முடைய ஸ்தானத்தில் எல்லா பாவிகளுக்காகவும் ஒரு பாவியாகக் காணப்பட்டது போலவே நாமும் இருக்கிற பிரகாரமாகவே தேவனுக்கு முன்பாக நிற்காதபடி அவருடைய குமாரனுகிய கிறிஸ்துவின் தன்மையிலே நாம் நிற்போம். அன்று அவர் உலகத்தின் பிரதிநிதியாய் நின்ருர். இப்போதோ நாம் அவரைத் தரித்துக் கொண்டோம். ஆகவே தேவன் நாம் இருக்கிறபடி நமமைக் கணக்கிடாதபடி கிறிஸ்துவின் அடிப்படையிலேயே நம்மை நிதானிப்பார். கிறிஸ்துவின் அங்கியிலும் அவரது ஆளத்துவத்திலும் அவருடைய நீதியிலும் நற்பெயரிலுமே நாம்

தேவனுக்கு முன்பாக நிற்போம். கிறிஸ்துவைத் தரித்துக்கொள்வதின் கருத்து இதுவே.

கிறிஸ்து நமக்குச் செய்த எல்லாக் காரியங்களும் அவருக்குள்ளான ஞானஸ்நானத்தின் மூலமாக நமக்கு மாற்றப்பட்டு விட்டன. நமக்காக அவர் சம்பாதித்துள்ளவைகளையும் நித்திய ஆசீர்வாதங்களையும் இந்த அனுபவத்தின் மூலமாகப் பெற்றுக் கொள்ளுகிறோம். கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுவதின் மூலமாக அவர் நமக்காகவும் நம்முடைய இடத்திலும் செய்த எல்லாக் காரியங்களும் நமக்கு உரிமையாகிவிட்டன. கிறிஸ்து பரிபூரண பரிசுத்தமும் நீதியுமானவர். எனவே அவருக்குள்ளாக நாமும் பரிசுத்தமும் நீதியுமாகிறோம். ஏனெனில் நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும் படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் (2 கொரி. 5:21). மேலும் தேவன் அவரைக் குறித்து நான் இவரில பிரியமாயிருக்கிறேன் என்று கூறுமளவிற்கு கிறிஸ்து அருமையான குமாரனாயிருந்தார். அவர் தேவனுடைய புத்திரனும் இராஜியத்தின் சுதந்தரவாளியுமாயுமிருந்தார். ஆகவே நாமும் தேவனுடைய புத்திரரும் கிறிஸ்துவின் உடன் சுதந்தரருமே.

குறைவுள்ள சீஷர்களைக் குறித்து நீங்கள் முற்றிலும் சுத்தமாயிருக்கிறீர்கள் என்று இயேசு கூறியதின் கருத்தை இப்பொழுது அறிந்து கொள்ளுகிறோம். மேலும் கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை (ரோம. 8:1) என்ற வசனத்தின் கருத்தையும் இப்போது புரிந்துகொள்ளுகிறோம். எனவே நாம் மாம்சத்திலிருக்கிற காலத்தில் அசுத்தமும் தீமையும் நம்முடைய அனுதின வாழ்க்கையில் பற்றிக் கொண்டாலும் அவைகளினிமித்தம் நாம் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படுத்தப்படுவ

திலலை. ஏனெனில் நாம் கிறிஸ்துவை தரித்திருக்கிற படியால் நம்மை யாரும் நியாயந்தீர்க்க முடியாது. இக்காரணங்கொண்டுதான் தீர்க்கதரிசியும் அவருக்கு இடும் நாமம் நமது நீதியாயிருக்கிற கர்த்தர் என்பதே (எரே. 23:6) என்று முன்னுரைத்துள்ளார்.

இந்த இரகசியத்தை சரியாகவும் பூரணமாகவும் அறிந்துள்ளவர்களே ஓரளவு அறிவுள்ளவர்களாகக் கருதப்படுவார்கள். அவர்கள் பிசாசின்பிடியிலிருந்து விலகி உண்மையான தெய்வீக சமாதானம் அடைந்துள்ளார்கள். மேற்கூறிய உண்மையை உணராதவர்களோ சுவிசேஷத்தை அறியாதவர்களும், தங்களுக்கோ பிறருக்கோ அறிவுரை கூற முடியாதவர்களுமே. அப்படிப்பட்டவர்கள் வாழ்நாள் முழுவதும் உண்மையான சமாதானத்தையோ பரிசுத்தமாகுதலையோ அடைந்து கொள்ள முடியாது. எனவே இரட்சிப்புக்கான இந்த அறிவு ஒவ்வொருவருக்கும் மிகவும் தேவையானதாகும். இந்த அறிவை அடையும் ஒருவர் தேவனுக்கு முன்பாகத் தன்னுடைய அசுத்தமான ஆடையில் தோன்ருது கிறிஸ்துவைத் தரித்திருப்பதால் தேவனுக்கு முன்பாகத் தூய்மையாய் அழகாய் தேவனுக்குப் பிரியமாய் கிறிஸ்துவுக்குள் தோற்றமளிப்பார். எனவே அவர் புதிய சிருஷ்டியாய் மாறி தேவனுக்கும் அயலானுக்கும் நேராக பரிவுள்ள சிந்தை கொள்வதோடு, தனக்குள்ளே நிலையான சமாதானத்தை அனுபவிப்பார் கிறிஸ்துவே அவருக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமாகவும், நீதியும் பரிசுத்தமாகவும், அவருடைய வாழ்க்கை எண்ணங்களின் மையப் பொருளாகவும் தோன்றுவார். அத்தகையவர் கிறிஸ்துவையும் அவரது வழிகளையுமே நேசிப்பார். தன்னுடைய பழைய பாவ வழிகளை முற்றிலும் விட்டு விட்டு கர்த்தரையே பின்பற்றவும் சேவிக்க

வும் விரும்புவார். கிறிஸ்துவிலேயே தன்னுடைய நம்பிக்கையை வைப்பார். என் அருமை இயேசுவே, என் இருதயத்தை முற்றிலும் கழுவி என் மாம்சத்தை அழித்துப்போடும் என்றே ஜெபிப்பார். ஞானஸ்நானத்தின் அடையாளமும் செயல்பாடும் இதுவே. ஆகையால்தான் ஞானஸ்நானத்தை மறுஜென்ம முழுக்கு என்றும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதல் என்றும் (தீத். 3:5) அப்போஸ்தலன் குறிப்பிடுகிறார்.

—·—

25. அப்பொழுது பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத்தென்னும் மறுபேர்கொண்ட யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான்.

லூக். 22:3.

மாய்மாலக்காரர்கள் மாய்மாலத்திலேயே வாழ்வார்கள்; உண்மையான விசுவாசிகளோ ஒன்றுக்குமே அஞ்சவேண்டியதில்லை என்று எண்ணி யாரும் நிர்விசாரமாயிருக்கக்கூடாதென்ற பாடத்தைஇந்த பயங்கரமான சம்பவத்திலிருந்து கற்றுக்கொள்ளுகிறோம். யூதாசின் வாழ்க்கை இந்த படிப்பினையை நமக்கு அறிவுறுத்துகிறது. இயேசு யூதாசைத் தெரிந்துகொண்டபோது அவன் இருந்த நிலை ஒன்று; பிற்காலத்தில் அவன் விழுந்த நிலை வேறு. இவ்வாறு ஆவியில் ஆரம்பித்த எத்தனையோபேர் மாம்சத்தில் முடித்திருக்கிறார்கள். யூதாசின் வீழ்ச்சியையும், அதுபோல் பாவத்தில் விழுந்த பிறருடைய வாழ்க்கைகளையும் பார்க்கும்போது ஒரு விசுவாசி

எவ்வளவு எளிதாய் விழுந்துபோகமுடியுமென்பதை அறிகிறோம். பிசாசானவன் தக்க தருணத்தில் நம்மைத் தாக்கி, தன்னுடைய தந்திரத்தாலும் திறமையாலும் மாம்சீக இச்சைகளைக் கிளறிவிட்டு நமது புத்தியை மழுங்கச் செய்து, மிகவும் பெரிய, கொடிய பாவங்களைப்போலும் ஆபத்தற்றவையாகவும் அருமையானதாகவும், வேண்டுமானால் தேவையானதாகவும். காண்பித்து, அவற்றில் நம்மை எளிதாக விழச்செய்வான். இத்தகைய சோதனையின் வேளையில் மூன்று காரியங்கள் வெளியரங்கமாயிருக்கின்றன: 1) குறிப்பிட்ட பாவம் நமக்கு மிகவும் அருமையும் இனிமையுமாய்த் தோன்றும். 2) எவ்வளவு ஆழமாய்ச் சிந்தித்தாலும் அந்த பாவம் ஆபத்தாய்த் தோன்றாது, அற்பமாயும் முக்கியமற்றதாயும் தோன்றும். 3) இப்பாவங்களைக் குறித்து கவலைப்படத் தேவையில்லை என்று எண்ணக்கூடிய எளிய பாவங்களிலேயே வீழ்ச்சி ஆரம்பிக்கும்.

இவ்வாறாகவே சர்ப்பம் ஏவாளை வஞ்சித்தது. அது ஏவாளைப் பார்த்து நீ சாகவே சாவதில்லை வெறும் ஒரு பழத்தைப் புசிப்பதில் என்ன இருக்கிறது? பழம் எல்லாம் பழந்தான். அதைப் புசிப்பதால் உனக்கு இலாபந்தான். இனிய கனியை ரசித்து புசிக்கலாம்; அதோடு உன் அறிவும் பெருகும் என்றே சாத்தான் துராசை புகட்டினான். யூதாசை வசீகரித்ததும் இதே முறைதான். ஒரு வேளை ஆரம்பத்தில் பணத்தை சிறிதளவு திருடியிருப்பான். நான் கொஞ்சப்பணந்தானே எடுத்தேன்; அதுவும் இம்முறை மாத்திரந்தான் என்று ஒவ்வொரு முறையும் அவன் தன்னை சமாதானப்படுத்தியிருக்கக்கூடும். என்னுடைய தொழிலுக்குரிய கூலியைத்தானே நான் எடுக்கிறேனென்று கூட அவன் தன்னை ஆற்றியிருக்கலாம்.

மேலும் இயேசுவைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் யூதாசைத் தூண்டியபோது அவன் தனக்குள் இவ்வாறு எண்ணியிருக்கலாம்: முப்பது வெள்ளிக்காசு உதாசீனம் செய்வதற்குரியதல்ல. அதைப் பெற்றுக்கொள்வதில் ஆபத்தொன்றுமில்லையே. இயேசுகிறிஸ்து குற்றமற்றவர். அவர் சர்வ வல்லவர். அவருடைய உயிருக்கு ஆபத்து வராது. நானும் பணம் சம்பாதித்துக்கொள்ளலாம். யூதாஸ் இவ்வாறு நிச்சயமாக எண்ணியிருக்கக்கூடும். தான் நினைத்த இழி செயலைப் புரிந்தபின் மறுநாளிலே யூதாஸ் மனவேதனை கொண்டு மரத்திலே தூங்கி மரிப்பானென யார்தான் நினைத்திருக்கக்கூடும்? அவனும் அவ்வாறு நினைத்திருக்க ஏதுவில்லை. கிடைத்த பணத்தைக் கொண்டு எவ்வாறெல்லாம் வாழ்க்கையை அனுபவிக்கலாமென்றே சிந்தித்திருப்பான். வியாழக் கிழமையன்று கிறிஸ்து அவனை எச்சரித்தார். மறுநாள் அவனிலுண்டான மனஸ்தாபமும் மனக்கலக்கமும் முந்திய நாள் அவனிலுண்டாயிருக்குமேயானல் தான் செய்யப்போகிற காரியத்தைக் குறித்து அவன் வெகுவாய் அஞ்சியிருப்பான் ஆனல் பிசாசானவன் அவன் உள்ளத்தை பல்வேறு எண்ணங்களினுல் நிரப்பியிருந்தபடியால் அவன் தனக்கு வரப்போகிற நிலையை அறியாதிருந்தான்.

இதை ஒவ்வொருவரும் நன்ருய் சிந்தித்து. பாவம் பிசாசு என்பவற்றின் உண்மையான நிலையைக் கண்டுகொள்ளக் கற்றுக்கொள்வது நலம். பாவத்திற்கும் மாய்மாலத்திற்கும் ஒருமுறை இடங்கொடுக்கிறவர்கள் சீக்கிரத்தில் புத்தி மழுங்கினவர்களாய் வஞ்சிக்கப்பட்டு, குருட்டாட்டம் கொண்டவர்களாய்ப் பாவத்திஞல் வரும் ஆபததை உணராது போகிருர்கள். அதன் பின்னர் அவர்கள் படிப்படியாக அழிவுக்கு ஆளாகிருர்கள். பாவத்தின்

வஞ்சனையில் அகப்படுகிற மக்கள் சோதனைகளைக் கூர்ந்து கவனித்தாலும் அவைகள் அவர்களுக்கு ஆபத்தற்றவைகளாகவும் அற்பமானவைகளாக வுமே தோன்றும். அதோடு அவைகள் அருமையா யும் இனிமையாயும் காணப்படும். இதுவே சோதனை களின் தனி நிறமாகும். இந்நிலையில் பரிசுத்தவான் போல பாசாங்கு பண்ணி பாவத்துக்குட்பட்டு அதை மறைக்கிறவர்களின் நிலை ஆபத்தே.

பாவம் பிசாசு என்பவைகளின் தங்கமயமான மேலாடையே மாய்மாலமாகும். மாய்மாலமின்றி பிசாசால் ஒன்றும் சாதிக்க முடியாது. மாய்மால மில்லாமல் பாவத்தில் வாழவோ தொடரவோ முடி யாது. பிசாசு தனக்குள் ஏவியதை யூதாஸ் ஒரு சீஷ னிடத்திலாவது அறிக்கையிட்டிருப்பானேயாகில் சாத்தான் தோல்வியுற்றிருப்பான். யூதாஸ் தன் பாவத்தில் தொடர்ந்திருக்கவும் முடியாது. இம் முறையைப் பின்பற்றியே பலமாய்ச் சோதிக்கப் பட்ட விசுவாசிகள் சாத்தானை ஜெயித்து ஆசீர் வாதம் அடைந்தார்கள். எனவேதான் நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒரு வருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒரு வர் ஜெபம்பண்ணுங்கள் (யாக். 5:16) என்று அப் போஸ்தலன் அறிவுரை கூறியுள்ளார்.

அநேகர் இப்படிப்பினையை கசப்பான அனுப வங்களின் மூலமாகவே கற்றுக்கொள்ளுகிறார்கள். சிலவேளை அது தாமதித்துப்போகிறது. இதைக் குறித்து விசுவாசிகள் சிந்தியாதிருப்பதின் காரண மென்ன? சோதனையின் வேளையில் கண் மங்கிப் போன மக்கள் தங்களில் ஊக்கங்கொண்டு தங்க ளது செய்கையால் எப்பாதகமும் வருவதில்லை யென்று எண்ணுகிறார்கள். ஆனால் அவர்கள் செய் கைகளோ அவர்களது வாழ்க்கைக்கும் ஆத்துமா வுக்கும் ஆபத்தைக் கொண்டுவருகின்றன.

எனவே நாமும் சீஷர்களைப்போன்று யார் தான் இரட்சிக்கப்படக்கூடும்? என்ற கேள்வியைப் பயத்தோடும் நடுக்கத்தோடும் கேட்கவேண்டும். அதற்கு இயேசு கூறிய பதிலென்ன? மனுஷரால் இது கூடாததுதான்; தேவனாலே எல்லாம் கூடும் என்பதுவே (மத். 19:26). இத்தகைய அச்சத்தோடு வாழும் காலம் மட்டும் நாம் அழிந்துபோகாது ஆண்டவருடைய கரத்தில் அமர்ந்திருப்போம். அவர் உண்மையுள்ள உதவியாளரும் மேய்ப்பருமாமே. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை. ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை (யோவா. 10:28) என்று அவரே கூறியுள்ளார்.

——

26. நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். ரோம. 12:19.

தேவன் நீதியின்படியே பழிவாங்குகிறதையும் மனிதர் உக்கிரத்தில் பழிவாங்குகிறதையும் வேற்றுமைப்படுத்தியே பவுல் இங்கு எழுதியுள்ளார். நாம் தேவனுடைய பாதுகாவலுக்கு அனுமதிப் போமேயானால் அவர் நமக்கானவைகளைக் கவனித்து, நமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைத் தவிர்த்து, நமக்கு நீதி கிடைக்கும்படி செய்வார். ஆனால் நாமாக பழிவாங்குவோமேயானால் நாம் தேவனுக்கு மிஞ்சினவர்களாய் நமக்குள்ள வழக்கை அவர் கையிலிருந்து பறித்துக்கொள்ளுகிறவர்க

ளாவோம். இந்நிலையில் நாமே நமக்கு உதவ வேண்டியது வரும். இதைத்தான் அப்போஸ்தலன் மேற்கூறிய வசனத்தின் மூலமாகக் குறிப்பிட்டுள்ளார். நமக்குச் செய்யப்பட்ட அநீதி நிச்சயமாக பழிவாங்கப்படும். ஆனால் அதை தேவனிடத்தில் ஒப்படைக்கும்போது அவர் தம்முடைய மகத்துவத்தின்படியே எல்லாரையும் ஒன்றுபோல நியாயம் விதிக்கிறார். நாம் பழிவாங்கினாலோ அவருடைய கடமையைக் கைப்பற்றினவர்களாவோம். கர்த்தரே தம்முடைய படைப்பு எல்லாவற்றின் மீதும் அரசனாகவும் நீதிபதியாகவும் இருக்க விரும்புகிறார்.

பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் (ரோம. 12:19) என்று கர்த்தர் சொல்லுகிறார். இந்த வசனம் நம்முடைய பழிவாங்கும் விருப்பத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி போடவேண்டும். தேவனே நமக்காகப் பழிவாங்குகிறபடியால் நாம் அவருடைய கோபாக்கினையைக் குறித்து அச்சங்கொண்டு நம்முடைய கோபம் இரக்கமாக மாற வேண்டும். உங்களைத்தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகிறான் (சக. 2:8) என்ற வாக்கியம் தேவன் தம்முடைய பிள்ளைகளையும் நண்பர்களையும் எவ்வளவாய் நேசிக்கிறாரென்பதைத் தெளிவுறுத்துகிறது. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது (மத். 10:30) என்று கிறிஸ்து விளம்பியதின் மூலம் தேவன் தம்முடையவர்களை எத்தனை கரிசனையோடு பாதுகாக்கிறார் என்பது விளங்குகிறது. எனவே பிறர் நமக்குச் செய்யும் மறைவான தீமைகளும் குரூரச் செயல்களும் அவருக்கு மறைவாயிருக்கவில்லை என்பதும் இதிலிருந்து தெளிவாகிறது. மேலும் கர்த்தராகிய தேவன் தாமே கோபத்தோடு ஒரு மனிதனைத் தண்டித்தால் எத்தனை பயங்கரமாயிருக்கும் என்பது நமக்குத் தெரியும். ஆகையால் நாம் அமர்ந்திருந்து, ஆண்ட

வரே, எங்கள் எல்லார் மீதும் இரக்கமாயிரும்; எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னித்தருளும் என்றே ஜெபிக்கவேண்டும்.

தேவன் நமக்காகப் பழிவாங்கும்போது அது நாம் தண்டிக்கிறதைவிட பயங்கரமாயிருக்கும். நமக்கு யாராவது காரணமின்றி தீமை செய்தால் நம்மைவிட அதிகமாக ஆண்டவருக்கே அவர்கள் தீமை செய்கிறார்கள் என்பதை மறந்துபோகக் கூடாது. நாம் நம்மைக் குறித்து கருதல் கொள்ளுவதைக் காட்டிலும் ஆண்டவர் அதிகமாய் அக்கறை கொள்ளுகிறபடியால் நம்மைக் கொடுமைப்படுத்துகிறவர்கள் ஆண்டவரது கோபத்துக்கு உடனடி ஆளாகிறார்கள். ஆண்டவரிடமிருந்து யாரும் தப்ப முடியாது.

பாவம் தண்டிக்கப்படாது போகாது என்பது உண்மை. தேவனுடைய உன்னதமான பரிபூரணத்துவத்தின் நியதி இது. பாவம் பாவ மனிதனை இவ்வுலகிலோ மறுஉலகிலோ எப்படியும் தாக்கும். தற்காலத்தில் ஒருபாவி தன் பாவத்திற்காக மனஸ்தாபப்பட்டு கிறிஸ்துவின் பாடுகளில் பங்கடைந்தால் அவன் பாவத்தின் தண்டனையை அனுபவிக்கத் தேவையில்லை. ஏனெனில் கிறிஸ்து அந்த தண்டனையைச் சகித்தாரே. ஆயினும் பாவத்தினிமித்தம் வரும் மனவியாகுலமும் சிட்சையும் அவனுக்குண்டு. ஆனால் இந்த அனுபவத்தில் கடந்துசெல்லாத பாவியின்மேல் தேவ கோபம் எப்போதும் தங்கியிருக்கும். எனவே பிறர் அறிந்து கொள்ளாவிட்டாலும் அவன் தேவனுடைய தண்டனையை அனுபவித்தேயாகும். அது சாதாரண விபத்து, வியாதி, பஞ்சம், நெருப்பு, நீர், போர் முதலியவற்றால் ஏற்படும் அழிவாயிருக்கலாம். சிலவேளை தேவனுடைய தண்டனை

தெளிவாகச் செயல்படுகிறதையும் காணமுடியும். எடுத்துக்காட்டாக ஏழைகளையும் விதவைகளையும் தகப்பனற்ற பிள்ளைகளையும் ஒடுக்கி, பிறருடைய சொத்துக்களைத் தவருக அபகரிக்கிறவர்கள் தேவனால் தண்டிக்கப்பட்டு பிற்காலத்தில் வறுமையிலும் சிறுமையிலும் வாழ்கிறதைக் காணலாம். பிறர்மீது பொய்க்குற்றஞ்சாட்டி, அவர்களைப் பழித்துச் காட்டிக்கொடுத்து, அவர்களுடைய பெயரையும் கெடுக்கிறவர்கள் தாங்களும் அவமானமும் நிந்தையும் அனுபவிக்க வேண்டிவரும். பிறருடைய வாழ்க்கையில் அளவிட முடியா துயரத்தையும் துன்பத்தையும் உண்டுபண்ணினவர்கள் நீதிமன்றத்தின் பிடிக்குத் தப்பினலும், வாழ்க்கையின் இறுதியில் சகிக்க முடியா விசனமும் வேதனையும் அனுபவித்து, புத்தி தடுமாறி தற்கொலை செய்கிற சந்தர்ப்பங்களும் உண்டு.

தேவன் இவ்வுலகில் பழிவாங்காவிட்டாலும் வருங்கால நித்தியத்தில் அவரது கோபாக்கினை பாவிகளைத் தண்டித்தேயாகும். தேவனுடைய கோபாக்கினை நமக்குத் தீமை செய்கிறவர்கள்மீது தங்கியிருக்கிறது என்பதை அறிந்த பிற்பாடும் அவர்களை நாம் தண்டிக்க விரும்புவது ஏனே? அவர்களுக்காக இரக்கங்கொண்டு அவர்கள் மனந்திரும்புதலுக்காக ஜெபிக்க வேண்டியதல்லவோ நம்முடைய கடமை.

பழிவாங்கும் தன்மையை நம்மைவிட்டு அகற்றவே அப்போஸ்தலன் இந்த வார்த்தைகளை எழுதியுள்ளார். தேவனுடைய இரக்கத்தைச் சார்ந்து வாழ்கிற விசுவாசிகள், அவருடைய பொறுமையை கடைப்பிடித்தவர்களாய்த் தங்களுக்குத் தீமைசெய்கிறவர்களைப் பகைக்கவோ பழிவாங்கவோகூடாது.

— — -

27. நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?

1 கொரி. 10:16.

திருவிருந்தில் பங்கெடுக்கும்போது நாம் அடைந்து கொள்ளுகிற ஆசீர்வாதங்களையே இந்த வசனம் குறிப்பிடுகிறது. தேவனுக்கும் விசுவாசிகளுக்குமிடையேயுள்ள நெருங்கிய உறவை இங்கு காண்கிறோம். இதைக் குறித்து என் மாமிசத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன் (யோவா. 6:56) என்று அவரே கூறியுள்ளார். திருவிருந்தை நியமித்த உடனே நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள் (யோவா. 14:20) என்றும், நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள், ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் (யோவா. 15:5) என்றும் கூறினார். அந்நேரத்தில்தானே பிதாவை நோக்கி நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படி...நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன் (யோவா. 17:22,23) என்று ஜெபித்தார். கிறிஸ்து கூறியவார்த்தைகள் எத்தனை ஆழமானவை! தெய்வீக அன்பின் அற்புதமான வார்த்தைகள் அவைகள்! என் மாம்சத்தைப் புசிக்கிறவன் என்னில் வாழுகிறான். நான் அவனில் வாழுகிறேன் என்று அவரே உரைத்தார். இது நமக்கு

ஆச்சரியத்தைக் கொடுக்கலாம். இம்மாபெரும் மகிமையைப் பெற்றுக்கொள்ள நாம் தகுதியுடையவர்களல்ல.

முதலாவதாக கிறிஸ்து தம்முடைய இரத்தத்தால் நம்மை தேவனோடு ஒப்புரவாக்கி, சுத்திகரித்து, நீதிமான்களாக்கி, தேவனுக்குப் பிரியமானவர்களாக மாற்றினார். அதற்கு மேலாக திருவிருந்தினூடே அவர் நம்மோடு நெருக்கமான உறவு கொள்ளுகிறார். அவருடைய ஆவிக்கும் நம்முடைய ஆவிக்கும் பிரிக்க முடியாத ஒரு ஐக்கியம் இராப்போஜனத்தின் மூலமாக உண்டாகிறது. அவருடைய அன்பு, தூய்மை, தகுதி என்பவை நித்தியமாக நமக்கு உரிமையாகின்றன. இந்த அனுபவத்தைக் குறித்து ஒரு பக்தன் இவ்வாறு கூறியுள்ளார்: தேவனுடைய குமாரனுக்கு அவர் தரித்த சரீரம் போல நெருக்கமானது வேறொன்றுமில்லை. நேரடியான ஐக்கியத்தின் மூலமாக அதோடு அவர் ஒன்றித்துவிட்டார். நமக்கோ நாம் புசிப்பதும் குடிப்பதும்போல நம்மோடு நெருங்கிய உறவு கொள்வது வேறொன்றுமில்லை. ஏனெனில் நம்முடைய போஜனமும் பானமுமே மாம்சமும் இரத்தமுமாக மாறுகிறது. கிறிஸ்துவும் நம்மோடு மிகவும் நெருங்கிய ஐக்கியங்கொள்ள விரும்பியதால் இந்த சாக்கிரமந்தை நியமித்தார். அதன் மூலமாக கிறிஸ்துவின் சரீரத்துக்கு அடையாளமான அப்பத்தைப் புசித்து அவருடைய இரத்தத்துக்கு அடையாளமான இரசத்தைக் குடிக்கிறோம்.

இந்த விலையேறப்பெற்ற சாக்கிரமந்தின் மேன்மை இதுவல்லவா? இவ்வுலகில் நமக்குக் கிடைத்துள்ள சிறந்த மகிமையல்லவா இந்த ஐக்கியம்? எனவே இத்தனை நெருக்கமான ஐக்கியத்தை அனுபவிப்பதைவிட வேறு எதையும் சிறந்த இன்ப

மாகக் கொள்ளமுடியாது. இதன் மூலமாக நம்முடைய ஜீவனின் ஊற்றாகிய இறைவனோடு நாம் மறுபடியும் இணைகிறோம். இதுவே பாவபிராயச்சித்தத்தின் முக்கியமான நோக்கம். தேவனோடு உறவாடவே மனிதன் படைக்கப்பட்டான். அதற்காகத்தான் அவன் தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டான். ஆனால் பாவத்தில் வீழ்ந்தபோது மனிதன் இதை இழந்துபோனான். தேவனையும் மனிதனையும் இணைத்த தொடர்பு அற்றபோது மனிதன் சிருஷ்டிகரை விட்டு பிரிக்கப்பட்டான். இதைப் புசிக்கும் நாளிலே நீங்கள் சாகவே சாவீர்கள் என்று தேவனால் குறிக்கப்பட்ட மரணம் இந்த வேறுபாட்டையே குறிப்பிடுகிறது.

தேவதுமாரனுடைய பிறப்பே மனிதன் தேவனோடு மறுபடியும் சேர்வதற்நரிய முதற்படியாகும். தேவகுமாரன் மனிதனானார். அவர் நம்மில் ஒருவரைப் போலானார். அவர் மாம்சம் தரித்து, மனிதத் தன்மை பூண்டு, நம்முடைய உறவினரானார். இவ்வாறு நமக்கும் தேவனுக்குமிடையே ஒருசிறந்த உறவு உருவாயிற்று. நாம் இரத்த சம்பந்தமான உறவில் தேவனோடு ஐக்கியப்பட்டிருக்கிறோம். இதைக் குறிக்கத்தான் தீர்க்கதரிசியும், இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவாள் (இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்) என்று முன்னுரைத்தார் (ஏசா. 7:14; மத். 1:23). தேவன் நம்மோடிருப்பது மாத்திரமல்ல அவர் நமக்குள்ளே வாசம்பண்ணுகிறார். இதைக் குறித்து பரிசுத்தஞ்செய்கிறவரும் பரிசுத்தஞ்செய்யப்படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்; இதினிமித்தம் அவர்களைச் சகோதரரென்றுசொல்ல அவர் வெட்கப்படவில்லை. (எபி. 2:11) என்று

வேதத்தில் வாசிக்கிறோம். கிறிஸ்துவின் பிறப்பில் ஆரம்பித்த இந்த ஐக்கியம் கர்த்தரின் பந்தியாகிய சாக்கிரமந்தில் பூரணமடைகிறது. இதன் மூலம் நாம் அடையாளமாக அவர் எடுத்த சரீரத்தோடு ஐக்கியமாகிறோம். இதைக் காண தேவ தூதர்களும் ஆவல் கொள்ளுகிறார்கள். கிறிஸ்து வசிக்கும் எத்தனை மகிமையான தேவாலயத்தை மனிதன் சுமந்து திரிகிறான்! கிறிஸ்துவோடு ஒரே ஆத்துமாவுமாக இணைவது எத்தனை மகிமையான பேரின்பம்!

———

28.

ஆகையால் நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் நடந்துகொண்டு.

கொலோ. 2:6.

ஆகையால் என்ற வார்த்தையைக் கவனிக்கவும். இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஆரம்பத்தில், அதாவது ஜீவன் உற்பத்தியான வேளையில் எவ்வாறு நடந்ததோ அவ்வாறே நடக்கிற அனுபவத்திலும், அதாவது வாழ்க்கையின் தொடர்ச்சியிலும் வளர்ச்சியிலும் நடக்கும். ஆரம்பத்தில் பழைய மனிதன் மரித்து புதிய மனிதனுக்குரிய ஜீவன் உற்பத்தியானதுபோலவே தொடர்ந்து பழைய மனிதன் மரித்து புதிய மனிதன் வளருவான்.

இந்த வசனம் வருகிற அதிகாரம் முழுவதும் காணப்படும் கருத்து என்னவென்றால், இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட விசுவாசிகள் பரி

சுத்தமாகுதலுக்காக சிறப்பான செயல்கள் புரிய வேண்டுமென்று தவருன எண்ணங்கொள்ளக் கூடாதென்பதுவே. ஏனெனில் அவர்களை மன்னித்து நீதிமான்களாக்கப் போதுமாயிருந்த கிறிஸ்துவும், விசுவாசமும் அவர்களில் பரிசுத்தமாகுதலைப் பிறப்பிக்கப் போதுமானவை. கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட அதே விசுவாசத்தில் நிலைத்திருந்து வளர்ச்சியடைந்து. கணுக்களாலும் கட்டுகளாலும் உதவி பெற்று இணைக்கப்பட்டு, தேவ வளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீர முழுவதையும் ஆதரிக்கிற தலையைப் பற்றிக்கொள்ள வேண்டும் (கொலோ 2:19) இதன் சுருக்கம் என்னவென்ருல் தேவஞல் நமக்கு நீதியும் பரிசுத்தமுமான (1 கொரிந். 1:31) கிறிஸ்துவுக்குள் நாம் நிலைத்திருக்கிறதையே சகலமும் சார்ந்திருக்கிறது. இதைத்தான் கிறிஸ்துவும் என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச் செடியில் நிலைத்திராவிட்டால் அது தாஞய்க் கனிகொடுக்க மாட்டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனி கொடுக்க மாட்டீர்கள் (யோவா. 15:4) என்று உரைத்தார். அவருக்குள் நாம் நிலைத்திருப்பதின் மூலமாக நாம் ஜீவனும் வல்லமையும் பெறுகிருேம்; நம்முடைய தேவைகள் நிறைவேறுகின்றன. தேவையான கருதலும் மேற்பார்வையும் திருத்தமும் அடைந்துகொள்ளுகிருேம். கனி கொடுக்கிற (அவரில் நிலைத்திருந்து ஜீவன் பெற்று கனி கொடுக்கிற) கொடி எதுவோ அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி தோட்டக்காரர் சுத்தம் பண்ணுகிருர்.

அடிப்படையாக உள்ளான வாழ்க்கை சீர்செய்யப்பட்டபின் அடுத்தபடியாக மாமிசம் அழிக்கப்பட்டு ஆவி முற்றிலுமாய் நம்மை ஆளவேண்டும். ஞானஸ்நானத்தின் மூலமாக பழையமனிதன் மர

ணத்துக்கு விதிக்கப்பட்டுவிட்டான். நாமும் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம். ஒருவன் விசுவாசியானவுடனே தன்னுடைய பழைய நிலையையும் வாழ்க்கையையும் வழியனுப்பி விட வேண்டும். பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தார் (2 கொரி. 5:15). தேவனோடு கிருபையும் சமாதானமும் நாம் பெற்றுக் கொள்ளும்போது சுயத்துக்கு மரித்து கிறிஸ்துவுக்காக வாழும் ஆவலை அடைந்துகொள்ளுகிறோம். சிலர் விசுவாசத்தை அறிக்கையிட்டாலும் அவர்களில் சுயம் மரிப்பதில்லை. அவர்கள் கிறிஸ்துவோடு சிலுவையிலறையப்பட விரும்பாது, விசுவாசத்தை ஒரு புறமும் மனம்போல வாழும் வாழ்க்கையை மறுபுறமும் பிடித்துக்கொள்ள விரும்புகிறார்கள். இவர்கள் வேத வசனத்தின் எச்சரிப்புக்குக் கீழ்ப்படிய மறுக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் மாய்மால விசுவாசத்தினால் தங்களையே வஞ்சித்துக் கொள்ளுகிறார்கள். ஏனெனில் கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் (கலா. 5:24).

விசுவாசத்தில் குழந்தைகளாயிருப்பவர்களுக்கு மாம்சத்தை எவ்வாறு சிலுவையிலறைவது என்பதற்குரிய சில எடுத்துக்காட்டுகளை இங்கு கூறுவது நலம். நீங்கள் காலையில் எழும்பியதும் உங்கள் ஜீவனின் அதிபதியும் பரம பிதாவுமாகிய ஆண்டவர் உங்கள் சரீரத்திற்கும் ஆத்துமாவிற்கும் செய்திருக்கிற எல்லா நன்மைகளுக்காகவும் இருதயபூர்வமான மகிழ்ச்சியோடு அவரை ஆராதிப்பதைத் தவிர வேறு நியாயமுண்டோ? அதிலும் குறிப்பாக

தேவன் தம்முடைய குமாரனையும் வேதத்தையும் சாக்கிரமந்துகளையும் நமக்குத் தந்திருப்பதாலும், நாம் தேவனுடைய பிள்ளைகளாயும் கிறிஸ்துவைத் தரித்தவர்களாயும், தேவனுடைய பார்வையில் சுத்தமும் பிரியமுமானவர்களாய் அங்கீகரிக்கப்பட்டிருப்பதாலும் நாம் அவருக்கு நன்றி செலுத்தவேண்டும். ஆகவே அவருக்கு நன்றி செலுத்தி ஜெபியுங்கள். ஆனால் ஜெபிப்பதற்கு நாம் சோம்பல் படுகிறோமா? இதுதான் மாம்சம். மாம்சம் நம்மை ஆளக்கூடாதபடி அது அழிக்கப்படவேண்டும். இது தான் புதிய வாழ்க்கையின் பயிற்சி ஆகும்.

நாள் முழுவதும் ஆண்டவருக்கு நேராக அனலுள்ளவர்களாய் இருத்தல் தேவை. அவருக்கு விரோதமான எதையும் செய்ய அஞ்சவேண்டும். மரணத்தைவிட பாவத்திற்கு அதிகம் பயப்பட வேண்டும். அதற்கு மாறாக குளிர்ந்துபோய் நிர்விசாரமாய் வாழுகிறீர்களா? அதுதான் மாம்சம். உலக பிரகாரமான ஒரு வேலை இருக்குமாயின் அதை ஜாக்கிரதையோடும் கரிசனையோடும் செய்ய வேண்டும். அதில் சோம்பலும் அஜாக்கிரதையும் காண்பிக்கிறீர்களா? அதுதான் மாம்சம். அது அழிக்கப்படவேண்டும். நீங்கள் வீட்டிற்கு எஜமானாகவோ எஜமாட்டியாகவோ இருக்கிறீர்களா? அப்படியாயின் நீங்கள் வீட்டைக் கருதலோடும் கரிசனையோடும், அதே வேளை சாந்தத்தோடும் தாழ்மையோடும் நடத்தவேண்டும். நீங்கள் கவலையீனமாகவும் நிர்விசாரமாகவும் பொறுமையற்றும் கோபத்தோடும் நடந்து கொள்ளுகிறீர்களா? அது மாம்சம்; அது அழிக்கப்படவேண்டும். நீங்கள் குழந்தைகளாகவோ, பணியாட்களாகவோ இருந்தால் உங்களுக்குக் கட்டளையிடப்படுகிறவைகளை அன்போடும் மரியாதையோடும் கீழ்ப்படிதலோடும் சிரத்தையோடும் செய்து முடிக்கவேண்டும்.

பொறுமைக்கேடும் அதிருப்தியும் உங்களில் எழும்புகிறதா? அதுதான் மாம்சம். அது அழிக்கப்படவேண்டும். உங்களைப் பிறர்பழித்து பொய்யராக்கும்போது நீங்கள் கோபங்கொண்டு பகைக்கிறீர்களா? அதுவே மாம்சம். அசுத்த இச்சைகள், பொறுமை, பெருமை, சுயஇன்பம் உங்களில் எழும்பினுல் அதெல்லாம் மாம்சமே. அவைகள் உங்களை ஆளக்கூடாது; அவைகள் அழிக்கப்பட வேண்டும். இதுதான் விசுவாச பயிற்சியாகும்.

இவ்வாருக தேவனுடைய பிரமாணங்களின் மூலமாக உண்மையான பரிசுத்தம் என்ன என்று அறிகிருேம். தேவனுடைய பரிசுத்த சித்தத்தை அறிந்த பிற்பாடு அவருடைய பிரமாணத்தின் அடிப்படையில் எவ்வாருன ஆவிக்குரிய காரியங்களை அவர் நம்மிடம் எதிர்பார்க்கிருர் என்னும் எண்ணத்தோடு நம்மை நாமே பரிசோதிக்கும் போது நாம் அதிகமாய் அதிருப்தியடைவோம். இதின்மூலம் தேவனுடைய உண்மையிலும் உதவியிலும் என்றென்றைக்கும் சாரும் நிலை ஏற்படுகிறது. இதுவேதான் மாம்சத்தை அழிப்பதாகும். ஒரு குழந்தையைப்போல தேவனிலே சார்ந்து அவருடைய குமாரன் மூலமாக அனுதினமும் அவரை அண்டிச் சேருவதே நாம் பரிசுத்தமாகிறதற்குரிய ஏதுவாகும். நாம் சொல்லுகிறதுபோல அவ்வளவு எளிதாக இந்த அனுபவம் நம்மில் உண்டாவதில்லை. ஆயினும் அவனவனுக்குத் தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே (ரோம. 12:3) நமக்கும் அவர் பெலன் தருவார்.

———

29. அது (சர்ப்பம்) ஸ்திரீயை நோக்கி: .... தேவன் சொன்னது உண்டோ என்றது. ஆதி. 3:1.

சாத்தான் முதலாவதாக தேவனுடைய வசனத்தையே தாக்குகிறான். தேவன் சொன்னதை அல்ல வேறு எதையாவது மனிதர் நம்பும்படி செய்ய அவன் வகை தேடுகிறான். நம்முடைய வாழ்க்கையின் முக்கியத்துவம் இங்குதானிருக்கிறது. நீண்ட கால அனுபவமுடைய கிறிஸ்தவன் தன்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் நேரிட்ட வெற்றிகளையும் தோல்விகளையும் ஆராய்வானேயாகில் அந்நிலைகள் அவன் தேவனுடைய வசனத்தோடு நடந்துகொண்ட விதத்தையே சார்ந்திருக்கும் என்பதைக் கண்டுகொள்ளுவான். தேவனுடைய வசனத்தைச் சார்ந்திருக்கும்போது வாழ்க்கையில் எளிர்ச்சியும் வேத வசனத்துக்குப் புறம்பான கருத்துகளிலும் சுய எண்ணங்களிலும் நம்பிக்கை வைக்கும்போது வாழ்க்கையில் வீழ்ச்சியும் ஏற்படுகிறது. மனிதனுடைய கருத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தால் வாழ்க்கை நேராய்ச் செல்லமுடியாது. சோதனையில் வெற்றி கிடைப்பதற்குரிய ஒரே வழி வேத வசனத்தைச் சார்ந்திருப்பதே.

தூரத்திலிருக்கும் ஒரு பாவத்தைக் குறித்த அற்ப சிந்தைபோலும் உள்ளத்தில் தோன்றினால் அதைக் குறித்து அதிகம் அச்சங்கொண்ட ஒரு விசுவாசி, அப்பாவத்தோடு உறவுகொண்டு, அதில் சாங்கோபாங்கமாக வாழ்ந்து அதற்கும் சாக்குப் போக்குக் கூற எப்படித்தான் கூடுகிறது? தான் சோதிக்கப்படும்போது அப்பாவத்தைக் குறித்து

தேவன் கூறியுள்ளவற்றை சிந்திக்காது, தன் சொந்தக் கருத்துக்களுக்கு இடங்கொடுப்பதாலேயே இவ்வாறு நேருகிறது.

மார்க்கத்தின் பேரிலும் ஆண்டவருக்காகவும் செய்கிறோமெனச் சொல்லியும், தேவனால் விலக்கப்பட்டதும் தேவன் விரும்பாததும் கருத்தற்றதுமான பல காரியங்களைத் தூய்மையும் நன்மையுமான காரியங்களாக மாற்றுவதோடு, தேவனுடைய வசனத்தில் விலக்கப்படாத சில காரியங்களைப் பாவமென்று கூறவும் சிலருக்கு முடிகிறதே, அது எவ்வாறு? இதற்கான பல எடுத்துக்காட்டுக்களை யூதமார்க்கத்திலும், சில கிறிஸ்தவ சபைப் பிரிவுகளிலும் காண்கிறோம். இதன் ஒரே காரணம் தேவன் என்ன சொல்லியிருக்கிறாரென்பதைக் கவனியாதபடி தங்கள் சொந்தக் கருத்துக்களுக்கும் மற்றும் பல சத்தங்களுக்கும் இடங்கொடுப்பதே.

நியாயப்பிரமாணத்தின் அடிமைத்தனத்திலிருந்து கிறிஸ்து கிருபையாய் நம்மை விடுதலைச் செய்திருக்கிறார் என்ற சுவிசேஷ சத்தியத்தை அறிந்த பிற்பாடும், ஒரு விசுவாசி தன்னில் காணப்படும் பாவங்களினாலும் குறைகளினாலும் மனந்தளர்ந்து, தேவனுடைய கிருபையிலும் நட்பிலும் நம்பிக்கையிழந்து, கிறிஸ்துவை விட்டு ஒதுங்கி அடிமைத்தனத்தின் ஆவிக்குள் அகப்பட்டுக்கொள்வது ஏனோ? தேவனுடைய வார்த்தைகளை விட்டு பார்வையை மாற்றி, சொந்த எண்ணங்களுக்கு இடங்கொடுப்பதால், தானிருக்கும் நிலையில் தேவனுடைய பிள்ளையாகவும் சிநேகிதனாகவும் தான் இருக்க முடியாது என்று கருதுவதினாலேயே.

தேவனுடைய வார்த்தைகளைவிட்டு நம்முடைய கண்களை மாற்றும்போதே சாத்தான் நம்மீது வல்

லமை கொள்ளுகிறான் என்கிற சத்தியத்தை மலே களும் அதிரும் வண்ணம் தேவனுடைய பிள்ளைக ளின் செவிகளிலும் இருதயத்திலும் சத்தமிட்டுக் கூறினால் நலமாயிருக்கும். தேவனுடைய வசனத் தைச் சார்ந்திருப்பதினாலேயே நீங்கள் வெற்றி கொள்ளமுடியும். தேவனுடைய வார்த்தை! அது என்ன சொல்லுகிறது? தேவன் என்ன சொல்லு கிறாரென்பதைக் கூர்ந்து கவனியுங்கள். எல்லாம் அதைப் பொறுத்தேயிருக்கும். உங்களுக்கு ஆவிக் குரியதாய்த் தோன்றும் காரியங்கள் தேவனுடைய வசனத்தால் உறுதிப்படுத்தப்படாவிட்டால் அவை களெல்லாம் தவறும் கருத்தற்றதுமே. தேவனால் கட்டளையிடப்பட்டவைகள் மாத்திரமே நன்மை யும் தூய்மையுமானவை. தேவனால் விலக்கப்பட்ட வைகள் மாத்திரமே பாவமாகும். தேவன் பாவ மென்றுகூறி விலக்குகிறவைகளை உன் இருதயம் அவ்வாறு ஒப்புக்கொள்ள மறுத்தாலும், உலகி லுள்ள எல்லா கல்விமான்களும் பரிசுத்தவான்களும் களங்கமற்றவை எனக் கருதினாலும் அவைகள் ஆபத் தான பாவங்களே. தேவனால் குறிப்பாக அறிவிக் கப்படாதவைகளை அன்பின் பிரமாணத்தின் அடிப் படையிலும், அயலகத்தாரின் நன்மையின் அடிப் படையிலும் சிந்தித்து ஆலோசித்து தீர்ப்புச் செய்யவேண்டும்.

கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்குமிடையே நடந்த போராட்டத்திலிருந்து இந்த பாடத்தை நாம் தெளிவாகக் கற்றுக் கொள்ளுகிறோம். அவர் மிகவும் தூய்மையான வார்த்தைகளைக் கூறக்கூடியவராயி ருந்தும் தன்னுடைய சொந்த வார்த்தைகளால் சாத்தானுக்குப் பதிலளிக்காது தேவனுடைய வச சனத்தைக் கொண்டுதான் அவனை ஜெயித்தார். இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறதே என்றுதான் இயேசு சாத்தானுக்கு எதிர்த்துக் கூறினார். இது

தவிர வேறு ஒரு வார்த்தையும கிறிஸ்து சாத்தானிடம் கூறவில்லையென்பதை நாம் வாழ்நாள் முழுவதும் மனதில் கொள்ளவேண்டும். இச்சத்தியம் நம்முடைய சொந்த கருத்துக்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கிறது. தேவனுடைய வசனத்திலிருந்து நம்மைப் பிரிக்கவே சாத்தான் முயற்சிக்கிருனென்றும் அவனை மேற்கொள்ள தேவனுடைய வசனத்தை மாத்திரம் சார்ந்திருக்க வேண்டுமென்றும் இந்த சம்பவம் நமக்கு சாட்சியளிக்கிறது.

---

30. நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ணுமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். யோவா. 6:53.

தம்முடைய மாம்சத்தைப் புசிப்பதைக் குறித்து கிறிஸ்து கூறியுள்ளது பண்பற்றதாயும் கருத்தற்றதாயும் தோன்றினுலும் அந்த அனுபவத்தில் அனுதினம் வாழ்கிறவர்களுக்கு அது தெளிவாயும் அருமையாயும் உயிரளிப்பதாயுமிருக்கிறது. கிறிஸ்துவே என்னுடைய ஆகாரம் என்று சொல்லுவதைத் தவிர ஒரு விசுவாசி தன்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையை வேறு எந்த விதத்திலும் வெளிப்படுத்த முடியாது. ஒப்புரவாக்குதலின் வார்த்தைகளே விசுவாசிகளின் ஆழமான தேவையும் இன்றி

யமையாத உணவுமாகும். கிருபையின் மக்களைப் பகுத்தறியும் ஒரே வழி கிறிஸ்துவின் இரத்தத்தால் கிடைக்கும் ஆறுதலை அவர்கள் தேடுவதே. நாம் எதிர்பார்க்கிறதுபோல அவர்கள் வாழ்க்கை அமையாதிருக்கலாம். பலவிதமான பலவீனங்களோடு அவர்கள் போரிட்டுக்கொண்டேயிருக்கலாம். எனினும் அவர்களில் ஒரு சிறப்பு உண்டு. கிறிஸ்துவே அவர்களது தேவை என்பதுவே அது. ஆண்டு முழுவதும் அவர்கள் ஒரே பொருளைக் குறித்தே உரையாடுகிறார்கள். கிறிஸ்துவைக் குறித்தும் அவருடைய கிருபையைக் குறித்தும் அவர் தம்முடைய சரீரத்தை நமக்காக ஈந்ததைக் குறித்துமே அவர்கள் எப்போதும் வாசிக்கிறார்கள், கேட்கிறார்கள், பாடுகிறார்கள், எழுதுகிறார்கள், பேசுகிறார்கள். இடையிடையே தங்களை நெருக்குகிற பாவத்தைக் குறித்தும், அதை எவ்வாறு ஜெயிக்கலாமென்பதைக் குறித்தும் அவர்கள் பேசிக்கொண்டாலும், அவர்கள் உரையாடலின் ஆதியும் அந்தமும் இரட்சகரும் அவருடைய கிருபையும் வல்லமையுமே.

உலகக் கவலைகளாலோ, அல்லது சோம்பலும் கவலையீனமுங்கொண்டோ கிருபையின் வசனத்தை சில காலம் அவர்கள் அனுபவிக்கத் தவறிவிட்டால், ஆகாரமில்லாது பசியால் வாடிய மனிதனது சரீரத்தைப்போலவே அவர்களுடைய உள்ளான மனிதனும் பெலனற்று தளர்ந்துபோவான். அவர்கள் வல்லமையிழந்து ஆறுதலற்றுப் போவார்கள். முகங்கள் உற்சாகமிழக்கும். அவர்கள் சாட்சி அற்றுப்போம். அவர்களது நடை உறுதியற்று தளர்ந்துபோம். இந்நிலையில் அவர்கள் தேவனுடைய வசனத்திற்குத் திரும்பி வந்தால் பட்டினியாயிருக்கும் ஒருவன் ஆகாரம் நிறைந்த மேஜையினருகே வருவதுபோன்றே உணருவார்கள். கிறிஸ்துவைக் குறித்தும் அவரது கிருபையின் மீட்பைக் குறித்தும்

சுவிசேஷ செய்தி கேட்கும்போது அவர்கள் கண்கள் பிரகாசிக்கும்; இருதயம் மகிழ்ச்சியடையும். அவர்களுடைய நம்பிக்கையும் முன்னேற்றத்துக்கான ஆவலும் புதுப்பிக்கப்படும். அந்த இடத்தைவிட்டு அவர்கள் புறப்பட்டுச் செல்லும்போது அமைதலாயிருக்கமாட்டார்கள். பசியடங்கினல் பாட்டுபாடுவான் என்ற பழமொழி போல அவர்கள் மகிழ்ச்சியினல் நிரம்புவார்கள்.

அவர்கள் எப்போதும் இவ்வாறு தேவனுடைய வசனத்தின்மேல் பசிதாகங்கொள்ளுவார்களென்றோ, ஆவிக்குரிய ஆகாரத்தை உண்ணுவதற்குத் தகுதியுள்ளவர்களாயிருப்பார்களென்றோ, சுவிசேஷத்தினல் எப்போதும் களைப்பாறுவார்களென்றோ நாம் சொல்லமுடியாது. ஏனெனில் சிலவேளை அவர்களும் ஆவிக்குரிய நோயும் பெலவீனமும் கொள்ளலாம். எனினும் அவர்களுடைய உள்ளான மனிதன் புத்துயிர் பெற்று பலப்படவேண்டுமேயானல் நமக்குக் கொடுக்கப்பட்ட கிறிஸ்துவாகிய வார்த்தையினலே ஆகும். வார்த்தையாகிய அவரே அவர்களுடைய நிரந்தர ஆவிக்குரிய ஆகாரமாவார். இந்த அனுபவம் யாவருக்கும் இன்றியமையாதது என்று குறிப்பிடவே, நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தை பானம்பண்ணமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று கிறிஸ்து உரைத்தார்.

ஒரு ஆத்துமா ஒப்புரவாகுதலின் வார்த்தையில்லாமல் வாழமுடியாதிருப்பதே அதன் ஆவிக்குரிய ஜீவனின் அடையாளமாகும். ஏனெனில் பாவத்தைக் குறித்த உணர்வு கிருபையின் வார்த்தை எப்போதும் தேவை என்பதைக் கற்பிக்கும். எனவே

தான் தேவனுடைய வசனத்தை எவ்வளவுதான் கற்றாலும் அது ஒருநாளும் தீராத களஞ்சியமாகும்.

இதற்கு நேர்மாறாக தேவனுடைய வசனத்தை மிகவும் குறைவாகக் கற்கிற ஆவிக்குரிய மனிதர்களுமுண்டு, அவர்கள் ஒருமுறை கற்றதினால் எல்லாம் அறிந்ததாக எண்ணுகிறார்கள். எனவே அவர்கள் வேறுஎதையாவது கேட்கவிரும்புகிறார்கள். மேலும் தேவனுடைய வசனத்தை மறுபடியும் மறுபடியும் கற்கிற மக்களைக் குறித்து அவர்கள் வியப்படைகிறார்கள். அதோடு அப்படிப்பட்டவர்கள் பெலவீனமானவர்களென்றும், முற்போசகு அற்றவர்களென்றும், ஆழமான சத்தியங்களுக்குச் செல்லாது ஆரம்பப்படியிலே நிற்கிறவர்களென்றும் அவர்கள் குறை கூறுகிறார்கள். தங்களுடைய அறிவுத்திறமை தங்களைக் குறித்து என்ன கூறுகிறது என்பதை அவர்கள் அறிந்தார்களானால் நலமாயிருக்கும். ஆவியானவர் பாவத்தைக் குறித்து உணர்த்துகிறபடியாலும், நியாயப்பிரமாணம் உள்ளான சீர்கேட்டை வெளிப்படுத்துகிறபடியாலும் மனிதன் தன் பக்தியால் அமைதலும் ஆறுதலும் பெற்றுக்கொள்ளக்கூடாது. எனவேதான் மனிதனுக்கு எப்போதும் தேவனுடைய கிருபையின் வசனம் தேவை.

சிலர் அதிகமாகக் கற்றாலுங்கூட வேதாகமத்தை சரியாகப்புரிந்துகொள்வதில்லை. ஆயினும் அத்தகைய ஆத்துமாக்களுக்கு கிறிஸ்துவாகிய வார்த்தை தெளிவாக வெளிப்படுத்துவதினால் அவரைத் தங்கள் ஆகாரமாக உட்கொண்டு அவரால் பிழைத்திருக்கிறார்கள். அதற்கு நேர்மாறாக இந்த முக்கியமான பொருளைக் குறித்து அதிகமாகக் கற்பிக்கப்பட்டும் தேவனுடைய வசனத்திற்கு முக்கியத்துவம் கொடாது வேறு கருத்துக்களால் ஊக்கம்பெற விரும்புகிறவர்கள் கிறிஸ்துவில் வாழ்வில்லையென்பது தெளிவாகிறது.

31. **எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப் பிள்ளைகளாயிருப்பீர்களே.** எபி. 12:8.

தேவன் கிருபை நிறைந்தவர்: அன்பில் அளவிலா ஐசுவரியம் கொண்டவர். இது மிகவும் உண்மையான சத்தியம். அப்படியிருக்க இந்த வசனம் எல்லா தேவனுடைய பிள்ளைகளும் பூமியில் பாடுகள் அனுபவிப்பார்களென குறிப்பிடுகிறதா? ஆம், இதில்தான் ஞானம் விளங்கும்; இதுவே தேவனுடைய இரகசிய எண்ணங்களின் வெளிப்படுத்தல். தேவனுடைய பிள்ளைகளின் இரகசியத்தைக் கண்டு கொள்ளும் கண்கள் நமக்கு இருக்குமேயாகில் நாம் பாடனுபவிக்கிற வேளைகளிலும் பரம பிதாவிடமிருந்து இனிமையான செய்திகளைக்கேட்கிற நேரத்திலும் ஒன்றுபோலவே மகிழ்ச்சியடைவோம். நாம் அனுபவிக்கும் துன்பங்களின் வாயிலாக ஆண்டவர் மெதுவான குரலில் நம்மைப் பார்த்து, திடன் கொள்ளுங்கள்! நீங்கள் பரலோகத்தில் வருவீர்கள். அதை நான் உங்களுக்காக ஆயத்தப்பண்ண ஆரம்பித்துவிட்டேன் என்பதை நீங்கள் உணரவில்லையா? நான் உங்கள் மாம்சத்தை அழிக்க ஆரம்பித்துவிட்டேன், உங்கள் ஆவியையும் ஆத்துமாவையும் சரீரத்தையும் சுத்திகரித்து, புடமிட்டு மெருகிட்டு பரிசுத்தம்பண்ணுகிறேன். இவ்வாறு நான் செய்வதற்குத் திட்டமான ஒருகாரணம் உண்டு இவ்வுலகில் நான் உங்களை இவ்வாறு ஆயத்தம் பண்ணி மறுமைக்கு அழைத்துச் செல்லுவேன்; இது நிச்சயம் என்று கூறுகிறார்.

தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு நித்தியமான மறுமையளிக்கிருர் என்பதற்கு அவருடைய சிட்சை மிகவும் சிறந்த தெளிவாகும். இதின் அடிப்படையில் அனேக சிந்தனையாளர்கள் மரணத்துக்குப் பின் ஜீவனுண்டென்கிற நிச்சயத்திற்கு வந்திருக்கின்றனர். தற்காலத்தில் துன்மார்க்கரின் கிரியைக்கு வருவது போல, நீதிமான்களுக்கும் வரும் (பிர. 8:14) என்பதையும் அநீதி செய்பவருக்கு எல்லாம் நன்மையாய்த் தீருகிறதென்பதையும் இவர்கள் கவனித்து ஆராய்கிருர்கள். தேவன் நீதியிலும் நன்மையிலும் அன்பிலும் இரக்கத்திலும் பரிபூரணர் என்பதுவும் இவர்களுக்குத் தெரியும். எனவே இவ்வுலகத்தின் தாறுமாறுகளை சீர்ப்படுத்தும் இன்னெரு காலம் உண்டு என இவர்கள் திட்டமாய் ஒத்துக்கொள்ளுகிருர்கள். லாசரு நன்மையையும் ஐசுவரியவான் தீமையையும் அனுபவிக்கும் காலம் வரும்.

நம்மிலுள்ள பாவத்தை அழித்து நம்மைப் பரிசுத்தமாக்குவதற்காக பரிசுத்த ஆண்டவர் நம்மில் நிறைவேற்றும் கிரியையே நாம் அனுபவிக்கும் பாடுகள் என்று கருதுகிறவர்களும் உண்டு. மாம்சத்தில் பாடுபடுகிறவன் ...பாவங்களை விட்டோய்ந்திருப்பான் (1 பேது. 4:2) என்று பேதுரு அப்போஸ்தலன் கூறியதை இவர்கள் தங்கள் கண்களினுலே கண்டு, பாடுகளினுலும் உபத்திரவங்களினுலும் பழைய மனிதன் பெலங்குன்றி அவனுடைய ஆசை இச்சைகள் தணிந்துவிடுகின்றன என்று உணருகிருர்கள்.

தேவன் நம்மைப் பரலோகத்துக்கு ஆயத்தம் பண்ணுவதும், நம்முடைய பாவ மாம்சத்தை அழிப்பதும், பரிசுத்தமாகுதலைப் பூரணப்படுத்துவதுமே நம்முடைய பாடுகளைக் குறித்த தேவனுடைய நோக்கமெமன அறிகிருேம். தேவன் நம்மை சிட்சியாமலும் உபத்திரவத்தினுல் சீர்ப்படுத்தாமலுமிருந்

தால் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை என்னவாகும்? குறுகிய காலமபோலும் எல்லாம் நமக்கு சுககரமாகவும் அமைதியாகவும் ஆனந்தமாகவுமிருக்குமேயாகில் நாம் உடனடியாக தூக்க மயக்கங்கொண்டு மாம்சத்துக்கும் உலகத்துக்கும் கீழாகவில்லையா? நமக்கு சோதனையில்லையென்றால் நம்முடைய விசுவாசம் எவ்வாறு பரீட்சிக்கப்பட்டு நிலைநிற்க முடியும்? நம்முடைய கண்களுக்கு எல்லாம் மறைக்கப்பட்டு, நாம் உதவியும் பெலனுமிழந்து, உண்மையும் வல்லமையுமுள்ள தேவனை மாத்திரம் சாரும் நிலைக்கு நாம் வரும்போது விசுவாசம் தானாகவே பயிற்சி பெறுகிறது.

நமக்கு வேண்டியதெல்லாம் நாம் அடைந்துகொள்ளும்போதும், நமக்குரிய காரியங்களை நாமே கவனித்துக்கொள்ளும் வேளையிலும் நம்முடைய ஜெப வாழ்க்கை குன்றிப்போகவில்லையா? இடைக்கிடையே தேவனுடைய கோபத்தைக் குறித்து நாம் அறியாதிருந்தால் அவருக்குப் பயப்படுவதெவ்வாறு? பாவத்தை முற்றிலுமாய் நம்மைவிட்டு அழித்துப்போடவோ அல்லது வேண்டும்பொழுதெல்லாம் அதிலிருந்து விடுதலை பெறவோ நம்மால் கூடுமேயானால் நமக்குத் தேவனுடையகிருபை தேவையில்லையே? நாம் வாழ்க்கையில் இழிவை அனுபவியாவிட்டால் நம்மில் தாழ்மை காணப்படமாட்டாதே. என்றாலும் தேவனுடைய சிட்சையைப் பெற்ற பிற்பாடும் நன்மையான காரியங்களில் முன்னேறுவதில் நாம் குறைவுபடுகிறோம் என்பது வருந்தத்தக்கது. அப்படியாயின் சிட்சை இல்லாதிருக்குமேயானால் நம்முடைய நிலை என்னவாகும்? எனவே இவையெல்லாவற்றின் மூலமாகவும் நாம் நன்மையில் வளரவும் பரிசுத்தப்படவும் ஆவிக்குரிய மரணத்திலும் பாவத்தின் அடிமைத்

தனத்திலும் நின்று பாதுகாக்கப்படவும் தேவன் நம்மை சீர்திருத்தும் சிட்சையை அனுப்புகிருர்.

இக்காரணங்கொண்டே முற்காலத்தில் வாழ்ந்த பக்தர்களுக்கும் தற்காலத்தில் வாழும் தேவனுடைய பிள்ளைகளுக்கும் கசப்பும் பாடுகளும் சிட்சையும் தேவை. இது திட்டமான தேவனுடைய ஒழுங்கு என்பதைக் குறிப்பிடவே எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப் பிள்ளைகளாயிருப்பீர்களே என்று வேதம் கூறுகிறது. நீங்கள் தேவனுடைய பிள்ளைகளானுல் உங்களுக்கு சிட்சை திட்டமாய் உண்டு என்பதே இவ்வாக்கியத்தின் கருத்து. நீங்கள் சிட்சை அனுபவியாமல் விருப்பம் போல வாழுவீர்களேயானுல் நீங்கள் தேவனுடைய பிள்ளைகள் அல்லவென்று தெளிவாகிறது.

ஆவிக்குரிய மழலைகளுக்கு சிட்சை தேவையில்லை. அவர்கள் ஆவியாலும் வார்த்தையாலும் நடத்தப்படுகிருர்கள். ஆனுல் அவர்கள் வளர ஆரம்பித்து சோதனைகளை சகிக்கும் பருவம் வந்தபின் அவர்களில் தூக்க மயக்கமும் கவலையீனமும் வருமேயாகில் அவர்களுக்கு சிட்சையுண்டு. புடமிட்டு சுத்தமாக்கப்படத் தேவையில்லாதபடி ஒரு தேவனுடைய பிள்ளை எப்போதும் சுத்தமாகவும் நல்லவனுகவும் வாழ முடியுமென வேதம் ஒரு இடத்திலும் கற்பிக்கவில்லை. பரலோகஞ்செல்ல ஆயத்தப்படுகிறவர்கள் சிட்சையையும் சோதனைகளையும் பிரம்பையும் சகிக்கவேண்டுமென்பது தேவனுடைய மாருத பிரமாணமாகும்.

— —

தூதன் அச்சகம், நியூபோர்ட் தெரு, நாகர்கோவில்

Copies can be had from :

Dr. D. S. Spurgeon, M. Sc

357 - B, Green Street

Nagercoil - 629 001

S. India